ஜூன் 12 – 18, 2005
June 12 - 11, 2005
16.00
28 பக்கங்கள்
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI
வார மலர்



## ஈழத் தமிழருக்கு குரல் கொடுக்கும் வைகோ!

## நெருக்கடிக்குள் தென் இலங்கை அரசியல்

## வடக்கில் மாணவர் எழுச்சி

## புலனாய்வுத்துறைப் போர் வெற்றி யாருக்கு?

# புலனாய்வுத் துறைப்போர்

# வெற்றி யாருக்கு?

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் துப்பாக்கிகள் அமைதியாகின. ஆனால், அரசும் புலிகளும் வெளியே தெரியாமல் உள்ளே ஒரு யுத்தத்தில் முழுவேகத்துடன் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். அதுதான் புலனாய்வுப்போர். இது ஒரு கட்டத்தில் தீவிரமானதாக மற்றம் பெற்றது. அதாவது கடந்த வருட ஆரம்பத்தில் கிழக்கில் ஏற்பட்ட கருணாவின் பிறழ்வு, அதனைப்பயன்படுத்த இராணுவப்பிரிவு மேற்கொண்ட நடவடிக்கைகள் ஆகியவை காரணமாக புலனாய்வுப்போர் உச்ச கட்டத்தை அடைந்தது.

தற்போது இராணுவப் புலனாய்வுத்துறை முழுவேகத்துடன் முடுக்கி விடப்பட்டுள்ளது. அதேவேளை அதன் செயற்பாடுகளுக்கு புலிகள் தரப்பில் இருந்து உடனடியாகவே பதிலடிகள் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

போர் நிறுத்த ஒப்பந்தத்தின் பின் இராணுவப் புலனாய்வுத் துறையில் மிக உயர் பதவிநிலையில் இருந்த ஒருவர் சமீபத்தில் கொல்லப்பட்டிருப்பது இராணுவத் தலைமையை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது. லெப்.கேணல் நிசாம் முத்தலிப் கொலையுண்டது அரச புலனாய்வுத் துறையின் செயற்பாடுகளை மிகப் பெரிய அளவில் முடக்கி விட்டுள்ளது.

தொடரும் நிழல் யுத்தத்தின் உச்சக்கட்ட நிகழ்வுகள் கடந்த இரண்டு மாதகாலமாக தலைநகர் கொழும்பைச் சுற்றி இடம் பெறுவது புலனாய்வு யுத்தம் ஒரு கட்டத்தை தாண்டிவிட்டதையே குறிக்கிறது.

பொலிஸ் குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவைச்சேர்ந்த ஜெயரட்ணம் கொழும்பில் இருந்து கடத்திச் செல்லப்பட்டார். புலிகள் இவரை தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கடத்திச் சென்றுவிட்டனர் என்று இராணுவம் கூறுகிறது. நியூட்டனை விடுவிப்பதற்காக இராணுவத்துடன் பேரம் பேசுவதற்காகவே ஜெயரட்ணம் கடத்தப்பட்டார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு இராணுவப்புலனாய்வு நடவடிக்கையின் செயற்பாடுகளுக்கு முக்கிய நபராகச் செயற்பட்டவர் தான் இராணுவப்புலனாய்வுக் கட்டளைத்தளபதியான முத்தலிப். இந்த நிலையில் தான் கொழும்பு நரஹேன் பிட்டியில் வைத்து விசேட பயிற்சிபெற்ற தாக்குதல் தாரிகளால் முத்தலிப் சுட்டுக்கொல்லப்பட்டார். இந்த அதிரடி ஒப்பரேஷனால் அதிர்ந்து போயுள்ளது இராணுவப்புலனாய்வுத்துறை. புலிகளின் தாக்குதல் பட்டியலில் முதலிடத்தில் இருந்தவர் முத்தலிப் என இராணுவத்தரப்பு கூறுகின்றது.

இராணுவப் புலனாய்வுத்துறையைச் சேர்ந்த முத்தலிப்பின் முக்கியத்துவம் என்ன? அவரின் கடந்த காலச் செயற்பாடுகள் பற்றி ஆராய்வது முக்கியமானதாகும்.

1990களில் புலனாய்வுத்துறையில் இணைந்து கொண்டவர் முத்தலிப். அக்காலகட்டத்தில் ஆனையிறவு கொம்படி பகுதியே யாழ்– வன்னிப்பயணங்களின் ஒரே போக்குவரத்துப் பாதையாக இருந்தது. இப்பகுதியில் அன்று புலிகளின் முக்கியஸ்தர் ஒருவரைக் குறிவைத்து

## முத்தலிப் பற்றிய சில படைத்துறை குறிப்புக்கள்.....



1966ஆம் ஆண்டு திருகோணமலையில் பிறந்த நிஷாம் முத்தலிப் 1987 இல் இலங்கை இராணுவப் படைத்துறையில் லெப்ரினன்ட் ஆக இணைத்து கொண்டு ஐந்தாவது கெமுனுப் படைப்பிரிவில் கடமையாற்றினார். 1990ஆம் ஆண்டு இராணுவப் புலனாய்வுத்துறையில் பணிநிலைப்படுத்தப்பட்டார். 1991 முதல் 1994 வரை வவுனியாவில் புலனாய்வுத் துறை அதிகாரியாகக் கடமையாற்றினார். 1992ஆம் ஆண்டில் கப்டனாகப் பதவி உயர்வு பெற்று பின்னர் இலங்கை இராணுவத் தலைமையகத்தில் பொது அதிகாரிகள் குழாமில் பணியாற்றி 1995ஆம் ஆண்டு ஜூன் 02ஆம் திகதி மேஜராகப்பதவி உயர்வு பெற்றார்.

பின்னர் இராணுவப்புலனாய்வுத் துறையில் பயிற்சிப் பிரிவின் கட்டளை அதிகாரியாக கடமையாற்றினார். இதன் பின் யாழ்.மாவட்ட புலனாய்வுப் பாதுகாப்பு பிரிவின் கட்டளை அதிகாரியாக மூன்றரை ஆண்டுகள் கடமையாற்றினார்.

1997ஆம் ஆண்டு கொழும்பு திரும்பிய முத்தலிப் எம்.ஐ.சி வழி நடத்தல் பணியகத்தில் கடமையாற்றினார். பின்பு 2000ஆம் ஆண்டு முதல் 2004 வரை வவுனியாவில் கடமையாற்றினார். இந்த காலப்பகுதியில் கேணல்.சங்கர் மீது நடத்திய தாக்குதலுக்காக இராணுவத் தலைமை இவருக்கு சிறப்பு பதக்கம் வழங்கியது. இராணுவத்தின் அதியுயர் விருதான 'ரணவிக்கிரம' விருது இவருக்கு வழங்கப்பட்டது. 2004இன் பின் மட்டக்களப்பில் (கருணா பிரச்சினையின் பின்) கடமையாற்றிய இவர் அண்மையில் தான் கொழும்புக்கு இடமாற்றலாகி வந்தார். இக்காலத்திலேயே ஊடகவியலாளர் சிவராம் கொல்லப்பட்டார். கடந்த 31ஆம் திகதி இவர் கொல்லப்பட்ட பின் லெப்.கேணலாக பதவி உயர்த்தப்பட்டார்.

அமெரிக்கா, இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் புலனாய்வுத் துறை சம்பந்தமான சிறப்புப் பயிற்சி பெற்ற முத்தலிப் அமெரிக்காவில் இடம்பெற்ற பயிற்சியில் சிறப்பாக செயலாற்றியமைக்காக தங்கப்பதக்கம் பெற்றார்.

தாம் கடமையாற்றிய தமிழர் தாயகப்பிரதேசத்தில் தமிழர் போராட்டத்தை சிதைப்பதில் முன்நின்றதுடன் பல தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்து சித்திரவதை செய்வதிலும் மிகவும் பிரசித்தமானவர் முத்தலிப்.


அவருக்கு இரு குழந்தைகள் உள்ளன. மனைவியும் இராணுவத்தில் மேஜர் தரத்தில் கடமையாற்றுகிறார்.

---

ஏப்ரல் 20 ஆம் திகதி காலை விடுதலைப்புலிகளின் தமிழீழ தேசியப்புலனாய்வுத்துறைப் பொறுப்பாளரான நியூட்டன் ( நவம்பர் விஸ்கி என்று சங்கேத மொழியில் அழைக்கப்படுவர்) கொழும்புக்கும் கண்டிக்கும் இடைப்பட்ட பகுதியில் வைத்து இராணுவப்புலனாய்வுத் துறையால் கடத்திச் செல்லப்பட்டிருந்தார். அன்றிரவே நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலுக்கு முத்தலிப்பே காரணமாக இருந்தார். எனினும் இத்தாக்குதலில் பொதுமக்களே உயிரிழந்தனர். அச்சமயம் வவுனியாவில் *(1991 – 1994)* கடமையாற்றிக் கொண்டிருந்தார் முத்தலிப்.

இவ்வாறான இவரது நடவடிக்கைகளை அடுத்து கப்டனாக பதவி உயர்த்தப்பட்ட இவர், யாழ்ப்பாணத்திலும் கடமையாற்றினார். யாழ்.புலனாய்வுத்துறை கட்டளை அதிகாரியாக சில ஆண்டுகள் இருந்தார்.

பின்னர் 2000 – 2004 காலப்பகுதியில் வவுனியாவில் கடமையாற்றிய முத்தலிப் வன்னிக்கான புலனாய்வுத்துறை கட்டளைத் தளபதியாகச் செயற்பட்டார். இக்காலத்தில் இராணுவத்தின் ஆழஊடுருவித் தாக்கும் படையணி (L.R.R.P) வன்னிப் பகுதியில் மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளையும் முத்தலிப் வழிநடத்தி வந்தார்.



அந்த வகையில் 2001ஆம் ஆண்டு மே மாதப்பகுதியில் கொக்காவிலில், புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் தமிழ்ச்செல்வனின் மெய்ப்பாதுகாவலர் ஒருவர் உயிரிழந்தார். அதன் பின்பு கடற்புலிகளின் துணைத்தளபதி லெப்.கேணல் கங்கைஅமரன் மீது கனகராயன் குளப்பகுதியில் நடந்த தாக்குதலில் கங்கைஅமரன் உயிரிழந்தார்.

நெடுங்கேணிப்பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் புலிகளின் தளபதிகளான பால்ராஜ், ஜெயம் ஆகியோர் மயிரிழையில் தப்பினர். 2001 செப்டம்பர் 26ஆம் திகதி ஒட்டுசுட்டான் பகுதியில் முத்தலிப்பின் நெறிப்படுத்தலில், இராணுவப்புலனாய்வுப் பிரிவைச்சேர்ந்த வெப்ரினட் சுமதிபால என்பவர் தலைமையில் ஊடுருவிய படையணி நடத்திய கிளைமோர் தாக்குதலில் புலிகளின் மூத்த தளபதியும் புலிகளின் வான்படைத் தளபதியுமான கேணல் சங்கர் (முகிலன்) உயிரிழந்தார்.

புலிகளுக்கு பெரும் சவாலாக மாறிய இப்படையணி கிழக்கிலும் செயற்பட்டது. கிழக்கில் புளொட் மோகன் முக்கிய செயற்பாட்டாளராக இருந்தார். இப்படையணியின் இரகசிய மையம் அத்துருகிரிய மிலேனியம் சிட்டி வீடொன்றில் இருந்து செயற்பட்டு வந்தது. ரணிலின் ஆட்சிக்காலத்தில் இது அம்பலத்துக்கு வந்த பின்னர் ஆழ ஊடுருவும் படைப் பிரிவைச் சேர்ந்த ஒரு சிலரைத் தவிர அனைவரும் கொல்லப்பட்டு விட்டனர்.

இந்த நிலையில் கடந்த 31ஆம் திகதி காலை தனது உத்தியோகபூர்வ வாகனத்தில் புறப்பட்டு நாரஹேன்பிட்டி பொல்ஹேன் கொட வீதிச் சமிக்ஞை விளக்குப்பகுதியில் காத்திருந்த சமயம் முத்தலிப் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் பின் தொடர்ந்து வந்த இரு நபர்களில் ஒருவரே இவரை சுட்டார். துப்பாக்கியுடன் ஒருவர் வருவதை அவதானித்த சாரதி அதனை முத்தலிப்புக்கு தெரிவிக்கவே முத்தலிப் தனது துப்பாக்கியை எடுக்க முற்பட்டார் என்றும், கொலையாளி தனது பெல்ஜியம் தயாரிப்பான எப்.என்.சி ரகத் துப்பாக்கியால் சுட்டுவிட்டு மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றார் என்றும் இராணுவ தகவல்கள் தெரிவிக்கின்றன.

முத்தலிப்பின் உடலில் 14 தோட்டாக்கள் துளைத்திருந்தன என படைத்தரப்புத் தெரிவிக்கின்றது. வழமையாக பாதுகாவலர்கள் சகிதம் வெளியே செல்லும் முத்தலிப் அன்று சாரதியுடன் மட்டுமே புறப்பட்டிருந்தார். இவரின் நடவடிக்கைகள் நீண்ட நாட்களாக தொடர்ச்சியாக அவதானிக்கப்பட்டு வந்திருக்கின்றன.

இந்தச் சம்பவம் குறித்து இதுவரை எவரும் கைதாகவில்லை எனத் தெரியவருகிறது. அத்துடன் கொழும்பில் தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இராணுவம், பொலிஸ் ஆகிய பிரிவுகள் சந்தேகத்துக்கிடமான பகுதிகளை சோதனையிட்டும், தேடுதல் மேற்கொண்டும் வருகின்றன.

முத்தலிப்கொலை குறித்து விசாரிக்க 150 பொலிஸாரைக் கொண்ட விசேட அணி பல பிரிவுகளாக விசாரணைகளை மேற்கொ[illegible] வருகின்றது.

நியூட்டனின் கடத்தலுடன் கொழும்பில் புலிகளின் செயற்பாடுகள் முடங்கும் என எதிர்பார்த்தவர்களுக்கு பலத்த அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. கொழும்பில் புலிகளின் வலையமைப்பு மீண்டும் தீவிரமாக இயங்கத் தொடங்கி இருப்பதையே லெப்.கேணல் முத்தலிப் கொலை படைப்புலனாய்வாளர்களுக்கு எடுத்துக்காட்டியுள்ளது என்று இராணுவ விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

புலிகளின் செயற்பாட்டாளர்களை கொல்லவும், கடத்தவும் தெரிந்த முத்தலிப்புக்கு தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமல் போனது தான் மிகப்பெரிய பரிதாபம்.

-கலின்-


சுடர் ஒளி வாரமலரில்
அடுத்த வாரம் முதல் ஆரம்பமாகிறது!

ஊர்காவற்றுறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.நவரத்தினம் எழுதிய

தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்

(The Fall and Rise of the Tamil Nation)

★ சுதந்திரத்தின் பின் தென் இலங்கை அரசியல்வாதிகளால் நயவஞ்சகத்தனமாக ஏமாற்றப்பட்ட தமிழ்த் தலைவர்கள்.

★ பேரினவாதிகளால் நசுக்கப்பட்ட அஹிம்சைவழிப் போராட்டங்கள்.

★ தமிழ் தேசத்தின் எழுச்சிக்கு வித்திட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம்.

நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம்வரை இடம் பெற்ற முக்கிய அரசியல் நிகழ்வுகளை உள்ளடக்கியது தமிழ்த் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்.

இதன் தொகுப்பு, தொடர் அரசியல் கட்டுரையாக சுடர்ஒளி வாரமலரில் வாரா வாரம் வெளிவரவிருக்கிறது.

# வடக்கில் மாணவர் எழுச்சி!

தமிழர் தாயகத்தின் வட புலத்திலே குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் தமிழீழ மாணவர் எழுச்சி நாள் என்றுமில்லாதவாறு பெரிய அளவில் கொண்டாடப்பட்டுள்ளது.

### யாழ். குடா நாட்டில்

யாழ்ப்பாணத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இருந்து ஆரம்பமான எழுச்சிப் பேரணியில் பெருந்திரளான மாணவர்கள் கலந்து கொண்டனர். பேரணியில் கலந்துகொண்டவர்கள் தலைவர் பிரபாகரனின் உருவப்படத்தைத் தாங்கியிருந்ததுடன் பல்வேறு சுலோகங்கள் அடங்கிய பதாகைகளையும் கொண்டு சென்றனர்.

எழுச்சிபூர்வமான கோஷங்களை எழுப்பியவாறு அணி அணியாக வந்த மாணவர்கள் பேரணியின் முடிவில் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் ஒன்றுகூடினர். எழுச்சிக் கூட்டம் யாழ். இந்து மைதானத்தில் இடம்பெற்றது. இதற்கென மைதானமும் சுற்று வட்டாரமும் மஞ்சள், சிவப்புக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது.

கூட்டத்தில் பொதுச்சுடரினை பொது அமைப்புகளின் ஒன்றியப் பொறுப்பாளர் சுதாஷ், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ்.இளம்பிறையன், தமிழக ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலர் த.பஞ்சலிங்கம் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழ தேசியக் கொடியினை சர்வதேச மாணவர் பேரவையின் பொறுப்பாளர் கண்ணன் ஏற்றி வைத்தார்.

அடுத்து தமிழின விடிவுக்காக தம் இன்னுயிர் ஈர்ந்த மாணவ வீரர்களாகிய பொன் சிவகுமாரன், முரளி ஆகியோரின் உருவப் படங்களுக்கு யாழ். மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் ஆர்வலன், ஈகச்சுடரினை ஏற்றி வைக்க வடமராட்சி அரசியல் துறைப்பொறுப்பாளர் இன்பன், தீவக அரசியல் துறைப் பொறுப்பாளர் நரேன் ஆகியோர் மலர்மாலை அணிவித்தனர்.

அதை அடுத்து மாணவர் எழுச்சி கீதம் இசைக்கப்பட்டதன் பின்னர் தமிழீழ மாணவர் எழுச்சி நாள் பிரகடனம் வாசிக்கப்பட்டது.

### கிளிநொச்சியில்

கிளிநொச்சியிலும் மாணவர் எழுச்சி தினத்தை முன்னிட்டு வீதியெங்கும் மஞ்சள், சிவப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்ததுடன் முக்கிய இடங்களில் ஒலிபெருக்கி மூலம் எழுச்சிக் கீதங்கள் ஒலிபரப்பப்பட்டன. மாபெரும் மாணவர் பேரணியும் இடம்பெற்றது. காலையிலேயே கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இருந்து ஆரம்பமான பேரணி கிளிநொச்சி லெப். கேணல் சந்திரன் பூங்காவைச் சென்றடைந்ததுடன் அங்கு எழுச்சிக் கூட்டமும் இடம்பெற்றது.

### முல்லைத்தீவில்

புதுக்குடியிருப்பு வைத்தியசாலைக்கு முன்பாக ஆரம்பமான பேரணி புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் முடிவடைந்தது. பெருமளவிலான மாணவர்கள் பேரணியில் கலந்து கொண்டனர். மாணவர்களுக்கு எதிரான சித்திர வதைகளைச் சித்திரிக்கும் ஊர்திகள் பல பேரணியில் எடுத்துச் செல்லப்பட்டன.



பேரணி முடிவில் நடந்த எழுச்சிக் கூட்டத்தில் அதிபர். எஸ்.சிவலிங்கம் பொதுச்சுடரினை ஏற்றி வைக்க முல்லைத்தீவு துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வம் தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார். சிறப்புரைகள், கலைநிகழ்வுகள் தொடர்ந்து இடம்பெற்றன.

வவுனியாவிலும் தமிழீழ மாணவர் எழுச்சிநாள் வெகு சிறப்பாக நடைபெற்றதாக அறியமுடிகிறது. தமிழீழ தேசிய தலைவர், முரளி, பொன் சிவகுமாரன் ஆகியோரின் படங்களை தாங்கி பேரணியாகச் சென்ற மாணவர்கள் வவுனியா மத்திய மகாவித்தியாலயத்தில் எழுச்சிக் கூட்டத்தை நடத்தினர்.

### கல்வியில் கண் வைத்த பேரினவாதம்

தமிழர்களை அடக்கி ஒடுக்கி ஆள நினைத்த பேரினவாதம் கல்வி அறிவில் தமிழர்கள் தம்மை விஞ்சி நின்றதைக் கண்டு வெருட்சி அடைந்தது. எப்படியாவது தமிழ் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள், கல்விச் செயற்பாடுகளை குழப்பி அடித்து சிதைவடையச் செய்ய வேண்டும் என்பதில் குறியாக செயற்பட்டதுடன் அதற்கான நடவடிக்கைகளையும் முடுக்கிவிட்டது.

பல்கலைக்கழக வெட்டுப் புள்ளி, இலவச பாடநூல் வழங்குதல், தமிழர் தாயகப் பாடசாலைகளுக்கு கற்றல் உபகரணங்களை வழங்குதல் ஆகியவற்றில் தனது புறக்கணிப்பை தொடர்ந்ததுடன் தமிழரின் மீதான அராஜகத்தையும் கட்டவிழ்த்துவிட்டது.

இவற்றைக் கண்டு கொதித்தெழுந்த மாணவன் பொன்.சிவகுமாரன் தமிழீழ விடுதலைப்போரில் தன்னை இணைத்துக்கொண்டதுடன் விடுதலையின் முதல் வித்தாக நாயக விடுதலைப் போரில் தன்னை ஆகுதி ஆக்கிக் கொண்டான்.

அந்த ஒப்பற்ற மாணவ மாவீரன் மரணமடைந்த தினத்துடன் கூடிய ஒருவார காலப்பகுதி மாணவர் எழுச்சி வாரமாகப் பிரகடனப்பட்டுத்தப்பட்டுள்ளதுடன் அதில் ஒருநாள் மாணவர் எழுச்சி நாளாக தமிழர் தாயகப் பகுதி எங்கும் உணர்ச்சி பூர்வமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

மாணவ மாவீரன் சிவகுமாரன் வழியில் வந்த மாணவர் சமூகம், தமிழின விடுதலைப்போரில் தன்னுடைய பங்களிப்பை நல்கவும் கல்வி கற்ற சமூகத்தின் கருத்தை உலகுக்குப் பறை சாற்றவும் தமது கடமையை-உரிமையை நினைவு கூர்ந்து அதைக் காத்து நிமிர்வுறச் செய்யவும் மாணவர் எழுச்சிநாளை வருடந்தோறும் அனுஷ்டிக்கிறது.

சிங்களப் பேரினவாதம் தமிழ் மாணவர் சக்தியை வேரோடு சாய்க்க முயன்றபோதும், அடிமைகளாக ஆக்கிரமிக்க முற்பட்டபோதும், தமிழ் மாணவர் பரம்பரை ஒரு கையில் புத்தகத்துடனும் மறு கையில் அடிமை விலங்கொடிக்க துப்பாக்கியுடனும் தமிழினம் பலமடைய அரும்பாடுபட்டது.

காலம் காலமாக கல்விக் கொள்கைகளில் பாரபட்சத்தினையும், தரப்படுத்தலையும் கல்வியில் பிரயோகித்தபோது பல தமிழ் மாணவர்கள் உயர் கல்வியை இழந்ததுடன் ஒழுங்காகப் படித்தும் பல்கலைக்கழகங்கள் செல்ல முடியாது விரக்திக்கு உள்ளாகினர். இந்நிலைமை இனியும் ஏற்பட அனுமதிக்க மாட்டோம் என எழுச்சி நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்கள் உறுதி அளித்தனர்.

உலகின் பல நாடுகளில் இடம்பெற்ற விடுதலைப் போராட்டங்களில் மாணவர் புரட்சியினால் பல அரசுகள் கூட கவிழ்ந்துள்ளன. எனவே தமது இன மாணவர்களும் கல்வியைச் செவ்வனே கற்பதோடு நின்று தானுண்டு தனது குடும்பமுண்டு என்ற சுயநல நோக்கில் வாழாது இன விடுதலை, சமூக விடுதலை என்பவற்றை ஏற்படுத்த அரும்பாடுபட வேண்டும்.

எனவே பேரினவாதிகளும் ஆக்கிரமிப்பின் சிறகுகளை அனைத்து மட்டங்களிலும் அகல விரித்தாலும் அவற்றை அறுத்தெறிந்து தடைகளைத் தகர்த்து, தனித்துவத்தைக் காத்து,

**தமிழரசன்**

அறிவியலில் வேகமாக முன்னேறிச் செல்லும் உலகத்தோடு போட்டி போட்டு தமிழர்களின் பெருமையை, கீர்த்தியை தரணி எங்கும் பரப்பி தலை நிமிர்ந்த இனமாக தமிழ் இனம் வாழ ஒவ்வொரு மாணவனும் உணர்ந்து செயற்பட வேண்டியதே காலத்தின் கட்டாயமாகும்.


**நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த**
**“ஒரு ரோஜாவின் காதல்”**
**“முள்ளில்லா ரோஜாக்கள்”**
**வந்துவிட்டன**
**ஏக விநியோகஸ்தர்கள்**
**சகல பூபாலசிங்கம்**
**புத்தகசாலைகளும்**

“ஒரு ரோஜாவின் காதல்” நான்கு குறு நாவல்கள் மூன்று சிறுகதைகள் அடங்கியது
“முள்ளில்லா ரோஜாக்கள்” இரண்டு குறு நாவல்கள் இருபது சிறுகதைகள்



கனடாவின் “செந்தாமரை” பத்திரிகையின் முது எழுத்தாளரும், மறுமலர்ச்சி எழுத்தாளனுமாகிய இரா.தணியின் இரண்டு கதைத் தொகுப்புகள், முன்னூறு பக்கங்களைக் கொண்ட இப்புத்தகங் களின் ஏக விநியோகஸ்தர்கள் பூபாலசிங்கம் புத்தக நிலையத்தாராகும். இலங்கையின் எப்பாகத்திலும் அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். வாசியுங்கள் இன்புறுங்கள். இரா.தணியின் வேறு கதைத் தொகுப்புகள் படிப்படியாக வெளிவரும்.

அன்புள்ள
இரா.தணி.



**விற்பனைக்கு**

புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட G.S.M - Land Phones மொத்தமாகவும். சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. SIM மை பாவித்து எப்பகுதியிலும் உபயோகிக்கலாம்.

தொடர்பு:– 0714 – 555622, 2363263



**பலரது பாராட்டையும் பெற்ற**
**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHOTHERAPY)**

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

**பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்**

**Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)**

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலமும் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

**வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு**

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

**கொழும்பில்...**

யூன் 22 – 27 வரை சந்திக்கலாம் (விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)
New Ahmed Tourist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426. 368427, Cell. 0722 910796
**Hot Line: 0777 569205**

**வவுனியாவில்...**

யூன் 11 - 12 ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
**Hot Line: 0777 569205**

**யாழ்ப்பாணத்தில்...**

யூன் 14 -19
A.S.N. சுற்றுலா விடுதி
39 2/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
**Hot Line: 0777 569205**
Tel No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

# அதிரவைக்கும் கொலைகள்: உள்நோக்கம் என்ன?

மிக விரைவாக போர் தொடங்கும் என்பதற்கு கட்டியம் கூறுவதாக கிழக்கிலும், தலைநகர் கொழும்பிலும் தினமும் பல கொலைகள் என தீவிர மென் யுத்தம் ஒன்று நடந்துகொண்டிருக்கிறது.

கடந்தவருடம் கிழக்கில் கருணா ஏற்படுத்திய பிரச்சினையின் பின்னர் அதனை இராணுவத்தரப்பு தனக்குச் சாதகமான முறையில் பயன்படுத்த முனைந்ததையடுத்து, போர் நிறுத்தம் மெல்லச் செயலிழக்கத் தொடங்கியது. அத்துடன் கொலைகள் தீவிரமடையத் தொடங்கின. இந்தக் கொலைகள் இரண்டு இடங்களை மையமாக வைத்துத் தொடங்கின. முதலாவது கிழக்கு, மற்றையது கொழும்பு.

கொழும்பை மையமாகக் கொண்டு கடந்த வருட பிற்பகுதியில் தொடங்கிய கொலைகள் அண்மைக்காலங்களில் மீண்டும் தீவிரமடையத் தொடங்கியுள்ளன. அண்மையில் இராணுவப்புலனாய்வு அதிகாரி முத்தலிப்பின் கொலையை அடுத்து வடபகுதியில் இருந்து வந்த தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். இறுதியாக வெள்ளவத்தை நெல்சன் பிளேசில் தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கொல்லப்பட்டவர்கள் யாருடன் தொடர்புபட்டவர்கள் என்று தெரியாத நிலையே நீடிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுகிறது. கொழும்பில் தமிழர்கள் மீண்டும் அச்சத்துடன் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. எப்போது? எங்கே? கொலை விழும் என்ற அச்சம் தலைதூக்கியுள்ளது. இவ்வாறான சூழல் வடக்கு – கிழக்கிலும் ஏற்பட்டுவருகின்றது. கொலைகளின் மூலம் மக்களை அச்சமூட்டிவிட சில தரப்புக்கள் விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கருணா குழுவைப் பயன்படுத்தித் தொடங்கிய படுகொலைத் தாக்குதல்களை அடுத்து இப்போது மாறிமாறி இரு தரப்பினரும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கில் கருணாகுழுவைச் சேர்ந்த முக்கிய செயற்பாட்டாளர்கள் கடந்த சில நாட்களில் கொல்லப்பட்டுள்ளனர். வெலிக்கந்தை, வாழைச்சேனை ஆகிய பகுதிகளிலேயே இவர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் கருணாவின் முக்கிய சகாவான மார்க்கனும் அடங்குகிறார் என்று உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர் மீது சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பு வெள்ளவத்தை பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்ட போதும் இவர் காயங்களுடன் தப்பி இருந்தார்.

கருணாகுழு பற்றிய முழுத் தகவல்களையும் புலிகள் திரட்டியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கருணாகுழு முக்கியஸ்தர்களின் புகைப்படங்கள் வெளியிடப்பட்டிருந்தன. (அவை சுடர் ஒளி வாரமலரிலும் வெளிவந்திருந்தன) அண்மையில் கருணா குழுவைச் சேர்ந்த மேலும் சில உறுப்பினர்களின் விவரங்கள் புகைப்படங்களுடன் புலிகள் சார்பு இணையத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ளன.

கிழக்கிலும், கொழும்பிலும் கருணா குழுவினரின் நடமாட்டங்கள் காணப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.



சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞர்களின் சடலங்கள்

கடந்த காலங்களில் படைத்தரப்பால் தமிழர் தாயகப்பகுதிகளிலும் தலைநகர் கொழும்பிலும் வெள்ளைவான் மூலம் பீதியை ஏற்படுத்தி மக்களை போராட்டத்தில் இருந்து அந்நியப்படுத்தும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. தற்போது தொடர்ச்சியான கொலைகள் மூலம் மக்களை பதற்றத்துக்குள்ளாக்கிவிட படைத்தரப்பு முயல்வதாக தமிழ்த்தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

நாளுக்குநாள் அதிகரிக்கும் இக்கொலைகள் மிக விரைவில் ஒரு முழுப்போருக்கான முன்னறிவித்தலே என்று சில படை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். மெல்ல மெல்ல ஒரு போர்ச்சூழலை ஏற்படுத்தவே கொலையாளிகள் விரும்புகின்றனர்.

இவ்வாறான நிலையில் தான் படைத்தரப்பு போருக்கேற்ற முறையில் பிரசாரங்களையும் முன்னெடுத்து வருகின்றது. அண்மையில் திருகோணமலையில் புலிகள் விமானத்தளம் ஒன்றை அமைத்து வருவதாக கூறியிருப்பதும் அவ்வாறானதே எனவும், ஏற்கனவே திருமலையில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் பொருளாதார தடைகளை ஏற்படுத்தியுள்ள படைத்தரப்பு மேலும் அதை இறுக்கும் நோக்குடன் இவ்வாறான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார்.

அதேவேளை புலிகளின் தளபதிகள் திருமலை செல்வதற்கான பயண ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பதில் அரசு பின்னடிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதன் மூலகாரணம் போர் ஒன்றை படைத்தரப்பு மிகவேகமாக திணிப்பதில் தீவிரம் காட்டுவதன் வெளிப்பாடே எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே புலிகளின் விமானப்படை குறித்து சர்வதேச மட்டத்தில் பிரசாரங்களை மேற்கொண்டு வரும் அரசதரப்பு உள்நாட்டிலும் உளவியல் போர் ஒன்றை ஏற்படுத்துவதில் தீவிரம் காட்டி வருகிறது.

- கே.பி -

மீண்டுமொரு 1977, 1983 கலவரங்களை உருவாக்கவே சிங்களப் பேரினவாதிகள் விரும்புகின்றனர். இது தெட்டத்தெளிவாகத் தெரிகிறது என்று கூறுகிறார்கள் அரசியல் ஆய்வாளர்கள்.


அண்மைய கொழும்புக் கொலைகள், கொழும்புக்கு தமிழர்களின் வருகையைக் கட்டுப்படுத்துவதுடன் தமிழர்களின் இருப்பையும் கேள்விக்குறியாக்கும் நோக்கம் கொண்டவை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான கொலைகள் தொடரும் பட்சத்தில் உண்மையான களநிலமை மிக விரைவில் மாற்றமடைந்து போர் ஆரம்பிப்பது தவிர்க்க முடியாதது என்பதும் அது பயங்கரமாக இருக்கும் என்பதும் உறுதி.

# செவ்வாய்க் கிரகத்தில் மனிதன் வாழ...

செவ்வாய்க் கிரகம் குறித்து விண்வெளி ஆய்வாளர்கள் தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். பூமிக்கு அடுத்தபடியாக மனிதன் வாழ ஏதுவாக சில கால நிலைகள் அங்குக் காணப்படுவதாக முதலில் தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து செவ்வாய்க் கிரக ஆராய்ச்சி சூடு பிடித்தது. அமெரிக்கா உட்பட பல ஐரோப்பிய நாடுகள் தொடர்ந்து செவ்வாய்க் கிரக ஆராய்ச்சியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. அமெரிக்க விண்வெளி ஆய்வுமையமான நாசா அனுப்பிய ரோவர் விண்கலம், செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் இருந்ததற்கான சாத்தியக் கூறுகளை உறுதி செய்தது. இதையடுத்து செவ்வாய்க் கிரகம் பற்றிய ஆராய்ச்சி சூடுபிடித்துள்ளது.


இந்நிலையில், செவ்வாய்க் கிரகத்தில் மீதேன் இருப்பதை சமீபத்திய ஆய்வுகள் உறுதி செய்துள்ளன. அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசாவின் மூன்றாவது ஆய்வுக்குழு நடத்தி முடிந்த ஆய்வில் இது தெரியவந்துள்ளது. அதுபோலவே செவ்வாய்க் கிரகத்தில் சில நுண்ணுயிரிகளும் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.



அமெரிக்க விண்வெளி அமைப்பின் ஒரு பிரிவான கோள் அறிவியல் அமைப்பு, செவ்வாய்க் கிரகம் குறித்த விரிவான ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. இந்த ஆய்வுத் திட்டத்தில் பணியாற்றி வரும் மைக்கேல் மும்மா என்ற விஞ்ஞானி "செவ்வாய்க் கிரகத்தில் மீதேன் இருப்பதை 99 சதவீதம் உறுதி செய்துவிட்டோம். இது எந்த வகையான மீதேன் என்பது குறித்து ஆய்வு செய்து வருகிறோம். மீதேன் என்பது ஹைட்ரோ கார்பன் மூலக்கூறு இணைந்தது. இதில் ஒரு கார்பனும், நான்கு ஹைட்ரஜன் அணுவும் காணப்படும். இது எளிதில் அழியக்கூடியது. அதேபோல் அல்ட்ரா வயலட் போன்ற ஒளிக் கதிர் பட்டால்கூட இந்த மூலக்கூறு உடைந்து விடக்கூடியது" என்று கூறுகிறார்.

மீதேன் இருப்பதால் செவ்வாய்க் கிரகத்தில் இரண்டு விதமான மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர். மீதேன் வாயு காரணமாக ஜியோ தெர்மல் வேதிமாற்றம் ஏற்பட்டு மஞ்சள் கற்கள் உருவாகும். அதேபோல் கடலின் அடியில் காணப்படும் உறைந்த தண்ணீர்க் கட்டிகள் தோன்றலாம் என்றும் விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

அதுபோலவே செவ்வாய்க்கிரகத்தில் உறைந்த நிலையில் தண்ணீர் இருப்பதாக ஏற்கனவே உறுதி செய்யப்பட்டுள்ளது. இதேபோல் மீதேன் காரணமாக மீதேன்ஜென் என்ற பக்டீரியாக்கள் உருவாகியிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.



ஆனால் இதனை உறுதி செய்ய முடியவில்லை. இதுகுறித்து வாஷிங்டன் கத்தோலிக்க பல்கலைக்கழகப் பேராசிரியரும், செவ்வாய்க் கிரகம் குறித்த ஆய்வு செய்யும் ஒரு குழுவின் தலைவருமான விளாடிமிர் கிரஸ்னோபோஸ்கி, "பக்டீரியா இருப்பது உறுதி செய்யப்பட்டால், செவ்வாய்க் கிரகம் குறித்த ஆராய்ச்சியில் பெரிய முன்னேற்றமாக அது அமையும். மனிதன் வாழத் தகுந்த கிரகமாக செவ்வாய் இருக்கிறதா என்பதை எங்களது நீண்டநாள் ஆராய்ச்சி மூலம் பக்டீரியா கண்டுபிடிக்கப்பட்டால் எங்கள் ஆய்வுக்கு பெரும் ஊக்கமாக அமையும்" என்கிறார். ஐரோப்பிய விண்வெளி ஏஜென்சியின் செவ்வாய் ஆய்வுத் திட்டமும் மீதேன் இருப்பதை உறுதி செய்துள்ளது. இதேபோல் ரோம் நகரைச் சேர்ந்த இயற்பியல் மற்றும் கிரகங்களுக்கிடையிலான அறிவியல் நிறுவனமும் செவ்வாயில் பல பகுதிகளில் மீதேன் இருப்பதற்கான சான்றுகளைச் சேகரித்துள்ளது.

அதேபோல் செவ்வாயின் உள்பகுதியில் உறைந்த நிலையில் தண்ணீர் இருப்பதையும் அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். இந்த ஆய்வுகள் வெற்றி பெற்றால் செவ்வாய்க் கிரகத்தில் மனிதனை குடியேற்றும் திட்டம் நிறைவேறும் நாள் வெகு தொலைவில் இல்லை.

# சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களும்

# ஜனாதிபதியின் இக்கட்டான நிலையும்

## பொதுக்கட்டமைப்புக் குறித்து சோதிடர்களுடன் ஆராய்வு

தமிழ் மக்களது உரிமைப் போராட்டத்தின் நியாயத்தை சர்வதேச சமூகம் அங்கீகரித்து, அவர்களின் பிரச்சினைகளுக்கு அமைதியான வழியில் தீர்வு காணப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது.

ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணங்களுக்காக பொதுக்கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதில் ஆர்வம் காட்டி வருகிறார். இவற்றைப் பொறுத்துக் கொள்ள முடியாத சிங்களப் பேரினவாதம் வீறுகொண்டு எழுந்துள்ளது மட்டுமன்றி தமிழ் மக்களுக்கு எதிராக சொல்லாலும் செயலாலும் தாக்குதல்களைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறது.

இந்த தாக்குதல்கள் எப்படி நடத்தப்படுகின்றன என்று இங்கு பார்ப்போம்.

### நிலைமையை மோசமாக்கும் புத்தர் சிலைகள்

திருமலை சிலைவிவகாரம் தணிவதற்குள் வவுனியாவிலும் புத்தர் சிலை பற்றிய சர்ச்சை ஒன்று எழுந்துள்ளது. ஓமந்தை பிள்ளையார் ஆலயப்பகுதியில் வைக்கப்பட்ட புத்தர் சிலையாலேயே இந்தச் சர்ச்சை எழுந்துள்ளது.

இந்த இடத்தில் பாரம்பரியமாகவே பௌத்த ஆலயம் இருக்கிறது என்ற வாசகமும் சிங்கள மொழியில் எழுதப்பட்டுள்ளதுடன் இராணுவத்தினர் அந்தச் சிலைக்கு பாதுகாப்பும் அளித்து வருகின்றனர். ''இதில் யாரும் கை வைக்கக்கூடாது. அப்படி வைத்தால் பார்த்துக் கொள்வோம்'' என்றும் இராணுவத்தினர் ஓமந்தை வாசிகளை மிரட்டி உள்ளனர்.

இது மட்டுமன்றி தமிழ்மக்கள் எங்கெல்லாம் செறிந்து வாழ்கிறார்களோ அங்கு எல்லாம் இப்போது புத்தர் சிலைகள் திடீரென இருப்புக் கொள்கின்றன.

தமிழர் தாயகப்பகுதிகளை இவ்வித ஆக்கிரமிப்பின் மூலம் தமக்கே உரியவை என்று கொண்டாடி அந்தப் பகுதிகளில் தமிழ் மக்களின் இருப்புக்கே வேட்டுவைக்க ஆயத்தமாகும் சிங்களப் பேரினவாதத்தின் காட்டுமிராண்டிச் செயல்களே இவை என்று எண்ணத் தோன்றுகிறது.

### சட்டமா அதிபர்மீது ஹெல உறுமய பார்ச்சல்

இது மட்டுமா? சட்டமா அதிபர் கமலசபேசன் மீதும் சிங்களப் பேரினவாதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளில் ஒன்றான ஹெல உறுமய பாய்ந்து இருக்கிறது.

''திருகோணமலை புத்தர்சிலை விவகாரத்தில் சட்டமா அதிபர் பௌத்த மதவிரோதியாகச் செயற்படுகிறார். அவருக்கு எதிராக அரசமைப்புச்சபையில் முறைப்பாடு செய்ய உள்ளோம். அவரை நம்புவதற்கு நாம் தயாரில்லை'' இப்படி கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் ஹெல உறுமவின் தேசிய அமைப்பாளர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சட்டமா அதிபர் ஒரு தீவிர புலி ஆதரவாளர் என்றும் அவர் இலங்கையின் சட்டமா அதிபரா அல்லது எதிர்கால தமிழீழத்தின் சட்டமா அதிபரா என்பது புரியவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

சிங்கள பேரினவாதம் இந்த நாட்டின் உயர் பதவிகள் தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்களால் அலங்கரிக்கப்படுவதை அங்கீகரிப்பதில்லை.

முன்னாள் பொலீஸ்மா அதிபர் ஆனந்தராஜா பதவி ஏற்ற குறுகிய காலத்துக்குள் ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற கட்சிகள் அவருக்கு எதிராகத் தொடுத்த தீவிர போரின் விளைவாக அவர் தமது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டி ஏற்பட்டதை தமிழ் மக்கள் இன்னும் மறந்துவிடவில்லை.

தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளில் ஹெல உறுமயவுடன் தோளோடு தோள் நின்று ஜே.வி.பி. செயற்படுவது பகிரங்க இரகசியம்.

ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும் தேசப் பற்றுள்ள தேசிய இயக்கத்தின் முக்கியஸ்தருமான விமல் வீரவன்ச என்ன கேட்கிறார் தெரியுமா?

''விடுதலைப்புலிகளின் உறுப்பினர் கௌசல்யன் கொலைக்குக் கண்டனம் தெரிவித்த மேற்குலக நாடுகளும் அதன் பிரதிநிதிகளும் இன்று மேஜர் முத்தலிப் கொலை செய்யப்பட்டிருப்பது பற்றி மௌனமாக இருப்பது ஏன்?'' இதுதான் அவரது கேள்வி.




அத்துடன் நின்றுவிடாது சர்வதேச சமூகம் புலிகளுக்குச் சார்பானதாகவே நடந்து கொள்கிறது என்றும் சர்வதேச சமூகத்தை சாடி உள்ளார்.

### சர்வதேச சமூகத்தின் ஆதரவு

ஆம், சர்வதேச சமூகம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சார்பாக அல்ல, தமிழ் மக்களது உரிமைப் போராட்டத்தின் யதார்த்தத்தினை இப்போது தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளதால் அவர்களுக்கு சார்பாக நடந்து கொள்வதைத்தான் அதன் அண்மைக்கால நகர்வுகளில் இருந்து பார்க்கக் கூடியதாக உள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம், மற்றும் புனரமைப்புப் பணிகளை முன்னெடுப்பதற்காக இலங்கை அரசு விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு ஒன்றை விரைந்து உருவாக்குவது அவசியமானது என ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்துக்கான ஐ.நா. விசேட தூதர் பில் கிளிண்டன் ஐ.நாவுக்கு தெரிவித்துள்ளார்.

இது விடயமாக ஜே.வி.பி, மற்றும் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. ஆகியவை கொண்டுள்ள நிலைப்பாடு குறித்து அவர் தனது கவலையையும் வெளியிட்டுள்ளார்.

அதுமட்டுமல்ல, ஆழிப்பேரலை நிவாரணத்தை தமிழருக்கும் சமமாகப் பங்கிட வேண்டும் என்று அமெரிக்க செனட் சபையும் வலியுறுத்தி உள்ளது. நிவாரண நிகழ்ச்சித்திட்டங்கள் விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் நடைபெறும் சமாதான முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும் என்றும் அது கூறியுள்ளது.

அமெரிக்காவில் உள்ள மனித உரிமைகளுக்கான அமைப்பு இன்னும் ஒரு படிமேலே சென்று பிந்துனுவெவ சந்தேக நபர்களை விடுதலை செய்த விடயத்தில் இலங்கை நீதிமன்றம் பக்கச்சார்பாக நடந்துள்ளதாக குற்றம் சாட்டி உள்ளதுடன் விடுதலைப்புலிகளின் மனித உரிமைகளைப் பாதுகாக்க இலங்கை அரசாங்கம் தவறிவருவதாகவும் கவலை தெரிவித்துள்ளது.

### இந்திய விஜயம்

அண்மையில் மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா சென்று திரும்பிய ஜனாதிபதி, புதுடில்லியில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது இலங்கையும் இந்தியாவும் பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றில் கூட்டாக கைச்சாத்திடவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அத்துடன் நாடு திரும்பியதும் இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படும் என்றும் அறிவித்தார்.

இது சம்பந்தமாக மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை.கோ பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து தமது அதிருப்தியை வெளியிட்டார். இதற்கு பதில் அளித்த மன்மோகன் சிங் இலங்கையுடன் இந்தியா எவ்வித இராணுவ கூட்டு ஒப்பந்தங்களையும் செய்யாது என்று வாக்குறுதி அளித்திருக்கிறார்.

மேலும் புலிகளுடன் பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கும் இந்தியா பச்சை விளக்குக் காட்டியிருக்கிறது என்ற விஷயமும் எல்லோருக்கும் தெரிந்ததே.

### சோதிடரை நாடிய ஜனாதிபதி

இவ்வாறு சர்வதேச சமூகம் தமிழ் மக்களின் நிலை கண்டு அவர்கள் மீது அனுதாபம் கொண்டுள்ளதை உணர்ந்திருப்பதால்தான் பொதுக்கட்டமைப்பை உருவாக்கியே தீருவேன் என்று அடித்துக் கூறுகிறார் ஜனாதிபதி.

இவ்வாறு அடித்துக் கூறுவதுடன் நின்றுவிடாது பொதுக்கட்டமைப்புக்கான ஒப்பந்தத்தில் விடுதலைப்புலிகளுடன் கைச்சாத்திடுவதற்கான முகூர்த்த நாளையும் சோதிடர்களுடன் ஆலோசித்து நிச்சயப்படுத்திவிட்டாராம்.

ஜூன் 12 ஆம் திகதி அல்லது 15 ஆம் திகதி கைச்சாத்திடலாம் என்று ஜோதிடர்கள் ஜனாதிபதிக்கு ஆலோசனை கூறி இருக்கின்றார்களாம். இன்னொரு சோதிடர் ஜூன் மாதம் 3 ஆம் திகதிக்குப் பின்னர் பொதுக் கட்டமைப்புக்கு எதிராக எழுந்துள்ள பேரலைகள் யாவும் அடங்கிப் போகும் என்றும் ஜனாதிபதிக்குச் சொல்லி இருக்கிறாராம். இன்னும் சில நாட்கள் தானே! என்ன நடக்கிறது என்று பொறுத்திருந்து பார்ப்போமே.

இவ்வாறான முயற்சிகள் எல்லாம் ஒரு பக்கத்தில் நடைபெற்றுக் கொண்டு இருக்க இன்னொரு பக்கத்தில் அரசு – புலிகளின் உறவைச் சீர்குலைக்கும் முயற்சிகளும் தொடருகின்றன. அமைதியை விரும்பாத, சமாதானத்துக்குள் எதிரான சக்திகள் – அரசாங்கத்துக்கு இருந்து கொண்டு தமது கைவரிசையைக் காட்டிக் கொண்டு இருக்கின்றன.

### ஹெலிக்கொப்டர் மறுப்பு

விடுதலைப்புலிகளின் கிழக்குப் பிராந்திய தளபதிகள் வன்னியில் இருந்து திரும்பிச் செல்வதற்கான ஹெலிக்கொப்டர்களை வழங்குவதற்கு இந்த தீய சக்திகள் மறுப்புத் தெரிவித்து இருக்கின்றன.

திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல்சொர்ணம், மட்டு. அம்பாறை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பானு ஆகிய இருவரும் கிளிநொச்சியில் இருந்து திரும்பி செல்வதற்கு – இன்னும் ஹெலிக்கொப்டர் வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை.

கறுத்தபாலத்தில் இருந்து ஓமந்தைக்கும் பின்னர் ஓமந்தையில் இருந்து கறுத்த பாலம் வரைக்கும் போராளிகள் தரைவழியாக பயணம் மேற்கொள்ள பாதுகாப்பு வழங்குமாறு கண்காணிப்புக் குழு ஊடாக மேலிடத்துக்கு விடுக்கப்பட்ட கோரிக்கையும் நிராகரிக்கப் பட்டுவிட்டதாம்.

இத்தகைய தான்தோன்றித்தனமான செயல்களினால் தமிழீழ விடுதலைப் புலிகள் விசனம் அடைந்துள்ளனர்.

கடந்த 3 ஆம் திகதி உலக வங்கி மற்றும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் கிளிநொச்சிக்கு செல்வதற்கு திட்டமிட்டு இருந்தனர். இந்த விஜயமும் பிற்போடப்பட்டு இருப்பதாக கொழும்பில் திடீரென அறிவிக்கப்பட்டது.

பேரினவாதத்தின் இத்தகைய செயற்பாடுகளைப் பார்க்கும் போது பொதுக்கட்டமைப்பு சம்பந்தமான ஜனாதிபதியின் ஆர்வமும் பேரினவாதிகளின் செயற்பாடுகளால் அணைந்துவிடுமா என்று தான் கேட்கத் தோன்றுகிறது.

## யாழ்ப்பாண இளைஞர் கிரீஸில் மர்ம மரணம்!

யாழ்ப்பாணம் நவாலியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கிரீஸ் நாட்டில் மர்மமான முறையில் உயிர் இழந்துள்ளார்.

வீட்டில் இருந்து காணாமல் போன இந்த இளைஞன் கடல் பகுதியில் நீருக்கு அடியில் கப்பல் நங்கூரம் ஒன்றுடன் சேர்த்து பிணைக்கப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார் என்று தகவல் கிடைத்திருக்கிறது.

## எரிபொருட்களின் விலைகள் மீண்டும் உயர்ந்தன

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருட்களின் விலைகளை மீண்டும் அதிகரித்து உள்ளது. இந்த விலை அதிகரிப்புக்கு அமைய புதிய விலைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

லங்காபெட்ரோல் 90 ஒக்ரேன் – 80.00 ரூபா
லங்காபெட்ரோல் 95 ஒக்ரேன் – 83.00 ரூபா
லங்கா ஆட்டோ டீசல் – 50.00 ரூபா
லங்கா சுப்பர் டீசல் – 55.30 ரூபா
மண்ணெண்ணெய் – 30.50 ரூபா

## டெங்கு பரவாமல் தடுக்க புதிய சட்டம்

நுளம்பு பெருகுவதற்கு வாய்ப்பாக தம்மைச் சுற்றி உள்ள பகுதிகள் மாசடைவதற்குக் காரணமாக இருப்பவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களிடம் இருந்து மிகக் கூடுதலான தண்டப் பணம் அறவிடுவதற்கான சட்ட மூலம் ஒன்று விரைவில் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட இருக்கிறது.

இதற்கான நடவடிக்கைகளில் சுகாதார அமைச்சு தீவிரமாகச் செயற்பட்டுவருகிறது. டெங்கு பரவுவதை கூடுமானவரை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்பதே இந்தச் சட்ட மூலம் சமர்ப்பிக்கப்படுவதன் நோக்கமாகும்.

புதிய சட்டத்தை இரண்டு மாதங்களுக்குள் அமுலாக்க இருப்பதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

தற்போது அமுலில் உள்ள 1,000 ரூபா தண்டப் பணத்தை 25000 ரூபாவாக அதிகரிப்பதற்கு அமைச்சு ஆலோசித்து வருகிறது.

## அதிரடிப் படையினர் தேடுதல் வேட்டை

திருகோண மலையில் உள்ள திருக்கோவிலில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் பணிமனையில் விசேட அதிரடிப்படையினரும் சிறிலங்கா கண்காணிப்பு குழு அதிகாரிகளும் கூட்டாக தேடுதல் வேட்டை நடத்தினர்.

ஆரம்பத்தில் இவ்வாறு தேடுதல் நடத்தப்படுவதற்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகளின் பிராந்தியத் தலைவர் அலிமாஸ்டர் தனது ஆட்சேபனையைத் தெரிவித்தார்.

திருகோணமலையில் தற்போது நிலவும் பதட்ட நிலையைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் பணிமனைகள் அனைத்தும் சோதனையிடப்படும் என்று விசேட அதிரடிப் படையினர் தெரிவிக்கின்றனர்.

## அரியாலையில் காணாமல் போனவர்களின் அடையாள அட்டைகள்

1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ்.குடாநாட்டில் படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமல் போன பலரது தேசிய அடையாள அட்டைகள் அரியாலை மத்தியில் உள்ள வீடொன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இப்பகுதி படையினரால் அதிஉயர் பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு தான், காணாமல் போனவர்கள் என அறிவிக்கப்பட்ட பலரின் அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

## கைக்குண்டு வீச்சு

மட்டக்களப்பு மாவட்ட ஈ.பி.டி.பி அமைப்பாளர் கந்தையா அருமைலிங்கத்தின் இல்லத்தின் மீது இனந்தெரியாத நபர்கள் கைக்குண்டு வீசி உள்ளனர். கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு ஒன்பது மணி அளவில் இச் சம்பவம் இடம் பெற்றது.

மட்டக்களப்பு – கல்முனை வீதி கல்லடியில் உள்ள அவரது இல்லத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் போது வீட்டில் இருந்த எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

## நாட்டுக்கோர் நல்லதம்பி

கரு: வித்தகன் உரு: சசி



சுடர் ஒளி
ஜூன் 12 – 18, 2005
85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு–14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com

## சரித்திரம் திரும்புகிறது

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்காக புலிகளுடன் சேர்ந்து பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது என்ற முடிவுக்கு ஜனாதிபதி வந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், அரசைக் கவிழவிடாது எப்படி இதனைச் செயற்படுத்த முடியும் என்பதே அவர் முன் இன்று உள்ள பிரச்சினை.

பொதுக்கட்டமைப்பை தாம் உருவாக்குவதாக ஜனாதிபதி சர்வதேச சமூகத்துக்கு உறுதி அளித்துவிட்டார். இனி அவர் எப்படியும் அமுல் செய்தே ஆகவேண்டும்.

அரசின் முக்கிய பங்குதாரர்களான ஜே.வி.பியை சமாளிக்க வேண்டும். ஹெல உறுமயவின் எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டும். இவை எல்லாவற்றையும் சமாளித்து பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுவிட்டால் போதாது. அதனை புலிகளுடன் இணைந்து நியாயமான முறையில் அமுல் செய்ய வேண்டும்.

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்திவிட்டால் சமாதான முயற்சிகளில் தற்போது இருந்துவரும் முட்டுக்கட்டையை அகற்றி விடலாம் என்று சர்வதேச சமூகம் கருதுகிறது.

ஆனால், இந்த விவகாரத்தில் அரசாங்கம் காலம் தாழ்த்தத் தாழ்த்த பேரினவாதிகளின் கையே ஓங்கி வருகிறது. பொதுக்கட்டமைப்புத் திட்டத்தை அமுல் செய்ய இயலாத அளவுக்கு நெருக்கடி அதிகரித்துவருகிறது.

ஆழிப் பேரலை அனர்த்தம் ஏற்பட்டு ஐந்து மாதங்கள் கடந்து விட்டன. பொதுக்கட்டமைப்பை உருவாக்கிவிட்டால் வடக்குக் கிழக்கு தனிநாடாகிவிடும் என்று சிங்கள மக்களை நம்பவைக்கும் விதத்தில் தென்னிலங்கையில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய கட்சிகளே இதில் முன்னணியில் இருந்து வருகின்றன.

பொதுக்கட்டமைப்பை எதிர்த்து கண்டி தலதா மாளிகைக்குள் ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார். இவருக்கு ஆதரவாக ஹெல உறுமயவின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட 20 பேர் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

திருமலை புத்தர் சிலை விவகாரத்திலும் ஹெல உறுமயவே பின்னணியில் நின்று செயற்படுவது தெரிகிறது. புத்தர் சிலை அகற்றப்பட்டால் தீக்குளிக்கப்போவதாக பிக்குகள் அச்சுறுத்தி உள்ளனர்.

புத்தர் இந்துவாகப் பிறந்தவர். ஆனால், ஞானோதயம் பெற்று எல்லோருக்கும் பொதுவானவர் ஆனார். இரத்த ஆறு ஓடுவதைத்தடுத்தார். ஆனால், புத்தரை காரணமாக வைத்து காடையர் கூட்டம் இரத்த ஆறு ஓடும் விதத்தில் செயற்படுகிறது.

1956 ஆம் ஆண்டுக்கு நாடு மீண்டும் திரும்பிக்கொண்டிருக்கிறது. ஜனாதிபதியின் தந்தையான காலஞ்சென்ற எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க பௌத்த பிக்குகளினதும் பேரினாவதிகளினதும் ஆதரவுடனேயே ஆட்சியைப் பிடித்தார்.

ஆனால், நிலைமையை ஒரு வருடத்துக்குள் உணர்ந்து இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான ஒப்பந்தம் ஒன்றை அவர் தமிழரசுத் தந்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகத்துடன் செய்து கொண்டபோது அவரை பதவிக்கு கொண்டு வந்த அதே சக்திகளே அவரின் வாழ்வுக்கு முடிவு கட்டின.

தற்போது நாட்டில் இடம்பெற்று வரும் சம்பவங்கள் சரித்திரம் மீண்டும் திரும்புவதையே காட்டுகிறது.

ஜனாதிபதியின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பிக்குகளினதும், பேரினவாதிகளினதும் ஆதரவுடனேயே பதவிக்கு வந்தது. தற்போது அதே சக்திகளே ஜனாதிபதிக்கு நெருக்கடியைக் கொடுத்துவருகின்றன.

பேரினவாதிகளுக்கும் பௌத்த மத தீவிரவாதிகளுக்கும் ஜனாதிபதி அடிபணியும் நிலைமை ஏற்பட்டால் சரித்திரம் மீண்டும் திரும்பவே செய்யும்.

# நெருக்கடிக்குள் தென் இலங்கை அரசியல்


சந்திரிகா

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்காக புலிகளுடன் சேர்ந்து அரசு மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ள பொதுக்கட்டமைப்புத் திட்டம் தொடர்பில் தென்னிலங்கையில் பெரும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகள் தொடர்பில் சர்வதேச சமூகம் கொடுத்து வந்த கடுமையான அழுத்தம் காரணமாகவும், உள்ளூர் நெருக்கடிகளை சமாளிக்க முடியாது சிங்கள அரசு திணறுவதாலும் முதலில் முரண்டு பிடித்த சந்திரிக்கா அரசு இப்போது இறங்கி வந்துள்ளது போல் தெரிகிறது.

இந்த நிலையில்தான் தற்போதைய அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. பொதுக்கட்டமைப்பு விவகாரம் தொடர்பில் அரசின் பங்காளிக்கட்சியான ஜே.வி.பியின் எதிர்ப்பு நடவடிக்கை காரணமாக கூட்டமைப்பு அரசாங்கமே ஆட்டம் காணும் நிலை ஏற்பட்டுள்ளது.

### ஜனாதிபதியின் நகர்வுகள்

இந்த நிலையைத் தடுக்க ஜனாதிபதி சில நகர்வுகளை மேற்கொண்டார். அதில் முதலாவதாக அமைந்தது அவரது இந்திய விஜயம். இந்த விஜயத்தின் மூலம் அவர் இந்தியாவின் ஆதரவைப் பெற முயற்சித்துள்ளார். இதன் மூலம் இந்தியா பொதுக்கட்டமைப்புக்கு எதிராக நிற்பதை தடுப்பதும், தென்னிலங்கையில் கூச்சல் போடும் சக்திகளை அடக்குவதும் அவரது நோக்கம் ஆகும். (ஜே.வி.பியை தற்போது இந்தியாவே ஆட்டுவித்து வருவதாகச் சொல்லப்படுகிறது.)

அவர் மேற்கொள்ள முயன்ற இன்னொரு நகர்வு என்னவென்றால் பிரதான பௌத்த பீடங்களான அஸ்கிரிய மற்றும் மல்வத்தை ஆகியவற்றுடன் பேசி அவற்றின் ஆதரவைப் பெற்றுக்கொள்வதே. அதன் மூலம் கண்டியிலும், தென்னிலங்கையிலும் பௌத்த பிக்குகள் மேற்கொண்டுவரும் இனவாதப் போராட்டங்களை சமாளிக்க முடியும் என சந்திரிக்கா நம்புகிறார்.

இவ்வாறான அரசியல் காய் நகர்த்தல்கள் மூலம் அரசியல் எதிரிகளையும் சேர்த்து ஓரங்கட்டி விட ஜனாதிபதி நினைக்கிறார். பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் புலிகளையும் ஒரு வழிக்குக் கொண்டு வரலாம் என்றும் ஜனாதிபதி கணக்குப் போடுகிறார் போலும்.

எனினும் அதற்குள் நடக்கப்போகும் அரசியல் கட்சி மாற்றங்கள் ஜனாதிபதியை தடம்புரள வைத்துவிடக்கூடும் எனவும் சொல்லப்படுபடுகிறது.

ஜனாதிபதி எந்த முடிவை எடுத்தாலும் இன்றைய நிலையில் அவருக்கு நெருக்கடி என்பது தவிர்க்கமுடியாததாகும்.

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தினால் ஜே.வி.பி வெளியேற நேரிடும். அதனால் பொதுத் தேர்தல் ஒன்றுடன் சேர்த்தே ஜனாதிபதித் தேர்தலும் வரலாம்.

இதற்கு எல்லாம் மாற்று வழியாக ஜனாதிபதியிடம் இருப்பது ஒன்றே ஒன்றுதான். அதுதான் யுத்தம். அதுவும் பெரிய நெருக்கடிகளைத் தோற்றுவிக்கும். அது இலங்கையின் பொருளாதாரத்தை நாசப்படுத்துவதுடன் மக்களின் வாழ்க்கையையும் சின்னாபின்னப்படுத்தும்.

இன்றைய அரச கூட்டமைப்பில் இரு வழிகளில் ஜனாதிபதி சந்திரிக்கா தற்போது நெருக்கடிகளைச் சந்திக்கிறார். 1.ஜே.வி.பி. 2. தனது கட்சி முக்கியஸ்தர்கள்.

தனது கட்சிக்குள் இருந்துகொண்டு பொதுக்கட்டமைப்பை தீவிரமாக எதிர்க்கும் அங்கத்தவர்களை ஓரங்கட்ட ஜனாதிபதி முடிவெடுத்துள்ளார். இவர்களில் முக்கியமானவர் ஜனாதிபதியின் மிக நெருக்கமான சகாவான அமைச்சர் மங்கள சமரவீர. அவர் தலைமையில்தான் பொதுக்கட்டமைக்கு எதிராகவும் ஜே.வி.பிக்கு ஆதரவாகவும் ஒரு குழு செயற்படுவதாகக் கூறப்படுகிறது. (ஊடகத்துறை அமைச்சை மங்களவிடமிருந்து பெற்றுக்கொண்ட ஜனாதிபதி அதை வேறொருவருக்கு கொடுத்து உள்ளார்)

இவர்களை ஓரங்கட்டுவதற்கு, தனது


விமல்

கட்சியில் தனக்கு எதிராக உருவாகக்கூடியவர் என ஜனாதிபதி கருதும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் அவசர சந்திப்புக்களை நடத்தியதுடன் மஹிந்தவை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வைக்கவும் இணங்கியதாகச் சொல்லப்படுகிறது. இவற்றைத் தொகுத்துப் பார்த்தால் ஜனாதிபதி எதிர்நோக்கும் பிரதான எதிரணிகளாக ஜே.வி.பி, பௌத்த பிக்குகள் அமைப்பு, அவரது கட்சிக்குள் ஒரு அணி என்பவை பிரதானமானவையாக இருக்கின்றன.

### ஜனாதிபதியின் நகர்வுகள் சாத்தியப்படுமா?

இவற்றை எல்லாம் கணக்கில் எடுக்காது ஜனாதிபதி தனது காய் நகர்த்தல்களை மேற்கொண்டு வருகிறார். அது முழுமையாக எவ்வளவு சாத்தியப்படும் என்பது தெரியவில்லை. ஏனெனில் இந்த பேரினவாத சக்திகளை முன் தள்ளிக்கொண்டு வந்தவர் ஜனாதிபதியே. இன்று அவற்றுக்கு நடுவே நின்று திண்டாடிக்கொண்டிருக்கிறார். இத்தகைய நெருக்கடிகளை அவர் எதிர்பாராதவரும் அல்லர். ஏனெனில் ஜனாதிபதியின் தந்தையான எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவின் வரலாறும் இதே சாயல் உடையதுதான். அவர் எவ்வாறு பேரினவாதத்தைத் தூண்டி ஆட்சிக்கு வந்தாரோ பின்னர் அதுவே அவருக்கு எமனாக வந்தது வரலாறு. இது சந்திரிகாவுக்குத் தெரியாததல்ல.

46 ஆண்டுகளுக்கு முன்னர் பண்டாரநாயக்கா தமிழ் தலைவர் செல்வநாயகத்துடன் ஒப்பந்தம் ஒன்றை எழுதினார். அது அவரால் வளர்த்து விடப்பட்ட பேரினவாதத்தின் தூண்டுதலினாலேயே பின்னர் அவரால் கிழித்து எறியப்பட்டது. அதேபோலத்தான் இன்று மகள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க ஒரு சாதாரண பொதுக்கட்டமைப்புக்காக தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் ஒப்பந்தம் செய்ய முனைகிறார். இவர் ஆட்சிக்கு வர உதவிய பேரினவாதம் இப்போது இவரை உதைக்கிறது. வரலாறு மீண்டும் திரும்புகிறது வரலாற்றின் இந்த நிகழ்வை சிங்கள தேசம் அசட்டை செய்கிறது. அன்றைய பேரினவாதப் போக்கால் பின்னர் போர் எவ்வாறு

–பிங்கலன்–

நீண்டதோ அதே போல் இன்றைய சூழல் காரணமாகவும் போர் மூளக்கூடும்.

தென்னிலங்கையின் அரசியல் நெருக்கடியில் எப்பொழுதும் நசிபடுவது தமிழர்தான். கடந்த கால வரலாற்றை இன்று மீண்டும் நினைவூட்டுவது பொருத்தமானதாகும்.

### தமிழர் நிலைப்பாடு

இன்றைய நிலையில் தமிழர்கள் மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளனர். சமாதானமும் வரவில்லை. யுத்தமும் இல்லை. எனவே அவர்கள் ஒரு தீர்க்கமான முடிவெடுக்கும் நிலைக்கு இந்த முறை தள்ளப்படலாம் எனச் சொல்லப்படுகிறது.

இது ஒரு வகையில் தமிழர்களுக்கு சாதகமானதாகவே இருக்கும். ஏனெனில் தென்னிலங்கை அரசியல் நெருக்கடிக்குள் எப்பொழுதும் சாகும் தமிழர் இந்த முறையாவது சுதாகரித்துக்கொள்வது நன்மை அளிக்கும்.

தென்னிலங்கையின் அதிகாரிகளுக்கு பதவிவெறி தீரும் வரை தென்னிலங்கையில் அரசியல் நெருக்கடிகள் தீரப்போவதில்லை என்பதே யதார்த்தமாகும்.

## பொதுக்கட்டமைப்பு விவகாரத்தை ஜனாதிபதி இழுத்தடிக்கிறார்

### –புலிகள் குற்றச் சாட்டு–

பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் ஜனாதிபதி சந்திரிக்கா மேலும் மேலும் இழுத்தடித்து அதனைப்பெரும் சிக்கலுக்குள் சிக்க வைத்துள்ளார்.

இவ்விடயம் ஆபத்தான சூழ்நிலையை நோக்கி சென்றுகொண்டிருக்கின்றது என புலிகளின் தலைமை கருத்து வெளியிட்டுள்ளது.

கிளிநொச்சியில் அண்மையில் ஊடகவியலாளர்களிடம் பேசிய அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன் இவ்விடயம் குறித்து விசனம் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக புலிப்போராளிகள், புலிகளின் தளபதிகள் ஆகியோரது பாதுகாப்பான போக்குவரத்து ஏற்பாடுகளை அரசு செய்யாமை குறித்தும் அது போர்நிறுத்த ஒப்பந்தத்தை கேள்விகுறியாக்கும் நிலைக்கு தள்ளும் எனவும் தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டார்.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அரசிடம் இருந்து எந்தவிதமான தகவல்களும் இல்லை. கண்டி மாநாட்டோடு பொதுக்கட்டமைப்பில் ஜனாதிபதி ஒப்பமிடுவார் எனச் செய்திகள் வெளியாகின. வெளிநாட்டுப் பயணத்தின் பின்பு கையொப்பம் இடுவார் என செய்திகள் வந்தன. இவ்வாறு நாட்கள் கடந்து சென்று கொண்டிருக்கின்றன. பொதுக்கட்டமைப்பு விவகாரம் நெருக்கடியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது.

இதுவிடயத்தில் சர்வதேச சமூகம் தீர்க்கமான முடிவை எடுக்கும் என நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இப்பொதுக்கட்டமைப்பில் எங்களது ஆலோசனைகளும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி இவற்றை எல்லாம் மூடி மறைத்து இழுத்தடித்து இதை மர்மப் பொருளாக்கி சர்ச்சைக்குறிய விவகாரமாக்கி காலத்தைக் கரைத்துக் கொண்டிருப்பதால் மக்கள் குழம்பும் சூழல் உருவாகியுள்ளது.

இதற்கு முற்றுமுழுதான பொறுப்பு இலங்கை அரசும், ஜனாதிபதியும் தான் என்றும் தமிழ்ச் செல்வன் குற்றஞ்சாட்டினார்.

எமது போராளிகளின் போக்குவரத்து விடயத்தில் அரசு உரிய ஏற்பாடுகளை செய்யாவிடின் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கேள்விக்குறியாகும்.

நாம் எமது கடற்படை, விமானப்படை, தரைப்படை போன்றவற்றின் பாதுகாப்புடன் போக்குவரத்து ஏற்பாடு செய்யும் சூழ்நிலை உருவாகும்.

அப்படியான சூழ்நிலை ஏற்படுமானால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கேள்விக்குறியாகும்.

அதேவேளை அண்மைக்காலமாக தொடரும் கொலைகள் மற்றும் புத்தர் சிலை விவகார நெருக்கடி என்பன குறித்தும் நோர்வே அனுசரணையாளர்களுக்கும், கண்காணிப்புக் குழுவினருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் உரிய பதிலை விரைவாகதருமாறு கேட்டுள்ளதாகவும் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.




# ஒரு தமிழனின் கதை!

அந்த இன்டர்சிற்றி பஸ் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சீராக ஓடிக்கொண்டிருந்தது. செந்தூரன் மெதுவாக கண்களை மூடியிருந்தான். பக்கத்தில் அவன் மனைவி சித்ராதேவி. ஒன்பது வயது மகன் பழனிவேல் தந்தை மடியில் தலைவைத்து ஆழ்ந்த உறக்கத்திலிருந்தான். இரவு பன்னிரண்டு மணிக்கு மேலிருக்கும். பயணிகள் அனைவருமே தூக்கத்திலிருந்தார்கள். செந்தூரனுக்குத் தூக்கம் வரவில்லை. ஓ! எத்தனை ஆண்டுகள். கிட்டத்தட்ட பன்னிரெண்டு ஆண்டுகள் இருக்குமா? ஆம் இருக்கும். அவன் பிறந்து வளர்ந்த யாழ். மண்ணை விட்டு விலகி வந்து பன்னிரெண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. இவ்வளவு நாளும் எந்த வித தொடர்புமில்லாமல் இருந்துவிட்டான். நீண்ட நாட்களுக்குப் பின் அவன் அண்ணன் ஜெயந்தன்தான் அவனுக்கு கடிதம் எழுதினான். இவ்வளவு நாளும் ஆழ்மனதில் அமிழ்ந்து கிடந்த சகோதர பாசம் மறுபடியும் மேலே வந்து அவனை சந்தோஷப்படுத்தியது. பசுமையான அந்த பழைய நினைவுகள் மீண்டும், மீண்டும் மனதில் வந்து வந்து போயின.

அவன் மெதுவாகக் கண்களை திறந்தான். பஸ் ஓட்டுநர் கடமையே கண்ணாக இருக்க பயணிகள் அனைவரும் கண்ணயர்ந்திருந்தனர். அவன் இருக்கையில் நன்றாகச் சாய்ந்து கொண்டு மறுபடியும் கண்களை மூடினான். இப்போது அவன் மனதில் அந்த பழைய நினைவுகள் திரைப்படம்போல் ஓடத் தொடங்கின.

*****

"என்னப்பா? அவன் படிப்பில் வைத்திருக்கிற அக்கறை! எவ்வளவு சந்தோசமா இருக்கு. ஆனா சாப்பாட்டைக் கவனிக்கிறானில்லையே. நாங்கதான் அவன நல்லாக் கவனிக்க வேண்டும்....."

"எனக்கு இதெல்லாம் தெரியாதா வதனி. தாய், தகப்பனில்லாத அவனுக்கு, நீயும் நானும்தான் எல்லாமே. மற்ற அண்ணைமார் இரண்டு பேரும் கிளிநொச்சியில் நல்ல வசதி வாய்ப்போட இருக்கினம். செந்தூரனை அங்கே வரச்சொல்லி ஒரே கரைச்சல் கொடுத்தாலும் அவன் எங்களோட தானே இருக்க விரும்புறான்...."

"நீங்களும் சின்ன வயதில இருந்து இந்தக் கடலோடு இருந்து கஷ்டப்படுகிறியள். ஏதோ கடவுள நாங்களும் ஓரளவு வசதி வாய்ப்புக்களோடு இருந்தாலும் செந்தூரன் படிச்சு முடிச்சு ஒரு உத்தியோகத்தில உட்கார்ந்திட்டா நாங்களும் அவனோடேயே இருந்து விடலாம் இல்லையா....."

"அட நீ என்னப்பா விசர்க் கதை கதைக்கிறியள். கடல் எங்களோட கடவுளப்பா. எத்தனை கஷ்டம் நஷ்டம் வந்தாலும் அது எங்களை கைவிடாதப்பா... இண்டைக்கு சாப்பாட்டுக்கு கஷ்டமில்லால் சொந்தமாக வீடு கட்டிக்கொண்டு நிம்மதியாகத்தானே இருக்கிறம்... சரி.. தம்பி வாறதுக்கு நேரமாச்சு... சமையல் வேலையைப் பாருங்கோ..."

"ஜெயந்தன் மீனை வதனியிடம் கையளித்துவிட்டு மீன் வலையை வெயிலில் உதறி காய வைப்பதற்காக வெளியே வந்தான். தூரத்தில் கடல் அலைகள் ஆரவாரத்துடன் கரையை நோக்கி பாய்ந்துவந்தன.

ஜெயந்தன் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவன். அவர்கள் பரம்பரை பரம்பரையாக மீன்பிடித் தொழில் செய்பவர்கள். அவன் தந்தை பொன்னையர் கடலில் பிறந்து கடல்காற்றை சுவாசித்து, கடைசியில் கடலிலேயே மூழ்கி மரணமானார். மூத்தவன் சுந்தரம், அடுத்தவன் திருக்கேதீஸ்வரன், மூன்றாவது ஜெயந்தன், அப்புறம் சுந்தரி, மனோகரி. கடைசியாகப் பிறந்தவன்தான் செந்தூரன். சுந்தரமும், திருக்கேதீசும் வியாபாரத்தில் நாட்டமுள்ளவர்கள். அவர்கள் வசிக்கும் வட்வெட்டித்துறையிலிருந்து மொத்தமாக மீன்களை கொள்வனவு செய்து வெளியூர்களில் வியாபாரம் செய்தார்கள்.

ஜெயந்தன் தன் தந்தையுடன் கடலுக்குப் போய் தொழில் கற்றுக்கொண்டான். மீன்பிடித் தொழிலை மிக நன்றாகக் கற்றுக்கொண்டான். அண்ணன் மற்றும் அக்காமார்கள் செந்தூரன் மேல் அதிகம் அன்பு கொண்டவர்களாக விளங்கினார்கள். செல்லப்பிள்ளையான செந்தூரன் மேல் ஒரு தூசுபட்டாலும் அவர்கள் துடிதுடித்துவிடுவார்கள். சுந்தரி, மனோகரி ஆகியோருக்கு அடுத்தடுத்து திருமணம் முடிந்து அவர்கள் புகுந்தவீடு சென்றபோது செந்தூரன் துடித்துப் போனான். ஒவ்வொருவாரத்திலும் சனிக்கிழமைகளில் அக்காமார் வீடுகளுக்கு போய்விடுவான்.

சுந்தரம், திருக்கேதீஸ்வரன் இருவரும் மணம் முடித்து கிளிநொச்சிக்குப் போனபோது செந்தூரனைத் தங்களுடன் வந்துவிடும்படி கேட்டுக்கொண்டபோதும் அவன் மறுத்துவிட்டான். ஜெயந்தன் தன் ஒன்றுவிட்ட மாமன் மகள் வதனியைக் கைப்பிடித்தான். வதனிக்கு ஏற்கனவே ஜெயந்தன் குடும்பத்தின் மீது நெருக்கம் இருந்தபடியினால் செந்தூரன் மீது அவளுக்குப் பாசமிருந்தது. ஜெயந்தனுக்கு எப்படியாவது தன் தம்பி செந்தூரனை ஒரு பட்டதாரியாக்கிவிட வேண்டும் என்ற லட்சியம் இருந்தது. க.பொ.த. சாதாரணதரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றிருந்த அவன் உயர்தரத்திலும் நன்றாகப் படித்துவந்தான்.

ஜெயந்தனுக்கும் வதனிக்கும் பெண் குழந்தையொன்று பிறந்தது. அதற்கு 'செந்தூரணி' என்று தன் தம்பியின் பெயரையே வைத்தான் ஜெயந்தன். சில குடும்பங்களில் திருமணத்திற்குப் பின் அண்ணன் தம்பி உறவுகளில் விரிசல் விழும். ஆனால், ஜெயந்தன் வதனி இருவருமே — செந்தூரனை தனது மூத்தமகனாகவே நினைத்துப் பாசத்தை பொழிந்தார்கள்.

செந்தூரன் க.பொ.த. உயர்தரத்தில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுச் சித்தியடைந்தான். பல்கலைக்கழகப் பட்டப்படிப்புக்குத் தெரிவான அவன் அழைப்பு வரும்வரை சும்மா இருக்கவில்லை. தான் கற்ற கல்வி தன் சமூகத்துக்கு பயன்பட வேண்டும் என்ற எண்ணத்தில் இலவச டியூசன் நடத்தினான். இடையில் ஆசிரியர் தொழிலுக்கும் முயற்சி செய்தான்.

கமலினி! செந்தூரனின் அண்ணி வதனியின் வடிவான தங்கை. க.பொ.த. சாதாரணதரம் படித்துவந்த அவள் வெள்ளிக்கிழமை வந்து விட்டால் யாழ்ப்பாணத்திலிருந்து அங்கே வந்துவிடுவாள். ஞாயிற்றுக்கிழமை பகல் சாப்பாட்டுக்குப் பின் மறுபடியும் கிளம்பிவிடுவாள். அவளுக்கு பாடங்களில் சந்தேகங்களைத் தீர்ப்பதிலிருந்து ஞாயிற்றுக்கிழமை பஸ்ஸில் அவளை ஏற்றிவிடுவதுவரை செந்தூரன்தான் செய்வான்.

கமலினிக்கு செந்தூரன் மேல் காதல். செந்தூரனின் நல்ல குணங்கள், மற்றவர்களுக்கு உதவக்கூடிய பண்பு மற்றும் பெண்களை மதிக்கும் அரிய குணம் எல்லாமே அவளுக்குப் பிடித்திருந்தது. அவளின் காதல் அவள் மனதுக்குள்ளேயே யாருக்குமே தெரியாமல் வளரத் தொடங்கியது. அன்றொரு சனிக்கிழமை ஜெயந்தனும் வதனியும் சந்தைக்குச் சென்றிருந்தார்கள். ஏற்கனவே செந்தூரனுடன் நன்றாக ஓட்டிக் கொண்ட செந்தூரணி அவனுடன் விளையாடிக் கொண்டிருந்தாள். உள்ளே சமையலறையில் கோப்பி தயாரித்துக் கொண்டிருந்த கமலினி மெதுவாக வெளியே வந்தாள். இன்று எப்படியாவது செந்தூரனின் மனதிலுள்ளதை வெளிக் கொண்டு வந்துவிட வேண்டும் என நினைத்திருந்தாள். செந்தூரனின் மடியில் செந்தூரணி அமர்ந்து விளையாடிக் கொண்டிருக்க செந்தூரன் பார்த்தசாரதியின் 'குறிஞ்சிமலர்' என்ற நாவலை வாசித்துக் கொண்டிருந்தான்.

"என்ன ரொம்ப சீரியசா படிச்சிக்கொண்டிருக்கிறீங்கபோல...."

"ஆமாம்.. ரொம்ப அருமையான கதை... காதலோட புனிதத்தை ரொம்ப அழகாக சொல்லியிருக்கார் இல்லையா..."

"ஓம் ஓம்! நான் இந்த நாவலை பத்துத் தடவைக்குமேலே படிச்சுவிட்டன். கதையோட முடிவு கண்ணீரை வரவழைக்கிறது. காதலென்றால் இப்படித்தான் இருக்க வேணும். ஒரு மனுசன் என்றால் மற்றவங்களுக்கு எந்தவகையிலயாவது உதவியாக இருக்கணும். மரம் கனி கொடுக்குது. சூரியன்கூட தன்னை எரிச்சுக் கொண்டு உலகத்துக்கு ஒளி கொடுக்குது. ஆனால், மனிதர்களான நாங்க மட்டும் தான் யாருக்கும் எந்த உதவியும் செய்யாம ஒருவரை ஒருவர் முட்டிமோதி அடிச்சுக்கிட்டு செத்துப்போகிறோம்."

"அதெல்லாம் போகட்டும், காதலைப் பற்றி உங்களோட அபிப்பிராயம் என்னென்று சொல்லுங்கோவன்...."

"என்னைப் பொறுத்தவரையில வெறும் காமம் சம்பந்தப்பட்டதில்ல காதல். அது அன்பு, பாசம், பரஸ்பரம் புரிந்துணர்வு, தியாகம் எல்லாம் கலந்ததாக இருக்கவேணும். 'குறிஞ்சி மலர்' நாவலில் வருகின்ற நாயகன் நாயகி மாதிரி இல்லாவிட்டாலும் குண்டுமணியளவாவது யதார்த்தமும் யாரையும் மனம் நோகவிடாத பண்பும் கொண்டதா காதல் இருக்க வேணும்...."

"அப்போ அப்படிப்பட்ட ஒருத்தியைத் தான் நீங்கள் காதலிப்பீங்களோ.....?"

"அட. என்ன விசர்க்கதை கதைக்கிறீர்... எதற்காக இப்போ என்னிடம் இதைக் கேட்கிறாய்....?"

"உங்ககிட்ட இதைக் கேட்காம வேறு யார்கிட்டே நான் கேட்கிறதாம்...."

"சரி... சரி காலையிலேயே என்ட மனசைப் போட்டு குழப்பாம போய் கோப்பி ஊத்திக்கொண்டு வாரும்..."

கமலினி செல்லமாக சிணுங்கியவாறு சமையலறைக்குள் நுழைந்தாள்.

மேலும் ஒருவாரம் ஓடியது. அன்றும் ஒரு சனிக்கிழமை. விஷேசமான சனிக்கிழமை. ஏனென்றால் செந்தூரனுடன் அவன் மூத்த அண்ணன்மார் சுந்தரம், திருக்கேதீஸ்வரன் அவர்களின் மனைவி பிள்ளைகள், கமலினி என்று ஜெயந்தனின் வீடு நிறைந்திருந்தது.


ஜெயந்தனுக்கு மிகச் சந்தோஷமாக இருந்தது. எவ்வளவு காலத்திற்குப்பின் அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். வதனி, அவர்களுக்கு விதவிதமாக மீன் கலந்த சாப்பாட்டினைச் செய்து கொடுத்தாள். கமலினி மிகவும் உதவியாக இருந்தாள்.

(20 ஆம் பக்கம் பார்க்க)






அவர் ஒரு பெரிய செல்வந்தர். கடுமையான இருதய நோயினால் பாதிக்கப்பட்டு.. வலியால் துடித்துக் கொண்டிருந்தார்.



அவரை உடனடியாக ஒரு வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டிய அவசர நிலை. ஆனால் அவரது மனைவியோ ஒரு மூலையிலே இருந்து தொடர்ந்து தொலைபேசியில் பேசிக்கொண்டே இருந்தார். இதனைக் கண்ட ஒரு பெரிசுக்கு எரிச்சலாக வந்தது. அந்த பெண்ணிடம் சென்று ''என்னம்மா நீ... ஒரு மனிதத் தன்மை இல்லாத பெண்ணாக இருக்கிறாயே! உனது கணவர் நெஞ்சுவலியால் துடித்துக்கொண்டிருக்கிறார். அவரை உடனடியாக ஒரு வைத்தியசாலைக்கு கூட்டிச் சென்று சிகிச்சை அளிக்கலாமே! அதனை விட்டுவிட்டு இப்படி தொலைபேசியில் பேசிக் கொண்டிருக்கிறாயே'' என்றார் சலிப்புடன்.

அந்தப் பெண் சொன்னாள். ''அது விடயமாகத்தான் இதுவரை தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தேன். எந்த வைத்தியசாலையில் அழகான பெண்கள் நேர்ஸா


## ஜோக்

இல்லை என்று விசாரித்துக் கொண்டிருந்தேன்'' என்றாள்.

பெரிசுக்கோ ஆச்சரியம் ''அழகான பெண்கள் நேர்ஸாக இல்லாமல் இருக்க வேண்டுமென்று நீ விரும்புவது ஏன் என்று தெரிந்து கொள்ளலாமோ?'' என்று அந்த பெண்ணிடம் கேட்டார்.

அந்தப் பெண் சொன்னாள் ''ஐயா... கடந்த முறை இவருக்கு இதேபோல் நெஞ்சுவலி வந்தபோது இவரை கவனித்த நேர்ஸ் நான்தானே!'' என்றாள்.

# நெட் குறும்பு



அப்பாடா... பூனைகள் உள்ளாடைகள் அணியாததால் தப்பித்தோம். அவையும் அணிய வெளிக்கிட்டால்... படத்தைப் பாருங்கள் எத்தனை தேவை... எவ்வளவு செலவு...

# ச் சீ ய்....

சும்மா அனதயும் – இனதயும் கலந்து – அடுப்பு வெக்கைக்குள் இருந்து கஷ்டப்பட்டு பீஸ்ஸா தயாரிப்பதை விட இது சுலபம் தானே...!




# விந்தை உலகம்


எல்லோரும் பிறந்தநாள் கொண்டாடுகிறார்களே என்று அமெரிக்காவில் ஒரு அம்மணியும் தனது மகனுக்கு பிறந்த நாள் விழா கொண்டாடப்போய்... வில்லங்கத்தில் மாட்டி... கோடு – கேஸ் என்று ஏறி இறங்கி நொந்து நூலாகிப் போய் இருக்கிறார்.

அமெரிக்காவைச் சேர்ந்த பெண்மணி அனேட்டே பாரிஸ். 39 வயதான இவர் தனது 16 வயது மகனுக்கு பிறந்த நாள் விழா கொண்டாடினார். தனது மகனின் பிறந்த நாள் வித்தியாசமாக இருக்க வேண்டும் என்பதற்காக பிறந்த நாள் விழாவில் நிர்வாண நடனம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

விழாவுக்கு வந்த பிறந்த நாள் பையனின் நண்பர்களான சிறுசுகள் – பொரிசுகள் எல்லாம் இன்னாடா இது புதுசா இருக்குது என்று இந்த நடனத்தை ஜொள்ளுவிட்டு ரசித்திருக்கிறார்கள்.


ஆனால் பக்கத்து வீட்டுக்காரர்களுக்கோ இது பொறுக்கவில்லை. சின்னப் பசங்கள் உள்ள விழாவில் நிர்வாண நடனம் ஆடவைத்து சின்னதுகளை கெடுக்கிறார் என்று பொலிஸிலே புகார் செய்துவிட்டார்கள். பாய்ந்து வந்த பொலிஸார் நடனத்துக்கு ஏற்பாடு செய்த அருனட்டே, அவரது கணவர் பாரிஸ், நிர்வாணமாக நடனமாடியவர்கள் எல்லோரையும் வளைத்துப் பிடித்து தூக்கிச் சென்று கம்பி எண்ண வைத்துவிட்டனர். பின்னர்... நீதிமன்றத்தில் அவர்களை ஆஜர்படுத்தியபோது, ''இனிமேல் இப்படி செய்தால் தூக்கி உள்ளே போட்டு விடுவேன்'' என்று அவர்களை எச்சரித்து நீதிவான் விடுதலை செய்திருக்கிறார்.

# சத்தமில்லாத சிரிப்பு...



அந்தப் பெண்ணை ஏற்றுவதா – இந்தப் பெண்ணை ஏற்றுவதா என்ற தடுமாற்றம் பள்ளத்தில் கொண்டு போய்விட்டிருக்கிறது பாருங்கள்.

# ஐடியா



உங்கள் வீட்டில், சீ.... வயலில்... மாடு உழுவதற்கு கள்ளப்படுகிறதா? கவலையை விடுங்கள்.... இதோ ஐடியா.



# உலக வரலாறும் மனித விடுதலையும் 4

## மதியுரைஞர் பாலாவின் மற்றொரு பரிமாணம்

மாக்சின் வரலாற்றுப் பொருளியத்தை பற்றிய பல்வேறு விமர்சனங்களை எல்லாம் மாக்சியத்தின் பிதாமகர்களே நிராகரித்திருக்கிறார்கள்.

லெனினும் இதுபற்றி நீண்ட விரிவுரைகளை எழுதியிருக்கிறார். அவற்றின் சாராம்சம் இதுதான்:-

பொருளாதார உறவுகளில் எழும் முரண்பாடு பிரதானமானது. ஆயினும் சமூக கட்டமைப்பின் பல்வேறு நிலைகளில், பல்வேறு பரிமாணங்களில், முரண்பாடுகள் தோன்றி வளர்கின்றன. சகல முரண்பாடுகளினதும் ஒட்டுமொத்தமான புறநிலை அழுத்தத்தால் புரட்சிகர சூழ்நிலை எழுகிறது. ஒடுக்கப்படும் மக்களே இந்த முரணியங்களின் அழுத்தத்தால் ஈர்க்கப்படுகிறார்கள். சமூகத்தின் பெரும்பான்மையாக, சமூக உற்பத்தியின் படைப்பாளிகளாக விளங்கும் உழைக்கும் மக்களே, புரட்சிகர வர்க்கமாக, புரட்சிகர சக்தியாகச் செயற்படுகிறார்கள். எனவே, முரணியங்களின் போராட்டகளமாக வர்க்கப் போராட்டம் அமைகிறது. இந்த வர்க்கப் போராட்டமே வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகிறது. வர்க்கப் போராட்டமே சமூகப் புரட்சிக்கும், சமூக மாற்றத்திற்கும் ஏதுவாக இருக்கிறது. வர்க்கப் போராட்டம் என்பது தானாக, தன்னியல்பாக சமூகப் புரட்சியை தோற்றுவிப்பதல்ல. வர்க்கப் போராட்டம் என்பது அணிதிரட்டப்பட்ட வெகுசன சக்தியாக எழுச்சிகொள்ளும் புரட்சிகர வர்க்கத்தின் போராட்டம். வெகுசனத்தை அணிதிரட்டவும், போராட்டத்தை முன் நகர்த்திச் செல்லவும், புரட்சியை நடத்தவும், ஆட்சியைக் கைப்பற்றவும், சமூகத்தில் மாற்றத்தை நிகழ்த்தவும் ஒரு புரட்சிகர இயக்கம் வேண்டும். இந்தப் புரட்சிகர இயக்கமும் அதன் பின்னால் அணிதிரளும் மக்களுமே புரட்சியை நடத்த முடியும். வரலாற்றை நகர்த்த முடியும்.

கார்ள் மாக்ஸ் ஒரு வரலாற்று ஆசிரியர் மட்டுமன்றி ஒரு சமூகப் புரட்சியாளரும் ஆவார். அவர் சமூக உலகத்திற்கும் வரலாற்றுக்கும் விளக்கக் கோட்பாடுகள் அளித்ததோடு நின்றுவிடவில்லை. அவர் சமூகத்தை, உலகத்தை மாற்றியமைக்க விரும்பினார். முதலாளிய ஒடுக்குமுறையிலும், சுரண்டல் முறையிலும் சிக்குப்பட்டுச் சீரழியும் மனிதர்கள் விடுதலையடைந்து ஓர் உன்னதமான சமூக அமைப்பைக் கட்டியெழுப்ப வேண்டுமென ஆவல் கொண்டவர். எனவே, அவர் சமூகப் புரட்சி பற்றி எழுதினார். சமூகச் செயற்பாட்டை வலியுறுத்தினார்.

சமூக மெய்மையை, அதன் முரணியத் தன்மைகளை, அதன் அசைவியக்கத்தை ஆழமாகப் பார்க்கும் ஆய்வுக் கருவியாக அவர் இயங்கியலைக் கையாண்டார். இயங்கியலில் நெறிக்கப்பட்ட சமூக அறிவியற் கோட்பாடு சமூக நிதர்சனத்தைத் துல்லியமாகக் காட்ட வல்லது; சமூக வரலாற்று இயக்கத்தை வெளிப்படுத்த வல்லது என்பது அவரது கருத்து. விளக்கக் கோட்பாடுகள் சமூக உண்மைகளைத் திரைநீக்கம் செய்துகாட்டலாம். ஆனால், செயற்பாடுதான் சமூகத்தை மாற்றியமைக்க வல்லது.

ஆகவே, கோட்பாடும் செயற்பாடும் ஒன்றித்து நிற்பதுதான் புரட்சிகர நடவடிக்கைக்கு இன்றியமையாதது என்பது அவரது நிலைப்பாடு.

இயங்கியல் தத்துவத்தின் அடிப்படையில் மாக்சின் சிந்தனைப் பாரம்பரியத்தை சமூகப் புரட்சிக் களத்திற்கு எடுத்துச் சென்றவர்களில் லெனினும் மாவோவும் முக்கியமானவர்கள். அக்டோபர் புரட்சிக்கு முற்கால ரஷ்ய சமூக அமைப்பை இயங்கியல் கோட்பாட்டின் அடிப்படையில் தெளிவாக விளக்கினார் லெனின். ரஷ்ய சமூகத்தில் அன்று நிலவிய பன்முக முரண்பாடுகளை ஆழமாக எடுத்து விளக்கி, புரட்சிக்கான புறநிலைத் தன்மைகளை அவர் சுட்டிக்காட்டினார். சமூக எதார்த்த நிலைகளை விளக்குவதோடு நின்றுவிடாது, சமூக மாற்றத்திற்காகப் புரட்சிகர வேலைத்திட்டத்தையும் நெறிப்படுத்தி, அதைச் செயற்படுத்தியும் காட்டினார். இதே போன்று சீனச் சமூக உலகத்தையும், அதன் முரண்பாட்டுக் கோலங்களையும் மிகவும் துல்லியமாக விளக்கினார் மாவோ. விவசாய வர்க்கத்தின் கட்டமைப்பையும், அந்த வர்க்கத்தில் நிலவிய பிரிவுகளையும், பிளவுகளையும், முரண்களையும் ஆழமாக ஆராய்ந்து, அந்த முரண்களை அகற்றும் செயற்திட்டமாக புரட்சிக் கோட்பாடுகளை அவர் உருவாக்கினார். முரணியம் பற்றி அவர் எழுதிய கட்டுரை, இயங்கியல் ஆய்வு முறைக்கு ஒரு தலைசிறந்த விளக்கவுரையாகக் கருதப்படுகிறது.



சமூகம் என்பது சிக்கலான மனித உறவுகளைக் கொண்ட ஒரு புதிரான உலகம். எத்தனையோ எதிர்வு சக்திகள் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்து, ஒன்றோடு ஒன்று முரண்பட்டு, அந்த முரண்களின் முகங்கள் தெரியாதவாறு ஒன்றோடு ஒன்று ஒன்றித்து நின்று, ஒரு பொய்யான தோற்றப்பாட்டுடன் சமூகம் இயங்குகிறது. இந்தத் தோற்றப்பாட்டிற்கு அப்பால், மறை பொருளாக ஒளிந்திருக்கும் சமூக மெய்யுண்மைகளை இனம் கண்டு அறிவதற்கு இயங்கியல் ஆய்வு இன்றியமையாதது. இதில் முரணிய விதி முக்கியமானது. அதுவே சமூக இயக்கத்தின் இரகசியங்களை வெளிக்காட்ட வல்லது. இந்த முரணியம் ஒருமுகத் தன்மை கொண்டதல்ல; அது பல்முகப் பரிமாணங்களைக் கொண்டது என விளக்குகிறார் மாவோ.

சிக்கலான வர்க்க உறவுகளால் பின்னப்பட்டிருக்கும் சமூக உலகத்தில், முரண்பாடுகளும் சிக்கலானவையாகப் பின்னப்பட்டிருக்கின்றன. இவை ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாக, ஒன்றன் மீது ஒன்று தாக்கம் விளைவிப்பனவாக, சமூக இயக்கத்தின் நீரோட்டமாக அசைகின்றன. இந்த சமூக முரண்பாட்டு உலகத்தைப் பலரகங்களாக வகைப்படுத்துகின்றார் மாவோ. பிரதான முரண்பாடு என்றும், இரண்டாம் தர முரண்பாடு என்றும், பகை முரண்பாடு என்றும், சிநேக முரண்பாடு என்றும், சம நிலையற்ற வளர்ச்சிப் போக்குடைய முரண்பாடு என்றும் இவை நிரைப்படுத்தி வகைப்படுத்தப்படுகின்றன. நதிகள் சமுத்திரத்தில் சங்கமமாவது போன்று, எல்லா முரண்பாடுகளுமே பிரதான முரண்பாட்டைச் சந்திக்கின்றன. அதற்கு முண்டு கொடுத்து நிற்கின்றன. இந்தப் பிரதான முரண்பாடு முக்கியமானது. அது முற்றிக் கனியும்போதே புரட்சிகரப் புறநிலை பிறக்கிறது. இந்தப் பிரதான முரண்பாட்டையும் அதோடு பிணைந்து நிற்கும் ஏனைய முரண்பாடுகளையும் இனம்கண்டு கொள்வதன் மூலமே சமூக உலகத்தை ஆழமாகத் தரிசித்துக்கொள்ள முடியும் என்கிறார் மாவோ.

முரணியக் கோட்பாட்டை விரிவுபடுத்தி, அதனைச் செழுமைப்படுத்தய மாவோ, லெனின் போன்றோர் நிகழ்த்திய சமூக ஆய்வுகளை உதாரணம் காட்டி, ஹேகலின் இயங்கியலுக்கும் மாக்சிய இயங்கியலுக்கும் அடிப்படையான, அமைப்பு ரீதியான வேறுபாடு உண்டு என வாதிடுகிறார் பிரபல நவமாக்சிய அறிஞரான அல்தூசர். ஹேகலின் தத்துவம் கருத்துலகம் சார்ந்தது. ஆன்மீகமயமானது. ஆனால், மாக்சின் ஆய்வு வரலாற்றுடன் பிணைந்து நிற்கிறது. சமூக வரலாற்றிற்கு அறிவியல் ரீதியான விளக்கத்தைக் கொடுக்கிறது என்பது அல்தூசரின் வாதம்.

மாக்சீயத்தை ஒரு வரலாற்று விஞ்ஞானக் கோட்பாடாக நிறுவுவதாயின் மாக்சின் சிந்தனை உலகிலிருந்து ஹேகலின் 'ஆவியை' விரட்ட வேண்டும் என்கிறார் அல்தூசர். அவரது தத்துவார்த்த எழுத்துக்கள் இந்தக் காரியத்தையே செய்ய முனைகின்றன. அல்தூசரின் எழுத்துக்கள் நவமாக்சிய சிந்தனை உலகில் பெரும் சர்ச்சையைக் கிளப்பின. இந்தச் சர்ச்சையையும் அதன் வாதப் பிரதிவாதங்களையும் விளக்கிக் கூறுவது இக்கட்டுரையின் நோக்கமல்ல. நாம் இங்கு எடுத்துக் கொண்ட விடயம், ஹேகலின் தத்துவம் மாக்சின் சமூக வரலாற்றுக் கோட்பாட்டில் ஏற்படுத்திய தாக்கம் பற்றியதாகும். ஹேகலின் சிந்தனையை மாக்சியம் எந்த அளவிற்கு உள்வாங்கியிருக்கிறது என்பது பற்றியே நாம் இங்கு பார்ப்போம். இந்தச் சிந்தனை வரம்பிற்குள் நின்றே இந்தக் கட்டுரை எழுதப்படுகிறது.

கார்ள் மாக்சின் சிந்தனையுலகை இரு கால கட்டங்களாகப் பிரித்து, ஒன்றை இளம் மாக்சின் தத்துவார்த்த எழுத்துக்கள் என்றும், மற்றதை முதிர்ந்த மாக்சின் அறிவியற் கோட்பாடுகள் என்றும் இரு வகைப்படுத்துகிறார் அல்தூசர். முன்னது சித்தாந்த உலகம் சார்ந்தது. பின்னது அறிவியல் உலகம் சார்ந்தது. முன்னதில் ஹேகலின் தத்துவப் பிசாசு குடிகொண்டிருக்கிறது. பின்னதில் அது விரட்டப்பட்டுவிட்டது. முன்னது தத்துவ விமர்சனம். பின்னது சமூக வரலாற்று விஞ்ஞானம். இப்படியாக மாக்சின் எழுத்துலகை இரு கூறுகளாகப் பிரித்து, இடையே ஒரு சிந்தனை முறிவு ஏற்பட்டுள்ளதாக வாதாடுகிறார் அல்தூசார்.

இந்த வாதம் வலிமையற்றது. ஏற்றுக் கொள்ள முடியாதது. ஏனென்றால், அல்தூசர் கூறுவதுபோல மாக்சின் எழுத்துக்களில் ஓர் அடிப்படையான சிந்தனை முறிவு (Epistemological break) ஏற்பட்டதாக சொல்லிவிட முடியாது. அவரது எழுத்துக்களில் ஒரு சிந்தனைத் தொடர்ச்சி இருக்கிறது. ஒரு பரிணாம வளர்ச்சி இருக்கிறது. இளம் பிராயத்தில் அவர் தத்துவம் பற்றி எழுதினார். முதிய காலத்தில் பொருண்மியம் பற்றி எழுதினார். ஆனாலும் அவரது தத்துவப் பார்வை, உலகப் பார்வை, அவரது முதிர்ந்த கால எழுத்துக்களிலும் ஆழமாக வேர் பதித்து நிற்கின்றன. ஹேகலின் இயங்கியல் தத்துவமானது மாக்சின் சிந்தனைத் தொடர்ச்சிக்கு ஆதாரமாக நிற்கிறது.

ஜெர்மானிய தத்துவம், பிரஞ்சு அரசியல், பிரித்தானிய பொருண்மியம் என்ற ரீதியில், காலத்திற்குக் காலம் அந்தந்த நாடுகளில் வாழ்ந்தபோது, அந்தந்த நாடுகளின் வரலாற்றுப் புறநிலைகளாலும் சிந்தனைப் போக்குகளாலும் ஈர்க்கப்பட்டு, அந்தந்த துறைகள் பற்றி மாக்ஸ் எழுதினார். அவர் எங்கு சென்றாலும், எதனை எழுதினாலும், ஹேகலின் 'ஆவி' அவரைப் பின்தொடர்ந்தது. அதே 'ஆவிதான்' ஹேகலின் இயங்கியல் தத்துவம். அது அவரது எல்லா எழுத்துக்களிலும் ஆட்கொண்டு நிற்கிறது. முதிர்ந்த பருவத்தில் அவர் பிரித்தானியாவில் வாழ்ந்தபொழுது, ஆங்கிலேய முதலாளிய உற்பத்தி உலகின் அராஜகப் போக்கு அவரை ஆழமாகப் பாதித்தது. பல வருடங்களை லண்டன் 'மியூசியம்' நூலகத்தில் செலவிட்ட அவர், 'மூலதனத்தை' எழுதினார். புரட்சிகரமான பொருண்மியக் கோட்பாடுகளைப் படைத்தார். முதலாளிய உற்பத்தி உலகின் முரணியத் தன்மைகளையும், இயங்குவிதிகளையும் எடுத்து விளக்கினார். வரலாற்றுப் பொருளியத்தின் அத்திவாரத்தை அமைத்தார். அல்தூசரால் சமூக வரலாற்று விஞ்ஞானமாகச் சித்திரிக்கப்படும் சமூக வரலாற்றுப் பொருளியமும் இயங்கியல் தத்துவத்தின் அத்திவாரத்தில்தான் கட்டப்பட்டிருக்கிறது. ஹேகலின் இயங்கியல் விதிகளே மாக்சிய வரலாற்றியலின் தூண்களாக நிற்கின்றன.

இயங்கியல் ஆய்வு முறைக்கு இலக்கணமாகத் திகழும் கார்ள் மாக்சின் 'மூலதனம்', முதலாளிய பொருள் உற்பத்தி உலகை ஆழமாக விசாரணை செய்கிறது. தற்கால சமூகத்தின் பொருண்மிய இயங்குவிதிகளைப் பிட்டுக்காட்டுவதே இந்த ஆய்வு நூலின் இறுதி நோக்கம் என 'மூலதனத்தின்' முன்னுரையில் அவர் குறிப்பிடுகிறார்.

சமூகக் கட்டமைப்பின் அடித்தளமாக பொருண்மியக் கட்டமைப்பு அமைந்திருக்கிறது. பொருண்மிய அமைப்பின் இயங்குவிதிகளே சமூகக் கட்டமைப்பின் அசைவியக்கத்திற்கு பிரதான காரணிகளாக விளங்குகின்றன. ஆகவே, பொருண்மிய அமைப்பின் இயங்குவிதிகளைக் கண்டு கொண்டால் சமூக இயக்கத்தின் போக்கினை, அதன் வரலாற்று நகர்வினைக் கண்டு கொள்ளலாம். இந்த நோக்கிலேயே முதலாளிய சமூகத்தின் உற்பத்தி வடிவத்தை 'மூலதனம்' அறுவை செய்து பார்க்கிறது.


இந்த ஆய்வில், முதலாளிய உற்பத்தி முறையில் நிலவும் முரணியங்களை மிகவும் நுட்பமான முறையில் வெளிப்படுத்திக் காட்டுகிறார் கார்ள் மாக்ஸ். இந்த முரணியங்கள் முதலாளியத்தைப் பெரும் நெருக்கடிக்குள் தள்ளிக்கொண்டிருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார். இது முதலாளியத்தின் சிதைவுக்கு வழிகோலும் என அவர் நம்பினார்.

உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற பேரவாவில், முதலாளியமானது கட்டுக்கடங்காத வளர்ச்சிப் பாதையில் செல்கிறது. இதன் விளைவுகளில்ஒன்றாக, இலாப விகிதாசாரத்தில் தவிர்க்க முடியாத வீழ்ச்சி ஏற்படும். இது முதலாளியத்தின் உள்-முரண்பாடாக எழுந்து, முதலாளிய உற்பத்தி முறையை ஸ்தம்பிக்கச் செய்யும். மறுபுறத்தில், முதலாளியத்தின் பெரு வளர்ச்சி, முதலாளிய தொழிலாள வர்க்கங்களை இரு துருவப் பிளவில் இட்டுச்செல்லும். பெருமீன்கள், சிறுமீன்களை விழுங்குவது போல, பெருமுதலாளிகள் சிறுமுதலாளிகளை ஏப்பம்விட முதலாளிகளின் தொகை சுருங்கும். அதேவேளை, தொழிலாள வர்க்கத்தின் தொகை பெருகும். சுரண்டல் அதிகரிக்கும். தொடர்ச்சியாக வறுமையின் விளிம்பிற்கு பாட்டாளி வர்க்கம் தள்ளப்படும். சகித்துக் கொள்ள முடியாத துன்பத்தில் உழைக்கும் வர்க்கம் உழலும். இதனால் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெடிக்கும். இவ்விதம் உள் முரண்பாடாக எழும் நெருக்கடியால் முதலாளியமானது தனது புதைகுழியைத் தானாகவே தோண்டிக்கொள்ளும். அதன் புதைகுழியிலிருந்து ஒரு புதிய சமூகம் பிறக்கும். புதிய உற்பத்தி உறவுகளைக் கொண்ட ஒரு புதிய உற்பத்தி வடிவம் தோன்றும். இவ்வாறு 'மூலதனத்தில்' தீர்க்கதரிசனம் சொல்கிறார் கார்ள் மாக்ஸ்.

முதலாளித்துவத்தின் புதைகுழியிலிருந்து புதிய உற்பத்தி வடிவமாக சோசலிச சமுதாயம் பிறக்கும். அந்தச் சோசலிச சமுதாயத்தில் அனைத்து உற்பத்திச் சாதனங்களும் பொதுவுடமையாக்கப்படும். அந்தப் புரட்சிகரமான புதிய சமுதாயத்தில் வர்க்கப் பிரிவுகள் அழிந்து சமத்துவம் நிலவும். அந்த சோசலிச சமுதாயம் மேலும் வளர்ச்சி கண்டு கம்யூனிஸ்ட் சமுதாயமாக உன்னத வடிவம் எடுக்கும். அந்தக் கம்யூனிச சமுதாயத்தில் அரச நிறுவனமும், ஆட்சி அதிகாரமும் அழிந்து போகும். ஆளுபவர், ஆளப்படுபவர் என்ற முரணிய பேதங்கள் முற்றாக நீங்கும். கம்யூனிசம் இறுதியில் உலகமயமாகி முழு மனித வர்க்கத்தையும் தழுவிக்கொள்ளும். அப்பொழுது, சுதந்திரமும், சமத்துவமும் பெற்றதாக மனிதம் பூரணமடையும். அத்துடன், மனித உலகத்து முரணிய இயக்கங்கள் முடிவுக்கு வரும். அந்நிலையில் வரலாற்றின் அசைவியக்கம் நின்றுவிடும். இப்படி எதிர்வு கூறினார் கார்ள் மாக்ஸ்.

'மூலதனத்தில்' முதலாளியத்தின் சாவு பற்றி கார்ள் மாக்ஸ் கூறிய தீர்க்கதரிசனம் பலிக்கவில்லை. முதலாளிய உற்பத்தி உலகில் எழும் வர்க்க முரண்பாடு கூர்மையடைந்து, தனக்குத்தானே குழிபறித்து முதலாளித்துவம் செத்துவிடவில்லை. பதிலாக, அதுபெரும் வளர்ச்சியைக் கண்டது. ஏகபோக முதலாளியமாக, அரச முதலாளியமாக, ஆக்க நல முதலாளியமாக, காலத்திற்கு காலம் அது வெவ்வேறு வடிவங்களை எடுத்து விஸ்வரூபம் பெற்று பாரிய வளர்ச்சிகண்டு வருகிறது. முதலாளியமானது தேசிய எல்லையை கடந்து, உலகக் கூட்டணி அமைத்து, சர்வதேச சக்தியாக விரிவாக்கம் பெற்று வருகிறது. இன்று உலக முதலாளியத்தின் பொருளாதாரச் சிலந்திவலைக்குள் முழு உலகமுமே சிக்குப்பட்டு நிற்கிறது. (தொடரும்.....)

தமிழீழ விடுதலைப் புலிகளின்
மதியுரைஞர் அன்ரன்
பாலசிங்கத்தின் மற்றொரு
பரிமாணத்தை – பக்கத்தை –
அந்த மனிதருள்
புதைந்திருக்கும் இன்னொரு
அதிசய ஜீவனை –
வெளிப்படுத்துகிறது
'விடுதலை' கட்டுரைத் தொகுப்பு.




### கல்தா

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலைகள் இப்போது ஒருவித அச்ச உணர்வோடுதான் இருக்கின்றனவாம். எங்கே ஆனந்தசங்கரிக்கு ஏற்பட்ட நிலைதான் தமக்கும் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் அவர்களிடம் மேலோங்கி இருக்கிறதாம்.

கடந்தவாரம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சம்பந்தமில்லாதவர் வன்னிக்கு அழைக்கப்பட்டார். அவரிடம் நீண்ட விசாரணை நடந்ததாம். ஏற்கனவே சில சந்திப்புக்களை தவறவிட்டிருந்த இவருக்கு இந்த சந்திப்பின் போது நல்ல அர்ச்சனை கிடைத்ததாக கேள்வி. திருமலையில் கூட்டமைப்பு அலுவலகம் ஒன்றைத் திறக்குமாறு சம்பந்தப்பட்டவர்கள் சம்பந்தமானவரிடம் கூறியபோதும் அது பல மாதகாலமாகியும் இன்னும் நடக்கவில்லையாம். அனைவரையும் அனுசரித்துப்போக சம்பந்தமானவர் முயற்சிப்பதால் கூட்டமைப்புத் தலைமைக்கும் அவருக்கும் இருக்கும் சம்பந்தத்தை நறுக்கப்போகிறதாம் மேலிடம்.

இந்த தலைமைக்கு மட்டக்களப்பு சிங்கம் நியமிக்கப்படவுள்ளார். கடந்த காலங்களில் எவ்வளவோ நடந்தாலும், அண்மைய திருமலை புத்தர்சிலை விவகாரத்தில் சம்பந்தப்பட்டவர் நடந்துகொள்ளும் விதம் அரசியல் மேலிடத்துக்கு பிடிக்கவே இல்லையாம். கூடியவிரைவில் அவருக்கு கல்தா.

### எச்சரிக்கை

இதுவும் வன்னி விடயம்தான். அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெற்ற உயர்மட்ட சந்திப்பொன்றின்போது வன்னிமாவட்ட 'உஷார்' எம்.பிக்கு கடுமையான அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாம். சம்பந்தப்பட்ட எம்.பியின் செயற்பாடுகள் சில, மேலிடத்தின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்தே இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாம்.

நாடாளுமன்றத்திலும், வெளியிலும் சீருடையினரை வாய்ப்பேச்சால் கிழித்தெறியும் அவர், சீருடையினருடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருப்பதும், அவர்களுக்கேற்றால்போல் செயற்படுவதும் அரசியல்துறைக்கு தெரியவந்துவிட்டதாம். எனவேதான் அண்மைய அரசியல் கூட்டத்தில் அவருக்கு இறுதி எச்சரிக்கை வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த எச்சரிக்கையை 'உஷார்' எம்.பி. மீறினால் அடுத்த முறை அவரின் பெயர் தேர்தல் வேட்பாளர் பட்டியலில் இடம்பெறாதாம்.

(அப்படியானால் இனி நல்ல பிள்ளையாகத்தானே நடப்பார்)

### வண்டவாளம்

நாட்டுக்கும் வீட்டுக்கும் உதாரணமாக இருந்த ஜே.வி.பி. தோழர்கள் இப்போது இரண்டுக்கும் உதாரணம் காட்ட முடியாத நிலையில் இருக்கின்றனர். ஜே.வி.பியின் அமைச்சர் ஒருவர், சுதந்திரக் கட்சி பெண் அமைச்சர் மீது கொண்டிருந்த பாசம் முற்றி இப்போது காதலாகி இருக்கிறதாம்.

ஜே.வி.பி. சுதந்திரக் கட்சி உறவு எப்போது முறியும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள் இப்போது இந்த புதுக்கூட்டு பற்றியும் பேசுகின்றனராம். இந்த காதலின் எதிரொலியாக குறிப்பிட்ட ஜே.வி.பி. அமைச்சரின் வீட்டில் பெரிய குடும்பப் பிரச்சினையாம். இது ஜனாதிபதியின் காதுக்கும் எட்டியுள்ளதாம். தோழர்கள், தோல் இருக்க சுளை விழுங்கும் ஆட்களாக மாறியிருப்பதன் மூலம் அவர்களின் வண்டவாளம் இனித்தான் படிப்படியாக வெளிவரப் போகிறது. ஊருக்கே உபதேசம் செய்யும் ஜே.வி.பியின் பிரசாரப் பீரங்கியும் முதல் மனைவியை விவாகரத்து செய்தவர்தானாம்.

### எல்லாமே எதிர்ப்பு

ஜனாதிபதியின் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் நாட்டின் இரண்டாவது பிரஜையும் அதிருப்தியுடன் தான் இருக்கிறாராம். இந்த கட்டமைப்புக்கு எதிராக தென்னிலங்கையில் பெரும் எதிர்ப்புப் பிரசாரம் எழும்பியுள்ள நிலையில் இது அமுலுக்கு வந்தால் தனது ஜனாதிபதி வேட்பாளர் பிரசாரம் அடிபட்டுப் போகுமென்று அவர் கருதுகிறாராம்.

கடந்தவாரம் ஜனாதிபதியைச் சந்தித்தபோது, இந்த கட்டமைப்புக்கு எதிரானவர்களுடன் பேசுமாறும் இவர் கோரினாராம். பொதுக்கட்டமைப்புக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ள ஜே.வி.பி. தோழர்களுடன் ஜயாவுக்குத் தொடர்புகள் இருப்பதும் அம்மாவுக்குத் தெரியுமென்பதால் இதுபற்றி அம்மா பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லையாம்.

எவ்வாறாயினும் பொதுக்கட்டமைப்புக்கு முழுமையான ஆதரவை வழங்குவதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி தீர்மானித்துள்ளதால் அதற்கெதிராக செயற்படுபவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென்று அம்மா உறுதியாகத் தெரிவித்துள்ளாராம்.

### மறக்க முடியுமா?

பில்கிளிண்டனுக்கு ஜனாதிபதி சந்திரிக்கா வழங்கிய விருந்துபசாரத்துக்கான அழைப்பு இருந்தும் ஐ.தே.க. தலைவர் ரணிலும், உபதலைவர் கருவும் செல்லவில்லையாம். ஆனால், கொழும்பு எம்.பி. மிலிந்த இதில் கலந்து கொண்டது கட்சியிலுள்ள அனைவருக்கும் எரிச்சலை ஏற்படுத்தியுள்ளதாம்.

கட்சியின் கொள்கைகளுக்கமைய மிலிந்த செயற்படுகிறாரா அல்லது அவரது சொந்தக் கொள்கைகளின்படி செயற்படுகின்றாரா என்று கடந்த வாரம் நடைபெற்ற கட்சிக் கூட்டம் ஒன்றில் ஐ.தே.கவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் ரணிலிடம் கேட்டனராம்.

அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த தற்போதைய தருணத்தில் ஜனாதிபதியுடன் ஐ.தே.க. நெருக்கமான தொடர்புகளை கொண்டிருக்கக் கூடாதென்று ஐ.தே.கவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கூறுகின்றனராம். என்னவாக இருந்தாலும் தமது ஆட்சியைக் கலைத்த ஜனாதிபதியை ஐ.தே.கவினர் அவ்வளவு இலகுவில் மறந்து விடுவார்களா?

# ஐரோப்பிய ஒன்றியம் ஓரம் கட்டப்பட்டு விட்டதா?

ஐரோப்பிய ஒன்றியத்தின் அரசமைப்புக்கான திருத்தங்களுக்கு ஆதரவுகோரி அண்மையில் பிரான்சிலும் நெதர்லாந்திலும் நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்புக்கள் தோல்வியைத் தழுவின. இந்தத் தோல்வி அந்த அமைப்பின் எதிர்காலத்தின் முன் கேள்விக்குறி ஒன்றைப் போட வைத்துள்ளதா? அல்லது அந்த அமைப்பில் எத்தகைய பாரிய மாற்றங்களை ஏற்படுத்தும்? இவைதான் இன்று சர்வதேசம், ஐரோப்பிய ஒன்றியம் சம்பந்தமாக கேட்கும் முக்கிய வினாக்களாகும்.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது ஏற்பட்ட பேரழிவுகளில் இருந்து ஐரோப்பா மெல்ல மெல்ல எழுந்து நிற்க முயற்சி செய்து கொண்டு இருந்தபோது அங்கு உள்ள நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்து ஐரோப்பாவை ஐரோப்பியர்களுக்கான 'பொதுவீடாக' மாற்ற வேண்டும் எனக் கண்ட கனாவின் முழு வடிவமே இன்றைய ஐரோப்பிய ஒன்றியம் ஆகும்.

1952 ஆம் ஆண்டு ஐரோப்பிய நிலக்கரி உருக்கு சமூகம் என்ற பெயரில் உருவாக்கப்பட்ட அமைப்புத்தான் ஐரோப்பியர்களுக்கான 'வீடு' ஒன்றைக் கட்டுவதற்கான பயணத்துக்காக எடுக்கப்பட்ட முதல் முயற்சி ஆகும். 1965 இல் இந்த அமைப்பு ஐரோப்பிய பொதுச் சந்தையாக விரிவடைந்தது. பின்னர் அது மெல்ல மெல்ல ஐரோப்பிய கிறிஸ்தவ நாடுகள் அனைத்தையும் உள்வாங்கி இன்றைய ஐரோப்பிய ஒன்றியமாக மலர்ந்தது. இப்பொழுது இந்த ஒன்றியத்தில் 25 ஐரோப்பிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

இவ்வாறு அங்கம் வகிக்கும் நாடுகளின் தலைவர்கள் 2002 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஒன்று கூடி ஒன்றியத்தின் அரசியல் அமைப்பில் திருத்தங்கள் செய்யவேண்டும் எனத் தீர்மானித்தனர். இத் திருத்தங்கள் நடைமுறைக்கு வரவேண்டுமாயின் இந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளில் உள்ள மக்களின் ஆதரவு அதற்கு பெறப்பட வேண்டும். அதற்காகவே இந்த வாக்கெடுப்புகள் நடத்தப்பட்டன. இப்போது மொத்தமாக 11 நாடுகளில் இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது. ஒன்பது நாடுகளின் அது வெற்றிபெற்றுள்ளது.

கடந்த வருடம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் எண்ணிக்கை 15 இல் இருந்து 25 ஆக அதிகரித்தது. இந்த நாடுகள் அனைத்தையும் ஒன்றிணைத்து ஒன்றியத்தின் நடவடிக்கைகளை ஒரு முகப்படுத்துவதே இந்த அரசியலமைப்பு திருத்தப்பட்டதன் நோக்கம் ஆகும்.

திருத்தப்பட்ட அரசமைப்பின் ஊடாக ஒரே நாடாக விரிவடைய இருக்கும் உத்தேச ஐரோப்பாவுக்கு எல்லைகள் இருக்கமாட்டா. மேலும் இந்த அமைப்புடன் சங்கமமாகி உள்ள ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் ஒரு பொது நலனுக்காக தமது இறைமையை குறிப்பிடத்தக்களவுக்கு இழந்திருக்கின்றன. அரசியல், இராஜதந்திர, இராணுவ பலங்களை இந்த நாடுகள் தம் வசம் வைத்திருப்பிலும் தமது பொருளாதார, சமூக வல்லமையை – நலன்களை – தாம் ஒன்று சேர்ந்து அமைத்த இந்த அமைப்புக்காக விட்டுக் கொடுத்திருக்கின்றன.

அமெரிக்க – ரஷ்ய பனிப்போர் முடிவுக்கு வந்த பின்னர், அமெரிக்கா உலகின் தன்னிகரற்ற, பலம் பொருந்திய நாடாக மதிக்கப்படுவதுடன் அதன் ஜனாதிபதி ஒட்பாரும் மிக்காரும் இல்லாத உலக நாயகனாகவும் தலை நிமிர்த்தி நிற்கிறார்.

உலக அமைதிக்கு இந்த நிலைமை பேராபத்தை ஏற்படுத்தும் எனவும் இதற்கு ஈடுகொடுக்கும் வகையில் ஐரோப்பா தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் ஐரோப்பிய தலைவர்கள் உள்ளூர விரும்புகின்றார்கள். உலகில் அதிகாரச் சமநிலையை உருவாக்குவதற்கு சீனாவும் இந்தியாவும் ரஷ்யாவுடன் சேர்ந்து வல்லரசுகளாக உயரும் வரையாவது அமெரிக்காவுக்கு ஈடுகொடுக்கக் கூடியவாறு ஐரோப்பா பலம்பொருந்திய கண்டமாக மிளிரவேண்டும் என சில ஐரோப்பியத் தலைவர்கள் நம்புகிறார்கள்.

ஆனால், அந்த நாடுகளில் உள்ள மக்கள் இவ்வாறு பரந்த ஐரோப்பா ஒன்று உருவாகும் போது தமது நாடுகள் அடையாளத்தை இழந்துவிடும் ஆபத்து உண்டு என்று பயப்பட ஆரம்பித்து இருக்கிறார்கள். அந்தப் பயத்தின் எதிரொலியே பிரான்ஸ், நெதர்லாந்து நாடுகள் அண்மையில் தரிசித்த தோல்விகள் ஆகும்.

ஐரோப்பிய ஒன்றியத்தை ஆரம்பத்தில் உருவாக்கிய ஆறு நாடுகளில் இரண்டு நாடுகள் ஒன்றியத்தின் புதிய அரசமைப்பை நிராகரித்துள்ளமை அந்த அமைப்புக்கு பாரிய சவாலாக அமைந்துள்ளது.

பிரான்சில் 55 சதவிகித வாக்காளர்களும் நெதர்லாந்தில் 61 சதவிகித வாக்காளர்களும் இந்த அரசமைப்பை நிராகரித்துள்ளனர். பிரான்ஸ் நாட்டைத் தொடர்ந்து நெதர்லாந்தும் குறிப்பிட்ட அரசமைப்பை நிராகரித்து இருப்பது ஐரோப்பிய ஒன்றியம் சந்தித்த மாபெரும் தோல்வி என்று லண்டன் சர்வதேச விவகாரங்களுக்கான றோயல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

– மூர்த்தி –

ஒன்றியத்தின் செயற்பாடுகளை ஒருமுகப்படுத்துவதற்கும் அதற்கு வலுவான வெளிவிவகாரக் கொள்கை ஒன்றை உருவாக்குவதற்கும் மேற்கு பால்கன், துருக்கி, உக்ரைன் போன்ற நாடுகளை உள்வாங்கும் யோசனைகளுக்கும் இந்த தேர்தல் முடிவுகள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

தவிர, ஈராக்மீதான அமெரிக்க இராணுவ நடவடிக்கையை தீவிரமாக எதிர்த்த டொமினிக் கியுடில்லெயின் இந்தத் தோல்வியின் பின்னர் பிரான்சின் புதிய பிரதமராக நியமிக்கப்பட்டிருப்பது அந்த இரு நாடுகளின் உறவில் விரிசலை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தோல்விகள் பிரிட்டனையும் சிந்திக்கத் தூண்டி உள்ளது. பிரிட்டிஷ் பிரதமர் ரோனி பிளேயர் தனது நாட்டில் சர்வசன வாக்கெடுப்பு நடத்தக் கோரும் சட்டமூலத்தை இடைநிறுத்துதற்கு வாக்கெடுப்பு ஒன்றை நடத்த இருக்கிறார்.

இவ்வாறான சிக்கல்கள் உருவாகுவதற்கு ஏதுவாக பிரான்ஸ் மற்றும் நெதர்லாந்து மக்கள் ஏன் இந்த புதிய அரசமைப்பை தோற்கடித்தார்கள் என்ற வினா இயல்பாகவே எழுவது தவிர்க்கமுடியாதது. இந்த வினாவுக்கு என்ன பதில்?

பிரான்சில் வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருகிறது. எல்லைகள் அற்ற ஐரோப்பா ஒன்று உருவாகும்போது பொருளாதார நலன்களுக்காக பிரான்சில் அகதிகளாக தஞ்சம் கோருவோரின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரிக்கும் எனவும் அது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் எதிர்காலத்தில் பெரும் சுமையாக மாறிவிடும் எனவும் அந்த நாட்டு மக்கள் ஆத்திரம் அடைந்துள்ளனர்.

பிரான்சின் தொழில் சட்டங்கள் தொழிலாளர்கள் நலன் சார்ந்தவை. அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பவை. அதனால் முதலீட்டாளர்கள் தொழிற்துறைகளில் முதலீடு செய்யத் தயங்குகிறார்கள். அதுமட்டுமா? கடந்த சில வருடங்களாக பிரான்சின் பொருளாதாரம் வளர்ச்சி அடையாது தேக்க நிலையிலேயே உள்ளது. ஆனால் பொருளாதார நலன்களுக்காக தமது நாட்டுக்கு படையெடுப்போரின் தொகை சிறிதும் குறையவில்லை என மக்கள் விசனம் அடைந்துள்ளனர்.

அடுத்து நாம் நெதர்லாந்தின் மீது கவனத்தைத் திருப்பினால், அந்த நாட்டுமக்கள் தமது சிறிய நாட்டை ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் பெரிய நாடுகள் விழுங்கிவிடும் என்று அஞ்சுகிறார்கள்.

* தமது நாட்டின் தலைவிதியை நிர்ணயிப்பதில் தமக்கு எந்தவிதமான பங்கும் இருக்காது என்றும்.

* துருக்கி ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவது ஒன்றியத்துக்கு ஒரு சாபக்கேடு என்றும்.

* ஐரோப்பிய அரசமைப்பு தமது நாட்டின் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும் என்றும் அவர்கள் நினைக்கிறார்கள்.

இவ்வாறு பிரான்ஸ், நெதர்லாந்து மக்களின் ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய அரசமைப்புக்கு எதிரான தீர்ப்பு அந்த அமைப்பை சாகடித்துவிடுமா என்றும் கேட்கப்படுகிறது. ஆனால் அதற்கான வாய்ப்புக்கள் குறைவு.

2000ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியம் தனக்கான இரண்டு இலக்குகளை தயாரித்தது.

1. ஐரோப்பாவை விஸ்தரிப்பது (அது நிறைவேறி உள்ளது)

2. ஐரோப்பாவை பலப்படுத்துவது

தற்போதைய தோல்விகள் எதிர்காலத்தில் இந்த இரண்டாவது இலக்கை எட்டுவதில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று சொல்லப்படுகிறது.

அதனால் ஐரோப்பிய ஒன்றியம் தன்னை உள்முகமாக பலப்படுத்தும் முயற்சிகளிலேயே இப்போது இறங்கலாம்.

(அ) தங்களுடைய நாட்டு மக்களுக்கு சிறந்த வாழ்க்கை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

(ஆ) மக்களின் வருமானத்தை அதிகரித்தல்.

(இ) கல்வி, தொழில்நுட்பத் துறைகளை விருத்தி செய்தல்.

(ஈ) விவசாய கைத்தொழில் துறைகளை போட்டி மயப்படுத்தல்.

(உ) அதிவேக போக்குவரத்து வசதிகளையும் விமானசேவைகளையும் உள்நாட்டில் அதிகரித்தல்.

இவை போன்ற அபிவிருத்திப் பணிகளில் ஐரோப்பிய நாடுகள் இனிமேல் தம்மை முழுமையாக அர்ப்பணிக்கக் கூடும்.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் ஐரோப்பாவை வளம் கொழிக்கும் தேசமாக கட்டி எழுப்பும் போது ஐரோப்பிய ஒன்றியத்துக்கான அரசமைப்பை எல்லா நாட்டு மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய காலம் எதிர்காலத்தில் கனியும்.

ஐரோப்பிய நாடுகள் அனைத்தும் ஒன்றிணைந்த – எல்லைகள் அற்ற ஐரோப்பா அண்மைக் காலத்தில் உருவாகிவிடும் என்று சொல்லிவிட முடியாது. அதற்கான சாத்தியக் கூறுகள் மிகக்குறைவு. ஐரோப்பிய ஒன்றியம் ஓரங்கட்டப்பட்டுள்ளதால் அமெரிக்கா "அப்பாடா" என்று சொல்லி இப்போது நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொள்ளலாம்.

## மகனை மீட்கப் போராடும் தாய் இவள்

**தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் தன் மகனை தூக்குக் கயிற்றின் பிடியிலிருந்து மீட்பதற்குப் போராடும் ஒரு தாயின் உண்மைக் கதை இது.**

**நவீன புறநானூறாக உணர்வும், விறுவிறுப்பும்நிறைத்து இதனைச் செதுக்கியுள்ளார் இளம் எழுத்தாளர் பூங்குழலி.**

# தொடரும் தவிப்பு

சேலம்சிறைக்கு மாற்றப்பட்டவுடன் தன் மகனை கணவரின் அண்ணனோடு அனுப்பிவிட்டார் செல்வி. அந்தக் குடும்பம் ஒரு அகதிகள் முகாமில்தான் வாழ்ந்து வந்தது. அவருக்கு இரண்டு பிள்ளைகள். அதோடு மூன்றாவதாக செல்வியின் மகனையும் வளர்க்கச் சம்மதித்தனர். ஆனால் வறுமைச் சூழல் காரணமாக வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே வந்து பார்த்துச் செல்லும் நிலை. ஒருமுறை இரண்டு வருடம் கழித்துத்தான் பார்க்க முடிந்தது மகனை. பெற்ற பிள்ளையின் வளர்ச்சியை அருகிலிருந்து காண கிடைக்காது போயினும் அந்த ஒரு நாள் சந்திப்பின் ஒவ்வொரு நொடியையும் நினைவில் பொக்கிஷமாய் காத்து, நினைத்து நினைத்து மகிழ்ந்து அவனது அடுத்த வரவிற்காய் காத்திருப்பதிலேயே நாட்கள் சென்றன.

பூந்தமல்லி சிறைக்கு மாறிய பிறகுதான் இன்னமும் கொடுமை. தனித்தனி அறைகளில் 24 மணி நேரமும் பூட்டிவைக்கப்பட்டிருந்தனர்.

பொதுவான பிரச்சினைகளோடு பெண்களுக்கே உரிய பிரச்சினைகள் வேறு. 'நாங்களாவது பரவாயில்லை. திருமணமானவர்கள், குழந்தை பெற்றவர்கள். ஆனால் ஆதிரைதான் பாவம். மிக சின்னப் பெண். திருமணமாகாதவர். மாதவிலக்கு நாட்களில் வயிற்றுவலியால் அவர்படும் வேதனை சொல்லி மாளாது. தனித்தனி அறைகளில் பூட்டப்பட்டிருப்பதால் அருகில் போய் அவருக்கு உதவவோ ஆறுதல் சொல்லவோ முடியாது. அதிகாரிகளிடம் கெஞ்சினாலும் அனுமதிக்கமாட்டார்கள். அவரது அறையிலிருந்து அவர் வலியில் துடிக்கும் சத்தம் கேட்டு எங்களது அறைகளில் நாங்கள் துடித்துக்கொண்டிருப்போம்.'

பூந்தமல்லிக்கு மாற்றப்பட்ட சிறிது நாட்களிலேயே நளினியும் சாந்தியும் கூட தம் குழந்தைகளை வளர்க்க வெளியே அனுப்பிவிட்டனர்.

ஆனால், அந்த சிறிய நாட்களிலே குழந்தைகள் பட்ட துன்பம் கொடுமையானது. 24 மணி நேரமும் அடைத்துவைக்கப்பட்டு குழந்தைகள் முடங்கிவிட்டனர். அதிகாரிகளிடம் காலில் விழாத குறையாக கெஞ்சியும் ஒரு மணி நேரம் கூட அறையில் இருந்து வெளி வர அனுமதிக்கப்படவில்லை.

அதற்காக ஒரு வழக்குப் போட்டே அதைப்பெற முடிந்தது. இப்படி ஒவ்வொரு சிறு சிறு விசயத்துக்கும் போராட்டம், உண்ணாவிரதம் இருந்துதான் பல காரியங்கள் நிறைவேறின. இத்தனைக்கும் அச்சமயம் அவர்கள் வெறும் விசாரணைக் கைதிகள்தாம். குற்றவாளிகள் அல்ல. ஒரு கொடுங்கோலாட்சியின் அரசியல் கைதிகள் போல், போர்க் கைதிகள் போல் நடத்தப்பட்டனர்.

ஒரு வழியாக விசாரணை தீர்ப்பு நாளும் வந்தது.

காலையில் வந்த நீதிபதி, மதியத்திற்கு ஒத்திவைத்த உடனேயே மனமெங்கும் கிலி பற்றிக் கொண்டது. கண்டிப்பாக விடுதலையாகி விடுவோம் என்று அதுவரை இருந்த நம்பிக்கை வழக்கறிஞர்களின் முகத்தைப் பார்த்தவுடன் குறையத் துவங்கியது.

மாலை முதலில் நளினிக்கு தூக்கு என்று வாசிக்கப்பட்டவுடன் அங்கு நிலவிய நிசப்தத்தை உடைத்துக்கொண்டு நளினியின் விசும்பல் கேட்டது. மனம் கலங்கிய போதும் சரி, முதன்மையாக குற்றஞ்சாட்டப்பட்டவர் என்பதால் தான் இப்படி இருக்கும். நமக்கெல்லாம் இருக்காது என்று அந்த வேதனையான கணத்திலும் நம்பிக்கை மனதோரம்.

அடுத்து வரிசையாக சாந்தன், முருகன்... எல்லோருக்கும் தூக்கு, தூக்கு என. அப்போதும் செல்வியின் மனதில் நம்பிக்கை மீதமிருந்தது. இருந்த அந்தத் துளியையும் துடைத்து எறிந்தது, ஏழாவது குற்றம் சாட்டப்பட்டவரான கனக சபாபதிக்கும் தூக்கு என்ற தீர்ப்பு.

கனகசபாபதி வயது முதிர்ந்தவர். அதைக் கருத்தில் கொண்டாவது அவருக்குத் தூக்கு அளிக்க மாட்டார்கள் என்ற நினைப்புக்கு மாறாக அவருக்கும் தூக்கு என்றவுடன் நம்பிக்கை முழுவதுமாகத் தொலைந்து போனவராக தனக்கான தீர்ப்பை எதிர்நோக்கத் துவங்கினார்.

ஆயிற்று... 26 பேருக்கும் தூக்கு. வரலாறு காணாத தீர்ப்பு முடிந்தவுடன் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டனர். மறுநாள் 26 பேரையும் குழுக் குழுவாக பிரித்து வேறு வேறு சிறைகளுக்கு அனுப்பினர். நல்ல காலமாக பெண்கள் ஐவரும் ஒன்றாக வேலூர் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு அனைவருக்கும் கைதிகளுக்கான உடை கொடுக்கப்பட்டது. அந்த உடையை அணிந்தவுடன் அதுவரை அடக்கிவைத்த கண்ணீர் பீறிட்டுக் கிளம்ப ஒருவரையொருவர் கட்டிப் பிடித்து அழுதனர்.

"வாழ்வே முடிந்ததாக நினைத்த நாங்கள் இன்று மீண்டும் உயிரோடு உங்கள் முன் நிற்கிறோம். அதற்குக் காரணம் நெடுமாறன் ஐயாவும் குழுவினரும். அவர்கள் எமக்கு மறுதாய் போன்றவர்கள். எங்கள் தாய் எங்களைப் பெற்று வளர்த்தார். ஆனால், இன்று சாவின் விளிம்பில் நின்றிருந்த எம்மை மீண்டும் உயிர்பெற செய்திருக்கிறார்கள். இவர்கள் இல்லையென்றால் என்றோ எம் வாழ்வு முடிந்திருக்கும்" -செல்வி சொல்லி நிறுத்தியபோது மீண்டும் அரங்கே அதிர்ந்தது. எங்கும் உணர்ச்சிப் பெருக்கம்.



சொன்னவை போக,
இன்னும் அவர் மனதிற்குள்
புதைந்து கிடப்பவை எத்தனையோ?

"இன்றைக்கு நாங்கள் வெளியே வந்துட்டாலும் இன்னும் உள்ள எங்க சகோதரங்க ஏழுபோரு இருக்காங்க. அதில் ஆயுள் தண்டனை வழங்கின மூன்று பேரவது பரவாயில்ல. ஆனா, நளினி, முருகன், சாந்தன், அறிவு இவங்க உயிரையும் காப்பாத்தணும். அதற்கான பொறுப்பு எங்களுக்குக்கூடுதலா இருக்கு. அவங்களும் வர்றப்பதான் நாங்க வெளிய வந்த மகிழ்ச்சியை எங்களால கொண்டாட முடியும். அதுலயும் நளினியை நினைச்சா ரொம்ப வேதனையா இருக்கு, ஆண்கள் மனநிலை தெரியல. நான் பார்க்கல. ஆனா, நளினி... இத்தனை நாளும் நாங்க 5 பேரும் ஒண்ணா ஒருத்தருக்கொருத்தர் ஆறுதலாக இருந்துட்டோம். இப்ப அந்தப் பொண்ணு மட்டும் தனியாளா மனம் விட்டு பேசக்கூட துணையில்லாம நிர்க்கதியாக நிக்குது. நாங்க நாலு பேரும் வெளிய வந்தப்ப, கம்பிய பிடிச்சுக்கிட்டு அதுநின்றிருந்த கோலம் இன்னும் என் மனச அறுக்குது.

முதன் முதலா ஐயா வந்து இந்த மாதிரி குழு அமைச்சு நிதி வசூல் பண்ணி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நடத்தப் போறோம்னு சொன்னப்ப, உண்மைய சொல்லணும்னா - எனக்கு முழு நம்பிக்கை இல்ல. இது நடக்குமா, இது அரசியல் வழக்காச்சே - உச்ச நீதிமன்றத்தில வழக்கு நடத்தனும்னா நிறைய செலவாகுமே. அந்த அளவுக்கு நிதி வசூலிக்க முடியுமா, மக்கள் ஆதரவு கிடைக்குமான்னு பல குழப்பங்கள மனசுல வைச்சுக்கிட்டுதான் சம்மதம் தெரிவிச்சேன். ஐயா மேல நம்பிக்கை இந்தது. ஆனாலும், பயமும் இருந்தது. ஆனா வெற்றிகரமா வழக்கு நடத்தி எங்கள வெளிய கொண்டுவந்துட்டாங்க ஐயாவும் குழுவினரும். இப்பகூட இந்த சுற்றுப் பயணத்துக்குக் கூப்பிட்டபோது மக்கள் நம்மள எப்படி வரவேற்பாங்களோன்னு பயமா இருந்தது. ஆனா, தமிழ்நாட்டு மக்கள் ரொம்ப தெளிவா விசயங்கள புரிஞ்சு வைச்சிருக்காங்கன்னு ஊர் ஊராப் போய் உங்கள மாதிரி எல்லோரையும் பார்க்கிறப்ப நல்லா தெரிஞ்சுது. அந்தத் தெளிவும் புரிதலும் இருந்ததால தான் நிதியை அள்ளிக் கொடுத்து எங்கள வெளியகொண்டு வந்திருக்கீங்க. அதே மாதிரி மிச்சம் இருக்கிற நாலுபேராட உயிரையும் காப்பத்துவீங்கன்ற நம்பிக்கை எனக்கு முழுமையா இருக்கு. தயவு செஞ்சு அவங்களையும் காப்பாத்திடுங்க..... "குரல் கம்ம, கண்களில் நீர் கசிய, கை கூப்பி தன் பேச்சை முடித்தார் செல்வி.

கூடியிருந்த அனைவர் கண்களிலும் நீர் எட்டிப்பார்த்தது. கைத்தட்டக்கூட தோன்றாமல் அரங்கமே அமைதி காத்தது. அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு ஒரு குரல். "பேரறிவாளன் வாழ்க...." என ஓங்கி ஒலித்தது.

அடுத்த நொடி அரங்கமே எழுந்து நின்று முழக்கமிடத் துவங்கியது.

"காப்பாற்றுவோம்! காப்பாற்றுவோம்!!
4 உயிர்களையும் காப்பாற்றுவோம்."
"பேரறிவாளன் வாழ்க!"
"நளினி வாழ்க!"
"முருகன் வாழ்க!"
"சாந்தன் வாழ்க!"

சற்று நேரம் ஒரே உணர்ச்சி வெள்ளமாய் இருந்த அந்த அரங்கை மீண்டும் அமைதிப் படுத்தியது அறிவுமதியின் குரல்.

"கண்டிப்பாக நால்வரையும் காப்பாற்றுவோம். இது உறுதி. சகோதரி செல்வி பல தகவல்களையும், கொடுமைகளையும் கூறியபோதும் தன் வாழ்வில் இன்னமும் தொடரும் கொடுமையை கூறாமல் விட்டுவிட்டார். ஆம் விடுதலையாகிய பின்னரும் அவர் வாழ்வின் துயரங்கள் முடியவில்லை. செல்வியின் கணவரும் வழக்கிலிருந்து விடுதலையான போதும், ஈழத் தமிழர் என்ற காரணம் காட்டி அவரை சிறப்பு முகாம் எனும் சிறையில் அடைத்து வைத்துள்ளது அரசு. 8 மாத கைக்குழந்தையாக பிரிந்த மகனோடும் மனைவியோடும் சேர்ந்து வாழ விடுதலையான பிறகும் முடியவில்லை அவரால். 2 வயதில் கணவரின் அண்ணன் குடும்பத்தில் வளர்ந்த மகன், இன்றும் தன்னைப் பெற்றவர்களை சித்தி சித்தப்பா என அழைக்கும் கொடுமை. பெற்ற மகனே தன்னை தாயாக ஏற்றுக் கொள்ளாத நிலையில் தூக்குக் கயிற்றிற்குத் தப்பி, விடுதலையாகி உயிர் வாழ்ந்து தான் என்ன பயன் என்று மனம் வெதும்பி நிற்கும் இந்தத் தாயைப் பாருங்கள்.

(தவிப்பு தொடரும்.....)

**யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?**

# என்னை மணாளனாக ஏற்றுக் கொள்வாளா?

மகாகவி தாகூரின் சாந்திநி கேதனத்திற்கு காந்திஜி சென்றிருந்தார். காந்திஜியை அவருக்காக ஒதுக்கப்பட்டிருந்த தனி அறைக்கு அழைத்துச் சென்றார் மகாகவி.

அந்த அறையின் அலங்காரத்தைப் பார்த்து வியப்படைந்த காந்திஜி, "இது என்ன புது மாப்பிள்ளையும் பெண்ணும் தங்கப்போகும் அலங்கார அறையா?" என்று கேட்டார்.

"ஆம்! எங்கள் சாந்திநிகேதனம் என்ற அழகு மங்கை தங்கள் ஆத்ம அழகில் மயங்கிவிட்டாள். உங்களையே மணந்து கொள்வதென்றும் முடிவு செய்து விட்டாள். இன்று உங்கள் இருவருக்கும் திருமணம்!" என்றார் தாகூர் நகைச்சுவையாக.

"அப்படியா! நான் பல்லுப் போன கிழவனாயிற்றே! என்னை உங்கள் சாந்தி நிகேதன் அழகு மங்கை மணாளனாக ஏற்றுக் கொள்வாளா?" என்றார் காந்திஜி பொக்கைவாய் திறந்து சிரித்தபடியே!



"உங்கள் பொக்கை வாய்ச் சிரிப்பில் தான் அவள் மயங்கி சொக்கிப் போய்விட்டாளே!" என்றார் தாகூர்.

"அது சரி, எனக்குத்தான் திருமணமாகிவிட்டதே! என் மனைவி கஸ்தூரிபாய் மிகவும் பொறாமைக்காரி ஆயிற்றே. உங்கள் சாந்திநிகேதன் மங்கை அவளுடன் தினமும் சண்டை போடவேண்டியதுதான்" மீண்டும் ஒரு ஆட்பேசத்தை கிளப்பினார் காந்திஜி.

இதைக் கேட்ட தாகூர் விழுந்து விழுந்து சிரிக்க காந்திஜியும் குழந்தைபோல குதூகலமாக சிரித்தார்.

"ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள், மாலையில் உங்களைச் சந்திக்கிறேன்" என்று கூறி தாகூர் அந்த அறையை விட்டுச் சென்றார்.

மாலையில் திரும்பி வந்த தாகூருக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. காலையில் கலைக் கூடமாக காட்சி தந்த அந்த அறை, மாலையில் அலங்கோலமாக இருந்தது. மலர்களும் தோரணங்களும் குப்பை போல ஒரு மூலையில் ஒதுக்கப்பட்டு கிடக்க, பஞ்சும், நூலும் தூசும் தும்புமாக அறை முழுவதும் பரவிக் கிடந்தன. இவற்றிற்கு மத்தியில் காந்திஜி அமைதியாக நூல் நூற்றுக் கொண்டிருந்தார்.


"இது என்ன, ஏன் இப்படி கிடக்கிறது?" என்று பதறிப் போய் கேட்டார் தாகூர்.

"நான்தான் அப்போதே சொன்னேனே! உங்கள் சாந்தி நிகேதன் மங்கை கிழவனான என்னை விரும்பமாட்டாள் என்று" – இப்படிச் சொல்லி சிரித்தார் காந்திஜி.

"ஐயோ பாவம் கஸ்தூரிபாய். உங்களோடு எப்படித்தான் குடும்பம் நடத்தப் போகிறாரோ!" என்று அங்கலாய்த்தவாறே அங்கு அமர்ந்து காந்திஜி நூல் நூற்றுக் கொண்டிருப்பதை வேடிக்கை பார்க்கத் தொடங்கினார் தாகூர்.

# ஹலோ! ஹலோ!! கையடக்க தொலைபேசி

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை கையடக்கத் தொலைபேசி ஒன்றை வைத்திருக்க வேண்டும் என்று இப்போது விரும்புகிறார்கள். எங்கு திரும்பினாலும் கையடக்கத் தொலைபேசியின் "ஹலோ ஹலோ" குரல்தான் கேட்கிறது. அதன் ஆரம்ப சரித்திரத்தை சிறிதளவாவது நாம் தெரிந்து கொள்வோமா?



1972 ஆம் ஆண்டு மோட்டரொல்லா (MOTOROLA) நிறுவனம் தான் முதன் முதலில் கையடக்கத் தொலைபேசி ஒன்றை வடிவமைத்து 1984ஆம் ஆண்டு அதை பாவனையாளர்களுக்காக சந்தைப்படுத்தியது.

ஆம், அதை வடிவமைத்து சந்தைப்படுத்த சுமார் 10 ஆண்டு காலம் தேவைப்பட்டது. பரீட்சார்த்தமாக மோட்டரொல்லா நிறுவனம் முதலில் தயாரித்த கையடக்க தொலைபேசியின் நிறை என்னவென்று தெரியுமா? இரண்டு இறாத்தல். அதன் விலை 3995 டொலர். இலங்கை ரூபாவில் சுமார் 3, 99, 500 ரூபா. அரைமணித்தியாலத்துக்கு ஒரு முறை அதைச் சார்ஜ் செய்ய வேண்டி இருந்தது. குறிப்பிட்ட நிறுவனத்தின் அபிவிருத்திப் பிரிவைச் சேர்ந்த ரூடி குரோலொப் (Rudy krolopp) என்பவரே இதை வடிவமைத்தார். அதே நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பிரிவைச் சேர்ந்த மார்டின் கூப்பர் என்பவரின் வேண்டுகோளுக்கு இணங்கவே ரூடி இந்த முயற்சியில் இறங்கினார்.

1984 ஆம் ஆண்டு கையடக்கத் தொலைபேசி சந்தைக்கு விடப் பட்டபோது அதை முண்டியடித்து வாங்குவதற்கு எத்தனை பெரிய கூட்டம். அப்பப்பா?

இந்தத் தொலை பேசியை வடிவமைத்து சிறிய அளவுடைய தாகத் தயாரிப்பதற்கு ஏற்பட்ட முன்னோடிச் செலவு 100 கோடி ரூபா வாகும்.

குரோலொப்பும் மார்டின் கூப்பருமே கையடக்க தொலைபேசியின் 'தந்தையர்' என அழைக்கப்படுகின்றனர். குரோலொப்புக்கு இப்போது வயது 72. கையடக்க தொலைபேசியின் தொழில்நுட்பம் வேகமாக வளர்ந்து விட்டது என்று சொல்லுகிறார் அவர்.




# அமேசன் காடுகள்

உலகில் மிகப்பரந்த நிலப் பரப்பைக் கொண்ட பிரேசிலில் உள்ள அமேசன் காடுகளின் இயற்கை வளங்கள் மிக வேகமாக அழிக்கப் பட்டுவருகின்றன. 2003–2004க்கான காலப் பகுதியில் 26000 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்ட பிரதேசத்தில் இந்தக் காடுகள் அழிக்கப்பட்டிருக்கின்றன. அமேசன் காடுகள் தான் உலகில் உள்ள 30வீதமான மிருகங்களினதும், மரங்களினதும் காப்பரணாக இருந்து வருகிறது.




மேலும்

* இந்தக் காடுகளிலுள்ள ஒரு சதுர கிலோமீட்டர் நிலப் பரப்பில் 90,000 தொன் நிறையுள்ள உயிருள்ள தாவரங்கள் காணப்படுகின்றன.

* உலகுக்குத் தேவையான ஒக்சிஜனில் 20வீதத்தை இந்தக் காடுதான் உற்பத்தி செய்கின்றன.


*20 இலட்சத்து 50 ஆயிரம் பூச்சி இனங்கள் இங்கு அடையாளம் காணப்பட்டிருக்கின்றன.

*தொடர்ச்சியாக புதிய புதிய பூச்சி இனங்கள் இங்கு கண்டுபிடிக்கப்பட்டுவருகின்றன.

# சந்திரனில் நிரந்தர ஆய்வு நிலையம்


## அமெரிக்காவின் தீவிர ஆராய்ச்சி

அமெரிக்கா சந்திரனுக்கு அனுப்பிய லூனா புரஸ்பெக்டர் என்ற செய்மதி சந்திரனில் தண்ணீர் இருப்பதாக தகவல் அனுப்பியதற்கு இணங்க இது சம்பந்தமான ஆராய்ச்சிகள் தொடரப்பட உள்ளன. இதற்கான ஆய்வு வேலைகளில் அமெரிக்காவின் நாசா ஆய்வு நிலையம் தீவிரமாக இறங்கி உள்ளது.



அமெரிக்கா சந்திரனுக்கு முதலில் அனுப்பிய மனிதன் நீல் ஆம்ஸ்ரோங் ஆவார். அவரைத் தொடர்ந்து பல விண்வெளிவீரர்கள் சந்திரனுக்குச் சென்று வந்து விட்டனர். 1972இல் அப்பலோ 17 என்று பெயரிடப்பட்ட செய்மதியில் ஜூஜீன் சர்னைன், ஜெத் சிமித்ஸ் என்று அழைக்கப்படும் இரண்டு விண்வெளி விஞ்ஞானிகள் சந்திரனுக்குச் சென்று வந்தனர். இவர்களுக்குப் பின்னர் வேறு யாரும் அமெரிக்காவால் சந்திரனுக்கு அனுப்பப்படவில்லை. இப்போது திரும்பவும் சந்திரனைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட அமெரிக்கா முன் வந்துள்ளது.

சந்திரனில் தண்ணீர் இருப்பது உறுதி செய்யப்பட்டால் அங்கு மனிதர்கள் வாழக்கூடிய சூழலை உருவாக்கி நிரந்தர ஆய்வு நிலையம் ஒன்றை நிறுவ முடியும் என்று அமெரிக்கா நம்புகிறது. அதிலிருந்து மற்றைய கிரகங்களைப் பற்றிய ஆராய்ச்சிகளை முன்னெடுக்க முடியும் என்றும் அது யோசித்து வருகிறது.



# கிராபோலஜி (Graphology) என்றால் என்ன?

ஒரு மனிதனின் நடை உடை பாவனைகளையும் மனப்போக்கையும் அவனது கையெழுத்தை வைத்து அறிவியல் பூர்வமாக ஆராய்வது கிரபோலஜி ஆகும்.

இதிலிருந்து பிறந்த கிராபோதிரபி என்பது கிராபோலஜியை பயன்படுத்தி ஒருவரது உளவியல் பிரச்சினைகளைக் கண்டு பிடிப்பதாகும்.



ஒருவர் எழுதும் போது ஏற்படும் அழுத்தம், அவர் எழுத்துக்கு எழுத்து அல்லது வார்த்தைக்கு வார்த்தைவிடும் இடைவெளி, எழுத்துக்களையும் வார்த்தைகளையும் நேராகவோ சாய்த்தோ அவர் எழுதும் பாங்கு, ஆங்கில எழுத்துக்களான ஐ மற்றும் டி மீது அவர் போடும் கரும் புள்ளி அல்லது கோடு ஆகியவை எழுதுபவரின் குணாதிசயங்களை தெளிவாகப் புலப்படுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது. ஜோதிடத்தில் இருந்து குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பது வரை பலதுறைகளில் கிராபோலஜி இப்போது பயன் படுத்தப்பட்டு வருகிறது. ஒருவரது மனம்போல இன்னொருவரது மனம் இல்லை. அதுபோல ஒருவரது கையெழுத்துப்போல இன்னொருவரது கையெழுத்தும் இல்லை என்பதும் உண்மை.

# மங்காபீ குரங்குகள்

இதுவரை யாரும் அறியாத புதிய குரங்கு இனம் ஒன்று தன்சானியாவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த புதிய இனக் குரங்கு மங்காபீ என்று அழைக்கப்படுகிறது. இது பிரவுண் நிறமுடையது. இந்தக் குரங்குகள் மரங்களில் 2500 மீற்றர் உயரத்தில் வாழ்கின்றன.



அவற்றுக்கு பலத்த அச்சுறுத்தல் இருந்து வந்ததால் அமேசன் மலைகளில் இப்போது சுமார் 1000 குரங்குகள் வரையில் காணப்படுவதாக மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

கடும் குளிரில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நீண்ட பிரவுண் நிறத்தை உடைய மயிர்களை அவை கொண்டிருக்கின்றன.

மங்காபீ இனக்குரங்குகள் பல்லாயிரம் ஆண்டுகளாக இந்தக் காடுகளில் வாழ்ந்து வருவதற்கான சாத்தியக் கூறுகள் தென்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இவை போல் இன்னும் பலவகையான உயிரினங்கள் இங்கு வாழ்ந்து வரலாம் எனவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

### மிகப் பெரிய காற்றாடி

* காற்றின் உதவியால் அதிக மின்சாரம் தயாரித்து தரும் உலகின் மிகப்பெரிய இரண்டு காற்றாடிகள் ஜேர்மன் நாட்டில் உள்ள எம்டன் நகரில் இருக்கின்றன. இங்குள்ள ஒரு காற்றாடியினால் காற்றின் உதவியுடன் 4500 கிலோ வாட் மின்சாரத்தை தயாரிக்க முடியும்.

### நரம்புகளும் சுவைகளும்

1. நாக்கின் உப்புச் சுவையை அறியும் நரம்பு மொட்டுக்கள் நுனிநாக்கில் உள்ளன.

2. இனிப்புச் சுவையை அறியும் நரம்பு மொட்டுக்கள் நடுநாக்கில் இருக்கின்றன.

3. கசப்புச் சுவையை உணரும் நரம்பு மொட்டுக்கள் கடைசிப் பகுதியில் இடம்பெற்று இருக்கின்றன.

4. புளிப்புச்சுவையை அறியும் நரம்பு மொட்டுக்கள் நாக்கின் இரு பக்கங்களிலும் காணப்படுகின்றன.

### சுறாக்கள் பல

* சுறாக்களில் ஏராளமான வகைகள் உள்ளன. அவை பூனைச் சுறா, கத்திச் சுறா, நாய்மீன் சுறா, வால் சுறா, பால் சுறா, தேவதைச் சுறா, திமிங்கிலச் சுறா, கம்பளச் சுறா, கழுதைச் சுறா, கொம்பல்சுறா, வெண் சுறா என்பவை ஆகும்.

# அயர்லாந்து

நாட்டின் முழுப்பெயர்: அயர்லாந்து ( ஐரிஷ் குடியரசு).

சனத்தொகை: 30 லட்சத்து 96 ஆயிரம்.

தலைநகரம்: டப்ளின்.

நாணயம்: ஐரிஷ் பவுண்ட்.


மக்கள்: ஐரிஷ் இனத்தவர், சிறுபான்மை குடியேற்றவாசிகள்.

மொழி: ஆங்கிலம், ஐரிஷ்.

மதம்: 95 வீதம் றோமன் கத்தோலிக்கர், 3.4 வீதம் புரட்டஸ்தாந்து மதத்தவர்.

கைத்தொழில்: கம்ப்யூட்டர் மென்பொருள், தகவல் தொழில்நுட்பம், உணவுப்பொருள், மதுபானம் வடித்தல், புடைவைத் தொழில், மருந்துப் பொருட்கள், உல்லாசப் பயணத்துறை, விவசாயம்.

கடந்த 300 ஆண்டுகளாக ஆங்கில ஆட்சிக்கு எதிராக அயர்லாந்து போராடிவந்தது. 1921 ஆம் ஆண்டு அயர்லாந்தின் தென் பகுதிக்கு சுதந்திரம் கிடைத்தது. 1948ஆம் ஆண்டு அயர்லாந்து குடியரசாக அது பிரகடனப் படுத்தப்பட்டது. அதனது ஐரிஷ் பெயர் ஈரி (ERIE) என்பதாகும். இந்த நாடு எப்பொழுதும் செழிப்பாக பச்சைப் பசேலென்று காட்சி அளிக்கும். வட அயர்லாந்து ஐக்கிய இராச்சியத்தின் ஒரு பகுதியாக இப்போதும் உள்ளது. ஐரிஷ் மக்கள் தோழமை உணர்வுடன் பழகுதல், குதிரைப் பந்தயம், நடனமாடுதல் ஆகியவற்றில் புகழ்பெற்றவர்கள்.




# ஆதி தமிழ் எழுத்துவடிவம்!

சங்க இலக்கியங்களால் அறிவார்ந்த உலகுக்கு அறிமுகமானவர்கள் தமிழர். அவ்வாறு சீர்த்தியான இலக்கியங்களால் உலகம் அறியப்பெற்ற ஓர் இனம் தனது மொழியின் பண்டைக்கால எழுத்து வடிவங்களை நீண்ட நெடுங்காலம் அறியாமலிருந்தது பாரிய குறைபாடாகும். இந்த அறியாமை அவர் தம் முற்கால வரலாற்றையும் முழுமையாக அறிய முடியாமற் செய்துவிட்டதென்பது உண்மைதான். அதன் கண் இதனை ஒரு மோசமான அறியாமை என்றுதான் கொள்ளல்வேண்டும்.

*வடமொழியினர் வரிவடிவெழுத்தை தமிழ் மொழியினரிடமிருந்து கற்றுக் கொண்டனர் என்று சாற்றுகிறார் பிரபல ஆராய்ச்சி அறிஞரான றைஸ் டேவிட்ஸ்*

முன்னைய தமிழகத்தின் மீதான சாளுக்கியர், களப்பிரர் பின்னர் தெலுங்கர் போன்றோரின் படையெடுப்புக்களாலும் ஆட்சிகளாலும் இந்த அறியாமை தோன்றியதாகச் சொல்லமுடியாது. அவ்வாறாயின் இதற்கான உண்மைக் காரணம் என்ன?


(படம் 2)

உலகின் பழைமை மொழிகளான கிரேக்கம், இலத்தீன், சீனம் போன்று தமிழும் பழைமையான மொழியென மொழியியல் அறிஞர்கள் கூறுவர். அத்தகைய பழைமை மொழியான தமிழின் ஆதி எழுத்து வடிவங்களை இடைக்காலத்தில் தமிழர் மறந்து போனமைக்கு காரணம் இல்லாதிருக்குமா?

சீன மொழிக்கு நாலாயிரம் ஆண்டுகளுக்கு மேலான வரலாறு உண்டு. ஆனால், அதனை விட கூடுதல் வரலாறுடையதாகத் தமிழ் மொழி விளங்குவதை நாம் அறிய முடியும்.

சீன மொழிக்குள் சுமார் 300 தமிழ்ச் சொற்களும், 1000 க்கு மேலான சிதைவுச் சொற்களும் இருப்பதாக அறியப்படுகிறது. யப்பானிய மொழிக்குள்ளும் தமிழ்ச் சொற்கள் இருப்பதான கருத்து வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

ரெவ.கால்டுவெல், டாக்டர் பரோ போன்றோர் வட மொழிக்குள் பல நூற்றுக் கணக்கான தமிழ்ச் சொற்கள் இருப்பதாகச் சொல்லியிருப்பதையும் இங்கு சுட்டிக்காட்டுதல் பொருந்தும். இவை யாவும் தமிழ் மொழி மிகப் பழைமையான மொழி என்பதைச் சாற்றி நிற்கின்றன.

இனி எழுத்து வடிவங்களைப் பொறுத்த வரை ஆரியர் முதன்முதல் இந்திய துணைக் கண்டத்திற்குள் நுழைந்தபோது சிந்து நதி தீரத்தில் எழுத்து வடிவம் வழங்கி வந்தமை வரலாறு. அவ்வாறு தலை வாசலில் வரலாறு அறிந்த பின்னரும் காலப்போக்கில் தப்பிதமான கதைகளையே ஆரியர் பரப்பினர்.

வடமொழிக்கு நீண்ட காலம் எழுத்து வடிவம் இருக்கவில்லை. தவிரவும் அம் மொழிக்குப் பெயரில்லாததாலேயே அது 'வடமொழி' என அழைக்கப்பெற்று வந்தது. பின்னர் அது 'சமஸ்கிருத' என்றாயிற்று. சம்ஸ்கிருத என்பதுகூட மொழியின் பெயராகத் தோன்றவில்லை. 'சம்ஸ்கிருத' என்றால் 'நன்றாகச் செய்யப்பட்டது' என்று பொருள். முன்னர் வட மொழிக்கு சில இலக்கண நூல்கள் இருந்திருப்பினும் பாணினி என்பவர் இலக்கணம் எழுதிய பின்னரே அது நன்றாகச்செய்யப்பட்டது (சம்ஸ்கிருத) என்ற பெயரைப் பெற்றது.

**இவ்வாரம் இலக்கியப் பொழில் பகுதியில் 'ஆதி தமிழ் எழுத்து வடிவம்!' என்ற ஆக்கம் இடம்பெறுகிறது.**

உண்மை அப்படியிருக்க வடமொழி தேவபாஷை என்றும், தமிழ் மொழி மானிட மொழி என்றும், வட மொழியிலிருந்தே தமிழ் மொழி பல சொற்களைக் கடன் பெற்றதாகவும் ஆரியர் அவிழ்த்துவிட்ட கதைகள் கொஞ்சநஞ்சமல்ல.

வட மொழியினர் (ஆரியர்) வரிவடிவெழுத்தை தமிழ் மொழியினரிடமிருந்து கற்றுக்கொண்டனர் என்று ஆங்கிலேயே அறிஞரான றைஸ் டேவிட்ஸ் கூறியிருப்பதை எந்த வடமொழி அறிஞராலும் மறுக்க முடியவில்லை.


1925ஆம் ஆண்டு சிந்துவெளியில் அகழ்வாராய்ச்சி நடைபெற்றிருக்காவிட்டால் 5500 ஆண்டுகளுக்கு மேலான திராவிடரின் நாகரிகத்தை மட்டுமன்றி அவர்களின் பழைமையான எழுத்து வடிவங்களையும் கூட யாராலும் அறிய முடியாமற் போயிருக்கும். அகழ்வாராய்ச்சி முடிவுகள் வெளிவந்த பின்னர் அதுகாலவரை ஆரியர் புனைந்துவைத்த கதைகள் யாவும் மங்கிப் போயின. ஆயினும், மழைவிட்டும் தூவானம் போகவில்லை என்ற நிலைதான்.

தமிழின் வரிவடிவெழுத்து அமைப்பை தமது மொழிக்கும் கையாண்டு பின்னர் வடமொழியிலிருந்தே பலவற்றை தமிழ் மொழி கடன் வாங்கியதாக ஆரியர் கூறி வருவதை என்னவென்பது? தமிழ்ச் சொற்களைச் சிதைவாகப் பிரயோகித்து அவற்றை வடமொழிச் சொல் என்று கூறுவதை எப்படியென்பது?

பழந்தமிழ் எழுத்துக்கும் கிரேக்க மொழி எழுத்துக்கும் உருவ ஒற்றுமையிருக்கிறதென்றும் கிரேக்க மொழியிலுள்ள மெய்யெழுத்து பதினேழில் ப, க, த, ல, ம, ந, ர, ச எனும் எட்டும் ஒலியுருவத்தால் தமிழ் மொழியினை ஒத்தவையென்றும் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் தனது 'யவன புரத்துக் கலைச் செல்வம்' எனும் கட்டுரையில் கூறுகிறார்.

சுவாமி விபுலானந்தர் 'பழந்தமிழ் எழுத்து' என்று குறிப்பிட்டிருப்பது தமிழ்ப்பிராமி எழுத்து வடிவத்தையாகும். இக்கட்டுரையுடன் பழந்தமிழ் எழுத்து வடிவமான தமிழ்ப்பிராமி எழுத்து வடிவம் தரப்பட்டுள்ளது. (படம் 1) இதில் 8 உயிர் எழுத்துக்களும், 18 மெய்யெழுத்துக்களும், ஒன்பது உயிர்மெய்யெழுத்துக்களும் உள்ளன. (கிரேக்க மொழியில் 7 உயிர் எழுத்துக்களும் 17 மெய்யெழுத்துக்களும் இருப்பது குறிப்பிடத்தக்கது)

'ஐ' என்ற ஒலிக்குறி அ, இ என்ற உயிர் எழுத்துக்களின் சேர்க்கையால் பெறப்படும். 'ஔ' என்ற ஒலிக்குறி அ, உ என்ற உயிர் எழுத்துக்களின் சேர்க்கையால் பெறப்படும். இங்கு தரப்பட்டுள்ள தமிழ்ப்பிராமி எழுத்துக்களில் இ, ஈ ஆகிய இரு எழுத்துக்கள் இடத்திற்குப் பொருத்தமாக ஈ, இ என்றும் வாசிப்புச் செய்ய முடியும். பழங்கால எழுத்து வடிவமான தமிழ்ப்பிராமி எழுத்துக்களில் 15 எழுத்துக்களின் சாயல் ஐரோப்பிய (பெரிய, சிறிய) எழுத்துக்களில் பல வகைகளில் படிந்திருப்பது கவனிக்கத்தக்கது.


(படம் 3)

நிச்சயமாக தமிழ்ப்பிராமி எழுத்து வடிவம் ஐரோப்பிய எழுத்து வடிவங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படவில்லையாகையால் அவ்வெழுத்துக்கள் எவ்வளவு பழைமையிக்கவை என்பதை எவரும் ஊகித்து அறிந்திட முடியும்.

இப்பழைமையான ஆதித்தமிழ் எழுத்து வடிவங்களே இடைக்காலத்தில் தமிழரால் மறக்கப்பட்டிருந்தன. இன்றைய தமிழ் எழுத்து வடிவம் சுமார் கி.பி.7ஆம் நூற்றாண்டில் பல்லவர் காலத்தில் தோற்றம் பெற்றதென்பதையும் நம்மில் பலர் அறியார்.

சுமார் 9ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் தமிழ் வட்டெழுத்து வடிவமும் வழங்கி வந்திருப்பதை அறியமுடிகிறது.

இன்றைய நாகரிக உலகில்கூட உலக மொழிகளில் சுமார் 1,300 மொழிகளுக்கு எழுத்து வடிவம் இல்லை. அவை ஊமை மொழிகள் (DEAD LANGUAGE) என அழைக்கப்படும். ஆனால், பழைமை மொழியான தமிழ் மொழியின் ஆதி எழுத்து வடிவங்கள் இடைக்காலத் தமிழரால் அறியப்படாது போனமைதான் ஒரு பேருண்மை.



(படம் 1)

வடமொழியை (சமஸ்கிருத) தேவ மொழியென்றும் தமிழ் மொழியை மானிட மொழியென்றும் பிரசாரம் செய்த ஆரியர் தமிழ் மொழிகளுக்குள் வடமொழிப் பதங்களையும் புகுத்தத் தலைப்பட்டனர். கேட்பார் யாருமில்லை. தூய்மையான பக்தி மயப்பட்டிருந்த தமிழர் அதனை கண்மூடி ஏற்றனர். அதனால் பெயர்ச் சொற்களில் மட்டுமன்றி பேச்சு மொழிக்குள்ளும் வடமொழி தலைநீட்டலாயிற்று.

**வாராவாரம் வெளிவரும் 'இலக்கியப் பொழில்' பகுதியில் இலக்கிய அறிஞர்கள் மட்டுமல்ல இலக்கிய ஆர்வலர்களும் எழுதலாம். கட்டுரைகள் யாவும் தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.**

'சோறு தின்றாயா?' என்பதை 'போஜனம் நிவேதனம் ஆயிற்றா' என்று சொல்லல் வேண்டுமெனவும், அதுவே மரபுத் தமிழ் என்றும் தமிழ்நாட்டில் வானொலியிலும் பத்திரிகையிலும் பிரசாரப்படுத்தப் பட்டது. அப்படி பிரசாரம் செய்தவர் பல சங்க கால நூல்களை பதிப்பித்துத்தந்த டாக்டர் உ.வே.சுவாமிநாத ஐயர் அவர்கள் தான். ஆனால் 'போஜனம் நிவேதனம் ஆயிற்றா' என்று சொல்வதே தமிழ் மரபு என்று ஐயர் அவர்கள் சொல்லியிருப்பது பெரும் தப்பு என்பதை தமிழறிஞர்கள் ஒப்புவர். எப்படியெல்லாம் வடமொழிப் படி. பதங்களை தமிழ் மொழிக்குள் புகுத்துவதற்கு எத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பதற்கு இது சான்றாகும்.

ஊர்ப் பெயர்களையிட்டு பல பெயர் மாற்றங்களைச் சொல்லலாம். எடுத்துக்காட்டாக பழமலை என்ற ஊர் விருத்தாசலம் என்றும், மறைக்காடு எனும் ஊர் வேதாரண்யம் எனவும் மாற்றம் பெற்றதைத் குறிப்பிடலாம்.

*இப்பழந்தமிழ் எழுத்துக்கும் கிரேக்க மொழி எழுத்துக்கும் உருவ ஒற்றுமை இருப்பதாக முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் கூறுகிறார்.*

ஆர்க்காடு என்பது ஆத்திமரம் நிறைந்த காடு. இப்பெயரின் பொருளைப் புரிந்து கொள்ளாமல் அதனை ஆறுகாடு என தப்பிதமாகக் கணித்து சடாரண்யம் எனும் பெயரைச் சூட்டிவைத்தார்கள்.

இப்படி ஆரியர் வந்த பின் தோன்றிய வடமொழியை, வரிவடிவெழுத்து அமைப்பை தமிழிலிருந்து கைக்கொண்டு அம்மொழியை தமிழ் மொழிக்குள் வலிந்து புகுத்துவதில் ஆரியர் காட்டிய வேகம் வியப்பையும் மலைப்பையும் தருவதன்றோ?

இவற்றை சபாபதி நாவலர், மறைமலையடிகள் போன்றோர் எதிர்த்துக் கிளம்பியிருக்காவிடின் இன்று தமிழ் மொழி அதன் தனித்தன்மையை இழந்து வடமொழி கலந்த ஒரு கொச்சை மொழியாகவே ஆகியிருக்கும்.

**இலக்கியப் பொழில்**

வடமொழி (சமஸ்கிருதம்) தேவபாஷை என்றும், தமிழ் மொழி சாதாரண (மானிட) மொழி என்றும் முன்னர் ஆரியர் பிரசாரம் செய்ததன் காரணமாகவே பக்தி சிரத்தை மிக்க தமிழர் வடமொழிச் சொற்களைப் புழங்கி வரத் தலைப்பட்டதுடன் பழந்தமிழ் எழுத்து வடிவங்களையும் அக்கறையின்றி மறந்து போயினர். அது மட்டுமன்றி பழந்தமிழ் எழுத்து வடிவங்களை அந்நிய எழுத்து வடிவங்களாகவும் தப்பிதமாகக் கருதலாயினர். தம்மை அறிஞர் என்று கூறிக்கொள்வோரையும் இந்த மயக்கம் விட்டு வைக்கவில்லை. அந்தளவிற்கு ஆரியரின் போலிப் பிரசாராம் தமிழரின் சிந்தனையை மழுங்கடிக்கச் செய்திருந்தது.

'வட்டெழுத்து' நூலின் அதன் ஆசிரியரான இரா.கிருஸ்ணமூர்த்தி எம்.ஏ. மேற்கோளாக வி.இராமமூர்த்தி எம்.ஏ.வெளியிட்ட கருத்தினைத் தந்துள்ளார். அது வருமாறு:—

"பொதுவாக பிராமி எழுத்துக்கள் அனைத்தும் சமண அல்லது பௌத்த சமயக் சார்புடைய கல்வெட்டுகளில் காணப்படுகின்றனவேயன்றி பொது கல்வெட்டுச் சான்றுகள் எதிலும் காணப்படவில்லை."

இது பிராமி எழுத்தினாலான பொதுக் கல்வெட்டுகள் இருப்பதை அறியாததால் எழுந்த கூற்று. இலங்கையில் கூட பிராமி எழுத்துக்களிலான பொதுக்கல்வெட்டுகளுண்டு. தவிரவும் முற்காலத்தில் ஆரியரால் வேதங்கள் மறைத்து ஓதப்பட்டு வந்ததால் அதன் சுலோகங்களோ, கோட்பாடுகளோ கல்வெட்டுகளில் பொறிக்கப்படவில்லை. இப்பின்னணியில் வேதச்சார்புடைய எந்தவிதமான கல்வெட்டுகளும் இருந்திருக்க முடியாதுதான். தவிரவும் பிராமி எழுத்துக்களின் முழுமையான வடிவம் தமிழரால் தோற்றுவிக்கப்பட்டது. இப்பழந்தமிழ் எழுத்து வடிவமான பிராமி எழுத்தின் ஆதி வடிவங்கள் தொடர்பான சான்றுகள் 5,500 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர் குடியேறி வாழ்ந்த சிந்துவெளிப் பள்ளத்தாக்கில் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. சிந்துப்பள்ளத்தாக்கில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைகளில் பிராமி எழுத்துக்களைக் காணமுடியும். அவை முத்திரைகளுக்குச் சொந்தமானவர்களின் பெயர்களாக இருக்கலாம் என்று ரெவ.எச்.ஹேரஸ் கூறுகிறார்.

2500 ஆண்டுகளுக்கு முன்னரே சமணமும் பின்னர் பௌத்தமும் தோற்றம் பெற்றன. ஆனால் பிராமி எழுத்து வடிவம் அதன் ஆரம்ப நிலை 5,500 ஆண்டுகளுக்கு முந்தியதாகும். ஆதலின் சமணரும் பௌத்தரும் பிராமி எழுத்து வடிவங்களை பயன்படுத்தியதன் காரணமாக அவை அந்நிய எழுத்து வடிவங்களாக ஆகிவிட முடியாது. தமிழ் நாட்டில் ஒரு குறிப்பிட்ட தொகையான தமிழர் சமணர்களாகவும், பௌத்தர்களாகவும் வாழ்ந்திருந்த காலமும் உண்டு. வீரசோழியம் எனும் இலக்கண நூல் இயற்றிய புத்தமித்திரர் ஒரு தமிழ்ப்பௌத்த தேரர். நன்னூல் எனும் இலக்கண நூல் எழுதிய பவணந்தி முனிவர் ஒரு தமிழச்சமணர். பாண்டியன் நெடுமாறனும், திருநாவுக்கரசு நாயனாரும் கி.பி.7ஆம் நூற்றாண்டில் சில காலம் சமணர்களாக இருந்தவர்கள்தான். சிற்றரசனாகவிருந்த சீயகங்க சோழனும் ஒரு சமணனே.

சொல்வேருழவன்
ம.க.அ.அந்தனிசில்

திருவள்ளுவர் தனது குறட்பாவை பழந்தமிழ் எழுத்து வடிவமான பிராமி எழுத்து வடிவத்திலேயே எழுதினார். அதன் மாதிரி இதோ: (படம் 2)

'காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலரும் இந்நோய்' (திருக்.அதி. 123.பா.1227)

உண்மை என்னவென்றால் இப்பழந்தமிழ் எழுத்து வடிவமான பிராமி எழுத்து

(16 ஆம் பக்கம் பார்க்க)

# சூர்யாவின் அவதாரம்

இப்போது இளம் நடிகர்கள் பலர் முன்னணிக்கு வந்துள்ளனர். இந்த நிலையில் 'சூப்பர் ஆக்டர்' நாற்காலியை யார் ஆக்கிரமிக்கப் போகிறார்கள் என ஒரு பட்டிமன்றமே வைக்கலாம்.

குழம்பம் நிறைந்த சிரமமான கேள்வியென்றாலும் பளிச் என்று மனதில் தோன்றுபவர் சூர்யா. படத்திற்குப் படம் வித்தியாசமன வேஷங்களில் நடிக்க தீராத தாகத்துடன் இருக்கிறார் சூர்யா. இவர் தனது படங்கள் 'க்ளாசாக' இருக்க வேண்டும், அனைவரையும் கவர வேண்டும் என்று நினைப்பவர்.

தந்தையைப் போலவே இவரும் நடிப்பில் சிறந்தவராக விளங்குகிறார். ஆனால், பெண்கள் விடயத்தில் மட்டும் தந்தை யார் கண்டேயர் என்ற பட்டத்தைப் பெற்றார். ஆனால், இவர் ஜோதிகா என்ற பாவையின் அன்பைப் பெற்றுள்ளார். இவர்களின் காதலுக்கு சூர்யாவின் தந்தை சிவகுமார் பச்சைக்கொடி காட்டிவிட்டது தெரிந்ததே.

சரி. இனி இவர் நடிக்கும் புது அவதாரத்திற்கு வருவோம். முருகதாஸ் இயக்கும் 'கஜினி' படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக அஸின் நடிக்கிறார். இப் படத்தில் சூர்யா மொட்டை போட்டுக் கொள்ள போகிறாராம். (முடி வளரும் வரை அடுத்த படங்களில் நடிப்பதற்கு நோ சொல்லிவருகிறார்).

சூர்யாவின் இந்த புது கெட்டப்பை காண 'கஜினி' படத்தின் ரீலிஸ் வரும்வரை காத்திருங்கள் ரசிகர்களே.

சூர்யாவின் இந்த புது கெட்டப்பும் 'கஜினி' படமும் வெற்றி பெற நாமும் ஒரு 'மொட்டை' மன்னிக்கவும் மெட்டை போடுவோம்.



'கஜினி'
-சூர்யா-

## தற்போது மீண்டும் பிஸியாகியுள்ள மாதவனின் பிரியசகி பற்றி...!

தமிழ், ஹிந்தி ஆகிய இரண்டு மொழிகளிலும் பிஸியாக இருக்கிறார் மாதவன். அவரிடம் பிரியசகி பட உங்கள் கெட்டப் ஸ்டைல் வித்தியாசமாக உள்ளதே என்ன விஷயம் என்றோம்.

கதை வித்தியாசம் இருந்தால் கெட்டப் சேஞ் செய்யலாம். கெட்டப் சேஞ்சிற்காக எல்லாப் படங்களிலும் நடிக்க முடியாது.

இன்றைய சூழ்நிலைக்குத் தக்கமாதிரி படம் எடுத்தால்தான் ஜெயிக்க முடியும். ஒரு கணவனும் மனைவியும் திருமணத்திற்கு பின்னர் தங்கள் வாழ்க்கையை எவ்வாறு அமைத்துக் கொள்ளவேண்டும் என்பதில் தெளிவாக உள்ளார்கள்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு பிரச்சினை. அதை எவ்வாறு நெறிப்படுத்துகிறார்கள் என்பது சூழ்நிலையைப் பொறுத்து அமையும்.

இப்போது எல்லாப் பெண்களும் தாங்கள் சுதந்திரமாக இருக்கவேண்டும். தாங்களும் சம்பாதிக்க வேண்டும் என்றே விரும்புகிறார்கள்.

இவ்வாறான சம்பவங்களினால் ஏற்படும் பிரச்சினைகளை மையமாக வைத்தே பிரியசகி தயாராகியுள்ளது.

## செல்வராகவன் குடும்பத்தில் உறுப்பினராக சோனியா!

தனுஷின் இல்லத்தில் மற்றுமொரு மங்கள நிகழ்ச்சிகள். இவரின் சகோதரி டாக்டர் கார்த்திகா தேவியின் திருமணம். பிரபல மூலிகை மருத்துவரான ஜமுனாவின் மகன் டாக்டர் கார்த்திக் ஆஞ்சநேயனை கரம்பிடித்தார் கார்த்திகா. சூப்பர் ஸ்டார் வீட்டு மருமகன் இல்லத்து திருமணம் ஆச்சே. சூப்பர் ஸ்டார் வராமலா? வந்தார். அரங்கமே மகிழ அமைதியாகத் திருமணத்தை ரசித்தார் ரஜனி. மருமகன் தனுஷ் அங்கும் இங்கும் ஓடியாடி வேலை செய்ததையும், கூடவே மகள் ஐஸ்வர்யாவின் சுறுசுறுப்பையும் ரசித்துக்கொண்டிருந்த அவர், அவ்வப்போது உறவினர்களுக்கும் வணக்கம் போட்டுக்கொண்டிருந்தார்.

கூட்டத்தில் இன்னொரு ஜோடிதான் அத்தனை பேரையும் கவர்ந்தது. மணமகளைப்போலவே பட்டுப்புடைவையில் ஜொலித்துக்கொண்டிருந்தார் சோனியா அகர்வால். திருமணம் முடிந்ததும் குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே எடுத்துக்கொள்ளும் குரூப் போட்டோ.

எல்லோரும் எதிர்பார்த்தபடியே செல்வராகவன் பக்கத்தில் நின்றுகொண்டார் சோனியா அகர்வால். ஆளாளுக்கு கமென்ட் அடிக்க, அடுத்த டும் டும் எங்களுக்குத்தான் என்று சொல்லாமல் சொல்லியது இந்த ஜோடி.

## இளம் அம்மாக்கள் ரெடி

சமீக காலம் வரை கதாநாயகிகளாகக் கலக்கிக் கொண்டிருந்தவர்கள் ரோஜா, தேவயானி, சீதா மற்றும் சுகன்யா.

இதில் ரோஜா சிறிது காலம் சின்னத்திரையிலும் நடித்தார். தேவயானி, சீதா மற்றும் சுகன்யா இன்னும் சின்னத்திரையில் ஏறக்குறைய கதாநாயகி என்று சொல்லக்கூடிய முக்கிய பாத்திரங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சினிமாவைப் பொறுத்தவரை, பெண்களுக்கு சீக்கிரமாகவே புரமோஷன் கிடைத்துவிடும். கதாநாயகியாக சிறிது காலம் நடித்த பின், குறைவான காலத்திற்குள் அக்கா, அண்ணி, அம்மா ஏன் பாட்டியாகக்கூட நடிக்க வேண்டி வரும். அந்த வகையில் ரோஜா, தேவயானி, சீதா, சுகன்யா ஆகியோர் அம்மாவாக பிரமோஷன் பெற்று சில காலம் ஆகிறது.

இப்போது அவர்களே முன்வந்து அம்மாவாக நடிக்கத் தயார் என்று அறிவிப்பு கொடுத்திருக்கிறார்களாம். கோலிவுட்டில் கிடைத்த தகவல்களின் படி, அவர்களுக்கான சம்பளமும் தெரியவந்திருக்கிறது. இதில் அதிகபட்சமாக 5 லட்சத்தை கேட்பவர் ரோஜா, அடுத்து தேவயானி 4 லட்சத்திற்கும், சீதா 3 இலட்சத்திற்கும், சுகன்யா 2 லட்சத்திற்கும் அம்மாவாக நடிக்கத்தயாராக இருக்கிறார்கள்.

## அஸினிடம் ஆறு கேள்வி



'காட்பாதர்'
-அஸின்-

'எம்.குமரனின் சன் ஆப் மகாலட்சுமி' படத்தின் மூலம் அறிமுகமாகிய நாயகி அஸின். இவர் தற்போது சூர்யா, அஜித், விஜய் ஆகியோர் படங்களில் நடித்து வருகிறார். அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளின் பதில்கள் வருமாறு:

சினிமா பிடிச்சிருக்கா?

மக்களுக்கு என்னை பிடிக்கவைத்த, சினிமாவை பிடிக்காமல் போகுமா.

சென்னைத் செந்தமிழ் தெரியுமா?

ஓ...நல்லாவே கத்துக்கிட்டேன்.

நீங்க சைவமா? அசைவமா?

கேரளாவில் கிடைக்கும் கொளுவா மீன் என்றால் எனது வாயெல்லாம் ஊறும்.

உங்கள் திருமணம் எப்படி? காதல்?

தெரியலையேப்பா.... எப்படி வேலுநாயக்கர் பாணியில் சொன்னோனா?

மனசுக்கு பிடிச்சது?

எழில்கொஞ்சும் கேரளா நாரி

காதல் என்பது?

எப்படி வரும்னு தெரியாது. ஆனா வர வேண்டிய நேரத்தில் கரெக்டா வரும்.

# தீபாவளிக் சிவகாசி ப

ரங்கநாதன் தெருவையும், அதன் சுற்றுப்புறத்தையும் அச்சு அசலாக அப்படியே வாஹினி ஸ்ருடியோவுக்கு கொண்டு வந்துவிட்டனர் சிவகாசி படத்துக்காக.

சிவகாசி யூனிட்டில் உள்ள அனைவருக்கும் அடையாள அட்டை வழங்கியிருக்கிறார்கள். ஐ.டி கார்ட் வைத்திருப்பவர்கள் மட்டுமே ஷூட்டிங் ஸ்பாட்டில் அனுமதிக்கப்படுகிறார்கள்.

ஷூட்டிங் நடந்துகொண்டிருந்தபோது திடீரென்று படத்தின் தயாரிப்பாளரான ஏ.ம.ரத்னம் உள்ளே வந்து ஒரு விசிட் அடித்துவிட்டு உடனே கிளம்பிப்போனார்.

விஜய்யின் வெல்டிங் கடையைப் பார்த்தோம். கியாஸ் வெல்டிங் மெஷின், இரும்புக் கம்பிகள், இரும்புப் பட்டைகள் என ஒரு வெல்டிங் கடையில் இருக்க வேண்டிய அத்தனையும் இருந்தன. சின்னச் சின்ன விடயங்களில் கூட கவனம் செலுத்தியிருக்கிறார்கள்.



'சிவகாசி'
-விஜய்-

திருப்பாய்ச்சியில் அண்ணன்—தங்கை பாசத்தைச் சொன்ன இயக்குனர் பேரரசு, சிவகாசியில் எதைச்சொல்லப் போகிறார்? அவரிடமே கேட்டோம்.

ஊர் உலகத்தில சிலபேரு அம்மா கையால சாப்பிடுற வரை, அவகிட்ட அன்பா, பாசமா இருப்பாங்க. ஆனா புள்ளங்கள நம்பி அம்மா சாப்பிடுற காலம் வரும்போது அவளைக் கிழவியாத் தூக்கி ஓரமா உட்கார வச்சுடறாங்கல்ல... அந்தமாதிரி ஆளுங்களுக்கு ஒரு நெத்தியடி கொடுக்க வர்றான் சிவகாசி.

எல்லாப் புள்ளங்களையுமே அம்மா வளர்க்கிறாங்க. ஒரு காலம் வரைக்கும் தான் அவங்க நம்மள வளர்க்க முடியும். ஆனால் ஒவ்வொரு புள்ளையும் அவங்க அம்மாவை வளர்க்கிற காலம் ஒண்ணு வரும். அந்தக் காலம்தான் சிவகாசி.

இந்தப் படத்தைப் பார்க்கிற தாய்மார்கள்; சிவகாசி மாதிரி ஒன்று பொறக்கணும், பொறக்கலையே? அப்படின்னு ஒரு நிமிஷமாவது உணருவாங்க. அந்த மாதிரி புள்ளையா பாசப்பட்டாசாக வர்கிறார் விஜய்.

சிவகாசி எதைப்பற்றியும் கவலைப்படாத ஒரு முரட்டு ஆளு. படபடன்னு எப்பவும் வெடிக்கிற ஒரு ரஃப் அண்ட் டஃப் ஆளு.

என்னோட முதல் படத்துலேயே விஜய் சார் எனக்கு ஹீரோவா கிடைச்சது, என்னோட அதிஷ்டம். ரெண்டாவது படத்துக்கும் அவரே கிடைச்சது பேரதிஷ்டம்.

ஆண்டவன் எனக்கு ரெண்டு தடவை வரம் கொடுத்திருக்கான். முதல் வரத்தை ஒழுங்கா பயன்படுத்தினேன். ரெண்டாவது வரத்தையும் அதைவிட நல்லா பயன்படுத்துவேன். இதுதான் முதல் படம் என்னு நினைச்சு வேலை செய்கிறேன்.

திருப்பாய்ச்சி மாதிரி சிவகாசியில கிடைக்கும்.

## எதிர்பார்ப்புகளின்

ஷங்கர், விக்ரம், ஆஸ்கார் ரவிச்சந்திரன் மூவருக்கும் அக்னி பரீட்சை இப்படம். தொடர்ந்து 5 வெற்றிகளைத் தந்த ஷங்கர், போய்ஸ் தோல்வி காரணமாக விமர்சனத்துக்குள்ளானார். இப்படத்தின் வெற்றி மட்



டுமே அவரது இமேஜை மீண்டும் தூக்கி நிறுத்தும். அதே போல் விக்ரம். அருள் படத்தின் தோல்விக்குப் பின் ஒரு வருடம் இவரது எந்தப் படமும் திரைக்கு வரவில்லை.

# ...க்கு விஜயின் ... பட்டாசு ரெடி

நகரமும் கலந்து சொல்லியிருக்கேன்.

சிவகாசி கிடைச்சதுக்குக் காரணம் திருப்பாய்ச்சி யோட வெற்றி இல்ல. அதுக்குக் காரணம் சிவகாசியோட கதை. விஜய் சாரும் சரி, ரத்னம் சாரும் சரி கதையில தெளிவா இருக்காங்க. ரத்னம் சாருக்கு முதல்ல கதை நல்லாயிருக்கணும்.

பெரிய ஹீரோக்கள் படம் வெளியாகி ரெண்டு, மூணு வாரத்துக்கு அப்புறம்தான் அது வெற்றிப்படமா? இல்லையாங்கிற முடிவுக்கு வர முடியும். ஆனால், எனக்கு திருப்பாய்ச்சி வெளியான ஒரு வாரத்தில் சிவகாசி கிடைச்சது. திருப்பாய்ச்சி வெற்றியை நிர்ணயிக்கிற முன்பே சிவகாசி கன்போம் ஆச்சு.



இந்தியாவிலேயே மிகச்சிறந்த தயாரிப்பாளர்களில் ஒருத்தர் ஏ.எம்.ரத்னம் சார். என்னோட ரெண்டாவது படத்துக்கே தயாரிப்பாளராக அவர் அமைந்தது என் மிகப் பெரிய அதிஷ்டம். அவர் கிட்ட கதை சொல்லும்போதே ஹீரோ ரங்கநாதன் தெருவில் வேலை பார்க்கிற ஆளுன்னு சொன்னேன்.

ரங்கநாதன் தெரு செட் போடணுமே, 'காஸ்டலியாகுமே, தயாரிப்பாளர் ஒத்துக்குவாரோ மாட்டாரோன்னு தயக்கமா இருந்தது. ஆனா... அவரோ உடனே இடம் பாருங்கன்னு சொன்னார். இடம் பார்த்த ஒரு மாதத்திலேயே செட் ரெடி.

செட் ரெடியாகிட்டிருக்கும் போது, ரெண்டு நாளைக்கு ஒரு தடவை தான் நான் போய்ப்பார்ப்பேன். ஆனால் ரத்னம் சார் தினமும் செட்டை வந்து பார்ப்பாங்க. சினிமாவை அந்த அளவுக்கு அவர் லவ் பண்றார்.

திருப்பாய்ச்சியில அஸின் தான் நடிப்பதாகப் பேச்சு வார்த்தை நடத்த அந்த வாய்ப்பு நழுவிப்போனது.

கிளாமராக இருக்கணும், ஹீரோவுக்கு சமமாக நடிக்கிறவரா, நல்லா டான்ஸ் பண்ணக்கூடியவரா இருக்கணும். இப்படி எல்லாத்துக்கும் ஏற்றவர் யாருன்னு பார்த்ததில் அஸினுக்கு யோகம் அடிச்சிருக்கு.

சிவகாசியோட கேரக்டர் ரஃப் அண்ட் டஃப்ன்னா அஸின் அதுக்கு மேல. அடாவடிப்பொண்ணு. விஜய்—அஸின் முதன் முதலா சேர்ந்து நடிக்கிறாங்க.

பிரகாஷ்ராஜ் வில்லனா நடிக்கிறார். விஜயோட அம்மாவாக புதுப்புது அர்த்தங்கள் படத்தில் நடிந்த கீதா நடிக்கிறார். தங்கையாக கேரளாவிலிருந்து புதுமுகம் ஒருவரை அறிமுகப்படுத்துகிறேன்.

திருப்பாய்ச்சியினால ஒவ்வொரு பொண்ணுங்களும் எமக்கு இப்படி ஒரு அண்ணன் அமையலைன்னு வருந்தப்படுவாங்க. அதே மாதிரி இந்தப்படத்துல ஒவ்வொரு அம்மாவும் எமக்கு இப்படி ஒரு பிள்ளை பிறக்கலையே என்று நினைப்பாங்க.

...வர்ற தீபாவளிக்கு சிவகாசி பட்டாசு வண்ணமாய் ...க்கும். என்று கூறிவிட்டு படப்பிடிப்புக்குச் சென்றார்.

# உலக அழகி, வாழும் ராணியாக...



- ஐஸ்வர்யா -

இந்தியாவில் 64 ராஜ பரம்பரைகள் இருந்தன. இதில் காலப்போக்கில் வெவ்வேறு காரணங்களுக்காக மிகச் சிலரைத்தவிர மற்றவர்கள் இருக்கும் இடம் தெரியாமல் ஆகிவிட்டார்கள்.

ஆனால், இன்றைக்கும் ராஜபரம்பரை, அதன் கௌரவம், செல்வாக்கு, செல்வம் ஆகியவற்றை தக்க வைத்துக் கொண்டிருப்பவர்கள் சிலர் தான்.

மத்திய பிரதேசத்தில் சிந்தியா, ராஜஸ்தானில் ராஜகுடும்பம். சென்னையில் இருக்கும் ஆற்காடு நவாப் மற்றும் சிலரும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களில் ஒருவர்தான் ஜெய்பூர் ராணி காயத்திரி தேவி. இவருக்கு இருக்கும் இன்னொரு சிறப்பு உலகத்தில் தலைசிறந்த அழகிகளில் இவரும் ஒருவர் என்பதுதான்.

இவரது வாழ்க்கை, இப்போது திரைப்படம் ஆகப்போகிறது. இதைத் தயாரிப்பவர், ஆழ்ந்த ரசனையுடன் படம் எடுக்கக் கூடியவர் என்று அகில இந்திய அளவில் புகழ்பெற்ற ஜே.பி.தத்தா. இவர் ஜெய்ப்பூர் ராணியை சந்தித்து அவரது வாழ்க்கை வரலாற்றை படமாக எடுக்க விரும்பம் தெரிவித்தவுடன், ராணி காயத்திரிதேவி உடனடியாக ஒப்புக்கொண்டார்.

ஆனால் காயத்திரிதேவியாக நடிக்கப் போகும் நடிகை யாராக இருக்கலாம் என்ற கேள்வி எழுந்தபோது, ஜே.பி.தத்தா முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யாவின் பெயரைக் கூறியிருக்கிறார். காயத்திரிதேவி பதில் பேச்சு ஏதும் பேசாமல் ஒப்புக் கொண்டார். இதுபற்றி லண்டனில் ஜே.பி.தத்தாவும், ஐஸ்வர்யாவும் காயத்திரிதேவியை சந்தித்தனர். இந்த சந்திப்பின்போது ஐஸ்வர்யா ராய், ராணியாக, அதுவும் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு ராணியின் வேடத்தில் நடிப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இப்போது அவர் ஜாக்—முந்த்ரா ஆகியோரின் தயாரிப்பில் ஒரு ஆங்கிலப்படத்தில் நடித்துவருகிறார். இதன் பிறகு ராணியாக, ஜே.பி.தத்தாவின் இயக்கத்தில் நடிக்க இருக்கிறார்.

## ஆகாஷின் 'அழகா'

தமிழ், தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் தயாராகிறது 'அழகா'. இப்படத்தில் ஜெய் ஆகாஷ் — சதா ஜோடியாக நடிக்கிறார்கள்.

இப் படத்தில் வாணி, கோட்டா சீனிவாசராவ், முத்துக்காளை மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

இப்படத்தின் முதல்கட்டப் படப்பிடிப்பு முடிவடைந்து விட்டது. அடுத்தகட்டப் படப்பிடிப்பு விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

ஜெய் ஆகாஷ் நடித்து தொடர்ச்சியாக வெளி வந்த ராமகிருஷ்ணா, குருதேவா, செவ்வேள், அமுதே போன்ற படங்கள் சுமாராக ஓடிக்கொண்டிருக்கின்றன. இவரின் படங்களின் வருகைக்கு ஏற்ப இவரது படத்தின் ஓட்டம் அமையவில்லை என்பதே ரசிகர்களின் கவலை.

## ஸ்ரீதேவி தயாரிக்கும் புதியபடம் 'மகளிர் இல்லாத ஒரு நாடு'

பெண் சிசுகொலை பற்றி ஹிந்தியில் வெளியான மாத்ருபூமி என்ற படத்தை தமிழில் டப்பிங் செய்து தயாரிப்பாளர் போனிகபூர், நடிகை ஸ்ரீதேவி தம்பதியினர் தயாரிக்கின்றனர்.

இப் படத்தில் ஒரு கிராமத்தில் பெண் சிசு கொலை அதிகரிக்கிறது. பெண்களே இல்லாத கிராமமாக அது மாறுகிறது. எதேச்சையாக ஒரு பெண் கிடைக்க அவளை 5 சகோதரர்கள் திருமணம் செய்துகொள்கின்றனர். இதனால் ஏற்படும் விபரீதங்கள், அந்தப் பெண்ணின் உரிமைகள் பாதிக்கப்படுதல் உள்ளிட்ட விடயங்களை அலசுகிறார்கள்.

தமிழில் இப்படத்திற்கு 'மகளிர் இல்லாத ஒரு நாடு' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இப்படம் பற்றி ஸ்ரீதேவி கூறும் போது விருதுக்காக இப் படத்தை எடுக்கவில்லை. பெண் என்றால் செக்ஸுக்காக மட்டுமே என நினைக்கின்றார்கள். அதைத்தான் இப்படத்தில் சொல்லியிருக்கிறேன் என்றார்.

குஜராத்தில் ஒரு கிராமத்தில் நடந்த சம்பவத்தையே படமாக எடுத்துள்ளோன் என்றார் போனிகபூர்.

# எனக்கும் விஜய்க்கும் சண்டையா?

—ரஜினி



நீண்ட நாட்களுக்குப் பிறகு தமிழ் சினிமாப் படம் ஒன்றின் 200ஆவது நாள் விழா நடைபெற்றது. கில்லி படத்துக்காகக் கொண்டாடப்பட்ட இந்த விழாவில் கலந்து கொண்டார் சூப்பர் ஸ்டார் ரஜனிகாந்த். படத்தின் ஹீரோ விஜய், இயக்குனர் தரணி இவர்களோடு சேர்ந்து மேடையை அலங்கரித்தார் தரணியின் விருப்பமான ஹீரோவான விக்ரம். ஹீரோயின் த்ரிஷா சிவப்பு சேலையில் பளபளக்க வந்திருந்தார். இவரைப்பற்றி ரஜனி பேசும் போது மட்டும் இவரது முகம் முழுக்கப் புன்னகை.

இப்போது நான் பேசறது கம்மி. அதுக்குக் காரணம் இதற்கு முன்பெல்லாம் நிறைய பேசிட்டன். 'கில்லி படத்தின் வெற்றி விழாவில் கலந்துக்கணும் என்று இந்தப் படத்தோட தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்னம் என்கிட்ட கேட்டப்ப கண்டிப்பா நேரில் வந்து கலந்துகொள்கிறேன், ஆனால் மேடையில் பேச மாட்டேன் என்று சொன்னேன். ஆனால் இந்த வெற்றி விழாவை பார்த்ததும் ரொம்ப மங்களகரமா இருந்தது. ஒரு பட பூஜை மாதிரி இருந்தது. மங்களகரமான இந்த நேரத்தில் ரெண்டு வார்த்தை வாழ்த்திப் பேசறது நல்லதுன்னு நினைச்சேன். அதனாலதான் இப்ப பேசணும்னு வந்தேன்.

கடந்த தமிழ் புத்தாண்டு தினத்தில் நான் நடிச்ச சந்திரமுகி, கமல் நடித்த மும்பை எக்ஸ்பிரஸ், விஜய் நடித்த சச்சின் போன்ற படங்கள் வந்திச்சு. அப்படி நிறைய பத்திரிகைகளில் ரஜனியுடன் விஜய் போட்டி, ரஜனியுடன் கமல் போட்டி என்பது போல் நிறைய செய்திகள் வந்தன. விஜய் கூட சில பேட்டிகளில் எனக்கும் ரஜனி சாருக்கும் போட்டி இல்லை என்று சொல்லியிருந்தார். ஆனாலும் எனக்கும், விஜய்க்கும் மோதல் உண்டாக்க வேண்டும் என்று சில பேர் முயற்சி பண்றாங்க. அந்த முயற்சி கடைசிவரை நடக்கவே இல்ல.

விஜய் எப்படி என்னோட ரசிகரோ, அவருக்கு நானும் ஒரு நலன் விரும்பி. கில்லி படம் தெலுங்கில் ஒக்கடு என்ற பெயரில் வெளியாகி பெரிய வெற்றி பெற்ற ஒரு படம். அதைத் தமிழில் தரணி ரீமேக் செய்து இயக்கினார். இந்தப் படம் ஹிட்டாகும் என்று அப்போதே சொன்னேன். அது இப்போது நடந்திருக்கிறது. தரணிக்கு என் வாழ்த்துக்கள். தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்தினத்துக்கு என் வாழ்த்துக்கள்.

வரவர விஜய் நல்ல காமெடி பண்றார். கில்லி படத்தில் ஒரு படி மேல் போய் நடித்திருக்கிறார். அவர் நடித்த திருப்பாய்ச்சி படத்தையும் பார்த்து ரசித்தேன். அவருடைய டயலொக் டெலிவரி மிகவும் அற்புதம் என்ற ரஜனி, மேடையில் இருந்த திரிஷா, விக்ரமையும் பார்க்கத் தவறவில்லை.

படத்தின் வெள்ளி விழா கோப்பையை விஜய்க்கு ரஜனி வழங்கிய போது, அவரது காலில் விழுந்து வணங்கினார் விஜய்.

அதன் பின் நடந்த விருந்தில் அத்தனை நட்சத்திரங்களும் உற்சாகமாகக் கலந்துகொண்டது தனி சுவாரஸ்யம்.

# ...ன் மத்தியில் அந்நியன்

அந்நியனுக்காகவே எந்தப் படத்தையும் ஒத்துக்கொள்ளாமல் முழு வீச்சாக இதற்காகவே உழைத்திருக்கிறார். தொடர் வெற்றிகளைக் கொடுத்த தயாரிப்பாளர் ஆஸ்கார் ரவிச்சந்திரனுக்கும் இது வாழ்வா சாவா படம். அவரது எந்தப் படமும் இவ்வளவு பெரிய பட்ஜெட்டில் இத்தனை மாதங்களில் தயாரானதில்லை.



இந்தப் படத்தின் மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. அதனால் ரூ25 கோடி செலவில் ஒன்றரை ஆண்டில் இப் படம் எடுத்திருக்கிறோம் என்கிறார் ரவிச்சந்திரன். சந்திரமுகி போலவே உலகம் முழுவதும் 350 பிரிண்டுகள் போடப்படுகின்றன. அந்நியன் மீதிருக்கும் நம்பிக்கையால் ரிஸ்க் எடுக்க முடிவு செய்துவிட்டார் ரவிச்சந்திரன்.

படத்தில் அப்பாவி வக்கீலாக வருகிறார் விக்ரம். அநீதிகள் நடக்க அதைத் தட்டிக் கேட்கிறார். உனக்கு ஏன் இந்த வேலை என்று அவரது தந்தை நெடுமுடி வேணு தடுக்கிறார். ஒரு கட்டத்தில் வில்லன்களால் விக்ரமுடைய குடும்பம் சீரழிகிறது. பொய், பழி சுமத்தப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார் விக்ரம். அப்வகேட், சமூகத்தின் பார்வையில் அந்நியனாக மாறுகிறார். தனது குடும்பத்தை அழித்து நாட்டில் ஊழல், லஞ்சம் புரிந்துகொண்டிருக்கும் வில்லன்களைக் கொல்ல முடிவு செய்கிறார். ஒவ்வொருவராகக் கொல்கிறார். இதுதான் அந்நியன் கதை. காட்சியமைப்புகளில் பிரம்மாண்டம் காட்டியிருக்கிறாராம் ஷங்கர். என்ன படம் பார்க்கும் ஆவல் உண்டாகிவிட்டதா?

# ஆதி தமிழ் எழுத்துவடிவம்....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடிவத்தை, எழுத்து வடிவமில்லாத ஊமை மொழியினரும் புழங்கத் தலைப்பட்டதே எல்லா குளறுபடிகளுக்கும் காரணம். தவிரவும் இந்திய துணைக்கண்டத்தில் இடைக்காலத்தில் தோன்றிய எழுத்து வடிவங்கள் யாவும் பழந்தமிழ் எழுத்து வடிவத்தை அடியொற்றி எழுந்தவையே. இது குறித்து எச்.ஜி. றோலின்சன் கூறுவதாவது:–

"…..தற்காலத்தில் இந்தியாவின் பல பகுதிகளில் வழங்கிவரும் எழுத்து வடிவங்கள் எல்லாம் பிராமியிலிருந்து தோன்றியவையாகும். சிந்துப் பள்ளத்தாக்கிலுள்ள சின்னங்களை தற்போது மக்கள் கண்டறிந்த பின்னர் இந்திய அரிச்சுவடிகளின் தோற்றம் அவற்றிலிருந்து உருவாகியிருக்கலாமெனச் சில அறிஞர்கள் கருதுகின்றனர்."

(India Ashori Cultural History, London 1937) இற்றைக்கு 5,500 ஆண்டுகளுக்கு முன்னர் சிந்துவெளிப்பள்ளத்தாக்கில் வாழ்ந்த மக்கள் யார்? அவர்கள் ஆதி திராவிடர்கள் என்று மேற்கூறிய நூலின் நாலாம் பதிப்பில் (இலண்டன் 1951) சொல்லப்பட்டுள்ளது. விரிவான ஆராய்ச்சியின் பின்னர் காலம் தாழ்த்தி இம்முடிவு பெறப்பட்டிருக்கலாம்.

இன்றைய உலகில் சுமார் 1,300 மொழிகள் எழுத்து வடிவமில்லா மொழிகளாக வழங்கிவரினும், பழங்காலத்தில் எழுத்து வடிவமில்லாமல் மறைந்துபோன மொழிகள் பலப்பல. இன்று மலேயா மொழியும், ஈபோ, ஹவ்சா, ஜொரூபா போன்ற ஆபிரிக்க மொழிகளும் ஆங்கில எழுத்து வடிவத்தாலேயே எழுதப்பட்டும், போதிக்கப்பட்டும் வருகின்றன.

அவ்வாறே இந்தோனேசியாதீவுக் கூட்டத்தில் வழங்கும் 27 மொழிகளில் யாவா போன்ற ஒரு சில மொழிகளைத் தவிர எழுத்து வடிவமில்லா பிற மொழிகள் ஆங்கில எழுத்தினூடாக எழுதப்பட்டும், போதிக்கப்பட்டும் வருகின்றன.

இப்படித்தான் பழந்தமிழ் எழுத்து வடிவமான பிராமி எழுத்து வடிவம் முற்காலத்தில் எழுத்து வடிவமில்லா பிற மொழியினருக்கு வேறு வகைகளில் பயன்பட்டுவந்தது.

மகதநாட்டைச் சேர்ந்த (வடஇந்திய) சக்கரவர்த்தியான அசோகன் (கி.மு. 273 – 232) கி.மு. 261 இல் பௌத்த சமயம் தழுவினான். அக்காலத்தில் அவனின் தாய்மொழியான மகதமொழிக்கு எழுத்து வடிவம் இருக்கவில்லை. அதன் காரணமாக அவன் தன் அறக்கட்டளைகளைக் கற்றூண்களில் பிராமி எழுத்தில் பொறித்தான். வேறு எழுத்து வடிவம் புழக்கத்தில் இருக்கவில்லை. ஆதலின் துணைக் கண்டத்தின் பெருநிலப்பரப்பில் பழந்தமிழ் எழுத்து வடிவமான பிராமி எழுத்து பரவலாக அறியப்பட்டிருந்தது என்பதற்கு இது சான்றாகும்.

தமிழ் மொழியில் ஷ,ஸ,ஹ Ba, Ga போன்ற வட மொழி ஒலிக்குறிகள் இல்லை. அதன் நிமித்தம் அசோகன் மேற் சொன்னவை போன்ற குறிப்பிட்ட சில ஒலிக்குறிகளுக்கு புதிய வடிவங்களை உருவாக்கி தமிழ் பிராமியுடன் கலந்து கல்வெட்டுக்களைப் பொறித்தான். வட ஒலிக்குறிகளுக்கு அவன் உருவாக்கிய புதிய வடிவம் 'அசோக பிராமி' என்று அழைக்கப்படுகின்றது. அசோகன் பொறித்த கல்வெட்டுக்களில் ஒன்றான கீர்நார் கல்வெட்டினை இங்கு காண்க. (படம் 3)

அசோகனின் இக்கல்வெட்டில் பழந்தமிழ் எழுத்து வடிவமான தமிழ் பிராமி எழுத்து வடிவங்களைக் காணமுடியும். இக்கட்டுரையின் முற்பகுதியில் தரப்பட்டுள்ள தமிழ் பிராமி உயிர், மெய், உயிர்மெய் எழுத்துக்களிலிருந்தும் திருவள்ளுவர் பழந்தமிழ் எழுத்து வடிவத்தில் எழுதிய குறட்பா எழுத்துக்களிலிருந்தும் அசோகனின் கல்வெட்டில் நோ, த, ல, பு, க, கா, அ, ச, வ, ய, ரு போன்ற பழந்தமிழ் (தமிழ்பிராமி) எழுத்து வடிவங்களை இலகுவாகக் கண்டறிய முடியும்.

தமிழ் பிராமி எழுத்து வடிவம் தொடர்பான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பேராசிரியர் கா.இந்திரபாலா கூறுவதாவது:–

'பிராமி வடிவம் ஓர் எளிமையான எழுத்து முறையாகும். இன்று நம்மை எதிர்நோக்கும் எழுத்துப் பிரச்சினைகளும் அதில் பெருமளவு இல்லை. நம் முன்னோர் விஞ்ஞான ரீதியான முறையில் அதனை வகுத்திருந்தனர்' என்று கூறுகிறார்.

1980 ஆம் ஆண்டு ஆனைக்கோட்டையில் தமிழ்பிராமி எழுத்தில் கோவேந்த(ன்) எனும் பெயர் பொறிக்கப்பட்ட முத்திரையொன்று கண்டெடுக்கப்பட்டது.

ஆனைக்கோட்டையில் நடைபெற்ற ஆய்வின்போது கண்டுபிடிக்கப்பட்ட முதுமக்கள் தாழி ஒன்றினுள்ளேயே 'கோவேந்த' என் பெயர் பொறித்த முத்திரை காணப்பட்டது. முது மக்கள் தாழி என்பது பழங்காலத்தில் இறந்தோரைப் புதைப்பதற்காக மண்ணினால் செய்யப்பட்ட பெரிய பாண்டம். இது ஈமத்தாழி எனவும் வழங்கப்பெறும்.

ஆனைக்கோட்டையில் கிடைக்கப்பெற்ற முதுமக்கள் தாழிகளுக்குள் இரு மனித என்புக்கூடுகள், அகல்விளக்கு, சங்குகள், மணி வகைகள், இருப்புக்கருவி, தாயக்கட்டை, கோவேந்த முத்திரை, மோதிரம், கடல் உணவு எச்சங்கள் யாவும் காணப்பட்டன. தமிழ்பிராமி எழுத்தினாலான 'கோவேந்த' எனும் பெயர் பொறிக்கப்பட்ட முத்திரை பேராசிரியர் கா.இந்திரபாலாவினால் வாசிப்புச்செய்யப்பட்டது.

முதுமக்கள் தாழி பெருங்கற்கால பண்பாட்டிற்குரியது. தமிழ்நாட்டிலும் ஈமத்தாழிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பெருங்கற் பண்பாட்டுக் காலம் கி.மு. 1000 முதல் கி.பி. முதலாம் நூற்றாண்டுவரையிலான காலப் பகுதியாகும். அவ்வகையில் இலங்கையில் பெருங்கற் பண்பாடு நிலவிய காலம் இற்றைக்கு 3,000 ஆண்டுகளுக்கு முன்னர் ஆகும்.

இலங்கையில் பௌத்த வரலாறு 2,500 ஆண்டுகளில் ஆரம்பமாகிறது. ஆனால், அதற்கு முன் இலங்கைத் தீவில் தமிழர் வாழ்ந்திருப்பதும், பழந்தமிழ் எழுத்து வடிவமான தமிழ் பிராமி எழுத்து வடிவம் வழக்கிலிருந்து வந்திருப்பதும் யாராலும் மறுக்க முடியாத வரலாற்று அம்சமாகும்.

இலங்கையில் பழங்காலத்தவரின் தமிழ் பிராமி எழுத்து வடிவம் பரவலாக புழக்கத்திலிருப்பதற்கு பல சான்றுகளுண்டு.

மலைகளில், குகைகளில், கற்பாறைகளில் பிராமி கல்வெட்டுகளை நாம் காண முடியும்.இப் பிராமி எழுத்துக்களில் தமிழ் பிராமியும் உண்டு; அசோக பிராமியும் உண்டு. அசோக பிராமி என்பது அசோகனின் காலமான கி.மு.3 ஆம் நூற்றாண்டில் தோற்றம் பெற்றதென்பதும், தமிழ் பிராமியின் தோற்றக்காலம் இற்றைக்கு 5,500 ஆண்டுகளுக்கு முன்னர் என்பதும் ஏலவே சொல்லப்பட்டதே.

அனுராதபுரம், பொலன்னறுவை, மட்டக்களப்பு, அம்பாறை, அம்பாந்தோட்டை, பதுளை, இரத்தினபுரி, கேகாலை, கண்டி, மாத்தளை, குருநாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் கிடைக்கப்பெற்ற பிராமி எழுத்திலான 63 கற்சாசனங்களில் 'சிவ' என்ற பெயர் பொறிக்கப்பட்டிருப்பதைக் காணமுடியும். இவை பொதுக்கல் வெட்டுகளேயன்றி சமய சார்பான கல்வெட்டுக்களல்ல.

மேற்சொன்ன 63 கல்வெட்டுக்களில் 6 கல்வெட்டுக்களில் (சாசன இல: 152, 153, 333, 808, 1044, 1233) பருமக என்ற சொல்லைக் காணமுடியும். பருமக என்றால் பிரமுகர் என்று பொருள். அது பழந்தமிழ் வழக்கு.

சிகிரிய குகையிலுள்ள பிராமி கல்வெட்டுகளில் 'நாக', 'நல்', 'கண்ணா', 'நாராயணா', 'நரசிங்க', 'வில்', 'நதி', 'அம்பி' போன்ற தமிழ்ச் சொற்களைக் காணமுடியும். (சாசன இல: 652, 627, 99, 215, 462, 501, 681, 481)

மேற்கூறிய சிவ என்ற பெயர் பொறிக்கப்பட்ட 63 சாசனங்களும் கி.மு. 3ஆம் நூற்றாண்டு தொடக்கம் பொறிக்கப்பட்டதாக முன்னாள் தொல்லியல் ஆணையாளரான எஸ்.பரணவிதான கூறிப்போந்துள்ளார். சிகிரிய குகையில் சுமார் 20 தமிழ் கவிதைகள் பொறிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இக்கட்டுரையுடன் தரப்பட்டுள்ள தமிழ் பிராமி உயிர், மெய், உயிர்மெய் எழுத்துக்கள் தமிழ்நாடு சாசனவியல் அறிஞரான கலாநிதி ஐராவதம் மகாதேவனின் நூலிலிருந்து பெறப்பட்டது.

# ராசி பலன்

இவ்வார 'ராசிபலன்' 13–06–2005 முதல் 19 –06–2005வரை

பொ. சந்திரன்

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1,8) உரிய செவ்வாய் 12இல் இருப்பது சிறப்பு இல்லை. மேலும் சனியின் நட்சத்திரத்தில் இருப்பதும் பலன் குறையும். தொடங்கும் காரியங்கள் தடைப்படலாம். மன அமைதி இருக்காது. ஆனால், பிரயாண வாய்ப்பு உண்டு. (2,7) உரிய சுக்கிரன் மூன்றில் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. நாலாம் இடம் சுத்தமாக இருப்பதால் தாய் நலம், வாகன சுகம் உண்டு. (3,6) உரிய புதன் 3இல் ஆட்சியாக இருப்பது மத்திம பலன். இளைய சகோதரத்துக்கு சமசுகம். உடல் ஆரோக்கியம் உண்டு. (10,11) உரிய சனி மூன்றில் இருப்பது விசேஷம். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. (9,12) உரிய குரு 6இல் இருப்பது கூடாது. பிதாவுக்கு நல்ல பலன் இல்லை. சயன சுகம் இருக்காது.

**இடபம் : கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது சிறப்பு. மேலும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். மன அமைதி இருக்கும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,5) உரிய புதன் இரண்டில் ஆட்சியாக இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். அறுசுவை உணவு உண்ணக்கூடிய வாய்ப்பு உண்டு. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். நாலுக்குரிய சூரியன் இரண்டில் நல்ல பலன் செய்யமாட்டார். தாய்க்கு நல்ல பலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. (7,12) உரிய செவ்வாய் 11இல் இருப்பது விசேஷம். திருமணபலன் உண்டு. சயன சுகம் உண்டு. (9,10) உரிய சனி இரண்டில் இருப்பது நல்ல பலனைச் செய்யாது. பிதாவுக்கு கூடாது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் ராசியில் இருப்பது நல்லதல்ல. இருப்பினும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். தாய்க்கு நல்லபலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. மன அமைதி பாதிக்கலாம். இரண்டாம் இடம் சுத்தமாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். அறு சுவை உண்டி கிடைக்கும். (5,12) உரிய சுக்கிரன் ராசியில் இருப்பது நல்லது. பிள்ளைகள் ஆரோக்கியமாக செயல்படுவர். சயன சுகம் உண்டு. பூர்வீக சொத்து சேரும். (6,11) உரிய செவ்வாய் 10இல் நல்ல பலனைச் செய்யாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். நண்பர்களால் தொல்லைவரக்கூடும். மூத்த சகோதரத்துக்கும் நல்ல பலன் இல்லை. (7,10) உரிய குரு 4இல் கேதுவுடன் இருப்பது தோசம். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் சிங்கம் முதல் துலாம் வரை சஞ்சரிப்பார். வார மத்தியில் நல்ல பலனைச் செய்வார். தீய கிரகங்களின் பார்வை இல்லாதபடியால் தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைக் கொடுக்கும். மன அமைதி இருக்கும். இரண்டுக்குரிய சூரியன் 12இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. (4,11) உரிய சுக்கிரன் 12இல் இருப்பது நல்ல பலனைச் செய்யும். தாய் நலம், வாகன சுகம் உண்டு. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (5,10) உரிய செவ்வாய் 9இல் நல்ல பலன் செய்யமாட்டார். தொழில் துறையில் முன்னேற்றம் இருக்காது. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். (6,9) உரிய குரு மூன்றில் இருப்பது பிதாவுக்கு கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். (7,8) உரிய சனி 12இல் இருப்பது கூடாது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிநாதன் சூரியன் 11இல் இருப்பது விசேஷம். மேலும் செவ்வாயின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. மன அமைதி இருக்கும். (2,11) உரிய புதன் 11இல் ஆட்சியாக இருப்பது விசேஷம். கையில் பணம் இருக்கும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (3,10) உரிய சுக்கிரன் 11இல் இருப்பது நல்ல பலன் செய்யும். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும். இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (4,9) உரிய செவ்வாய் 8இல் இருப்பது கூடாது. பெற்றோருக்கு நல்ல பலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. (6,7) உரிய சனி 11இல் இருப்பது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. பகைவர் நண்பராவர். திருமணவாய்ப்பு உண்டு.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 10இல் ஆட்சியாக இருப்பது சிறப்பு இல்லை. இருப்பினும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமானாலும் நிறைவேறும். தொழில்துறையில் மத்திமபலன். மன அமைதி இருக்காது. (2,9) உரிய சுக்கிரன் 10இல் நல்ல பலனைச் செய்யாது. கையில் பணம் இருக்காது. பிதாவுக்கும் நல்ல பலன் இல்லை. (3,8) உரிய செவ்வாய் 7இல் இருப்பது தோசம். இளைய சகோரதரத்துக்கு கூடாது. (4,7) உரிய குரு ராசியில் கேதுவுடன் இருப்பது நல்லதல்ல. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். 11ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மூத்த சோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. 12க்குரிய சூரியன் 10இல் இருப்பது சயன சுகம் உண்டு.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் 9இல் இருப்பது விசேஷம். மேலும் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைச் செய்யும். தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைச் செய்யும். பிரயாண வாய்ப்பு உண்டு. மன நிம்மதி கிடைக்கும். (2,7) உரிய செவ்வாய் 6இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். திருமணவாய்ப்பு உண்டு. (3,6) உரிய குரு 12இல் இருப்பது கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். இளைய சகோதரத்துக்கு கூடாது. பகைவர் தூர விலகுவர். (4,5) உரிய சனி 9இல் இருப்பது சிறப்பு இல்லை. இருப்பினும் சில நன்மை செய்யலாம். வாகன சுகம் இருக்காது. தாய்க்கும் நல்ல பலன் இல்லை. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். (9,12) உரிய புதன் 9இல் இருப்பதால் நல்ல பலனைச் செய்யமாட்டார். பிதாவுக்கு கூடாது. சயனசுகம் இருக்காது. 10ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் தொழிலில் சுகம் உண்டு.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் 5இல் இருப்பது கூடாது. மேலும் சனியின் நட்சத்திரத்தில் இருப்பதில் பிரயோசனம் இல்லை. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. (2,5) உரிய குரு 11இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (3,4) உரிய சனி 8இல் இருப்பது கூடாது. வாகன சுகம் இருக்காது. தாய்க்கு நல்ல பலன் இல்லை. இளைய சகோதரத்துக்கு கூடாது. (7,12) உரிய சுக்கிரன் 8இல் இருப்பது நல்லது. திருமண பலன் உண்டு. சயன சுகம் உண்டு. 9ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் பிதாநலம். தெய்வீக அருள் கிட்டும். 10க்குரிய சூரியன் 8இல் புதனோடு இருப்பதால் தொழில்துறையில் முன்னேற்றம் உண்டு.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 10இல் கேதுவோடு இருப்பது தோசம். இருப்பினும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். வாகன சுகம் இருக்காது. தாய்க்கு நல்ல பலன் இல்லை. மன அமைதி இருக்காது. (2,3) உரிய சனி 7இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் இல்லை. (5,12) உரிய செவ்வாய் 4இல் இருப்பதுதோசம். சயனசுகம் இருக்காது. பிள்ளைகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவது கஷ்டம். (6,11) உரிய சுக்கிரன் 7இல் இருப்பது கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. நண்பர்களால் செலவு உண்டாகலாம். மூத்த சகோதரத்துக்கு கூடாது. (7,10) உரிய புதன் 7இல் இருப்பதில் பிரயோசனம் இல்லை. திருமணவாய்ப்பு தாமதமாகலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம்.

**மகரம்: உத்தராடம்2,3,4,.திருவோணம்,அவிட்டம்1,2**

(1,2) உரிய சனி 6இல் இருப்பது விசேஷம். மேலும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைச் செய்யும். தொடங்கும் காரியங்கள் நல்லபலனைத் தரும். பிரயாணவாய்ப்பு உண்டு. கையில் பணம் இருக்கும். அறுசுவை உண்டி கிடைக்கும். மன அமைதி இருக்கும். (3,12) உரிய குரு 9இல் இருப்பது விசேஷம். சயனசுகம் உண்டு. இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (4,11) உரிய செவ்வாய் மூன்றில் இருப்பது விசேஷம். தாய்நலம். வாகன சுகம் உண்டு. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (5,10) உரிய சுக்கிரன் 6இல் நல்ல பலனைச் செய்யாது.தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். 7ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி 5இல் இருப்பது கூடாது. இருப்பினும் குருவின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். சயன சுகம் இருக்காது. மன அமைதி இருக்காது. (2,11) உரிய குரு 8இல் இருப்பது கூடாது. கையில் பணம் இருக்காது. நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை. மூத்த சகோதரத்துக்கும் கூடாது. (3,10) உரிய செவ்வாய் இரண்டில் இருப்பதுதோசம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் நல்ல பலன் இல்லை. (4,9) உரிய சுக்கிரன் 5இல் இருப்பது விசேஷம். பெற்றோர் நலம். வாகன சுகம் உண்டு. 7க்குரிய சூரியன் 5இல் இருப்பதில் பயன் இல்லை. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். சனி, குரு வழிபாடு ஆறுதல் தரும்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 7இல் இருப்பது நல்லது. இருப்பினும் கேதுடன் கூடியது தோசம். மேலும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும். மன அமைதி இருக்காது. (2,9) உரிய செவ்வாய் ராசியில் இருப்பதில் பயன் இல்லை. கையில் பணம் இருக்காது. பிதாவுக்கும் நல்ல பலன் இல்லை. (4,7) உரிய புதன் 4இல் நல்ல பலனைச் செய்யாது. தாய்க்கு கூடாது. வாகன சுகம் இருக்காது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். 6க்குரிய சூரியன் 4இல் புதனோடு சேருவதால் உடல் ஆரோக்கியம் உண்டு. 4இல் சூரியன் புதன் இணைய நல்ல பலனைச் செய்யும். சனி அங்கு இருப்பது கூடாது.

### இவ்வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| செவ் ராகு | | | சுக் புதன் சூரியன் சனி |
| | | | |
| | | | |
| | | | குரு கேது |


| | | |
|---|---|---|
| செவ்வாய் | உத்தரட்டாதி | சனி |
| சுக்கிரன் | திருவாதி | ராகு |
| புதன் | புனர்பூசம் | குரு |
| சூரியன் | மிருக | செவ் |
| குரு | அத்தம் | சந்தி |
| சனி | புனர்பூசம் | குரு |

வைகாசி 30 முதல் 05 வரை

சந்திரன் இடபம் முதல் கடகம் வரை

# மாத விலக்கு பற்றிய பிரச்சினைகளும் மங்கையரின் அறியாமையும்

***கேள்வி:- வயது 19.பெண்.ஐந்து வருடங்களுக்கு முன்னர் பருவமடைந்தேன்.கடந்த ஒரு வருடமாக மாதவிலக்கு வந்தால் இரத்தப்போக்கு ஒரு வாரமாவது இருக்கும். நான் பருவமடைந்த காலத்தில் யுத்த சூழ்நிலையின் நிமித்தம் சரியானபடி பராமரிக்கப்படாமல் இருந்தேன். பல***



***மைல் சைக்கிள் ஓடி உள்ளேன். இதனால்தான் இப்படிக் குருதிப்பெருக்கு ஏற்படுகின்றதா?மருத்துவரிடம் காட்டியபோது குடும்பக்கட்டுப்பாட்டு மாத்திரைகளை உபயோகிக்கத் தந்தார்.அத்தருணம் மாதவிலக்கு ஒழுங்காக வந்தது. ஆனால் குருதிப்பெருக்கு 7-8 நாட்கள் இருந்தது. எனது பிரச்சினைக்குத் தீர்வு கூறவும்.***

*பதில்:—* மாதவிலக்குபற்றி சரியான தகவல்களை பல பெண்கள் தெரிந்திருப்பதில்லை. எத்தனை நாள் இரத்தம் போகிறது என்பதைப்பார்க்கிலும் எவ்வளவு அதிகமாக இரத்தம் போகிறது என்பதே முக்கியமானது.

உங்களைப்போல் அநேக பெண்களின் அறியாமையை அகற்றும் விதத்தில் உங்கள் கேள்விக்கு பதில் தர விரும்புகிறேன்.

பெண்களுக்கு மாதவிலக்கு என்பது மாதாமாதம் கிரமமாக வரும் ஒரு உடலியல் விளைவு. நான் மாதாமாதம் என்று சொன்னாலும் உலகில் 10%—15% பெண்களுக்குத் தான் சரியாக 28 நாட்களுக்கு ஒரு தடவை மாதவிலக்கு உண்டாகிறது. அநேகமானவர்களுக்கு இந்த இடைவெளி 21—40 நாட்கள் வரை இருக்கலாம். ஆனால் கிரமமாக ஒரு குறிக்கப்பட்ட இடைவெளியில் வந்த மாதவிலக்கு திடீரென்று நாட்கள் கூடியோ, குறைந்தோ வரத் தொடங்கினால் மருத்துவப் பரிசோதனை அவசியம்.

மாதவிலக்கின்போது இரத்தப்போக்கு சாதாரணமாக 3—7 நாட்கள் வரை இருக்கும். சராசரி 5 நாட்கள் என்பது பொதுவான கணக்கு. மாதவிலக்கின்போது அரை அவுன்ஸ் தொடக்கம் 10 அவுன்ஸ் வரை இரத்தப் பெருக்கு இருக்கலாம். சராசரி நாலரை அவுன்ஸ் இரத்தம் போகும் என்பது பொதுவான கணக்கு.எவ்வளவு இரத்தம் போகிறது என்பதை மருத்துவர் கண்டறிய, மாதவிலக்குக் காலங்களில் எத்தனை தடவை sanitary napkins மாற்றுகிறீர்கள் என்ற கணக்கைக் கேட்பார். சாதாரணமாக ஒரு நாப்கின் ஒரு அவுன்ஸ் இரத்தத்தை முழுமையாக உறிஞ்சக்கூடியது.

மாதவிலக்கு இரத்தம் உறையாத (clots) தன்மையது. உறைந்து இரத்த கட்டிகள் மாதவிலக்கின்போது போவதென்றால் அதிகளவு இரத்தப் பெருக்கு ஏற்படுகிறது என்று அர்த்தம்.

இந்த அடிப்படைகளை வைத்துக் கொண்டுதான் மாதவிலக்கு இரத்தம் அதிகம் போகிறதா இல்லையா என்று மருத்துவர் நிதானிப்பார். இது தவிர அதிகளவு இரத்தப் பெருக்கினால் இரத்தச்சோகை(anaemia) உண்டாகும். எனவே இரத்தச்சத்து அளவு என்கின்ற ஹமோகுளோபின்(haemoglobin) ஐ அளந்து பார்த்தும் இரத்தப் பெருக்கின் உக்கிரம் அறியப்படும்.

சாதாரணமாக பூப்படைந்த பெண்களுக்கு முதல் சில வருடங்களுக்கு மாதவிலக்கின் இடைவெளி அதிகரித்து 3 மாதங்களுக்கு ஒரு தடவை வரலாம் அல்லது 15 நாட்களுக்கு ஒரு தடவை வரலாம். காலக் கெதியில் மாதவிலக்கில் ஒரு ஒழுங்குமுறை ஏற்படும்.

மாதவிலக்கு திருமணமாகாத கன்னிப் பெண்களுக்கு அதிகளவில் போவதற்கு Dysfunctional என்று சொல்வார்கள். இதற்குக் காரணம் மாதவிலக்குக்கு காரணமான ஹார்மோன்களில் ஈஸ்ரஜென்(oestrogen) என்ற ஹார்மோன் அதிகளவில் சுரந்து, கருப்பைச் சுவர்களின் உட்சவ்வுப் பருமனை அதிகரித்து அந்தச் சவ்வு உதிர்வதில் இரத்தப் பெருக்கு ஏற்படுகிறது. இந்த ஹார்மோனின் செயற்பாட்டை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க— இன்னொரு ஹோர்மோன் புறொஜெஸ்ரறோன்(progeestorone) உள்ள மருந்துகள் தரப்படும். இந்த புறொஜென்ரறோன் ஹார்மோனும், ஈஸ்ரஜேன் ஹோர்மனும் ஒரு குறிக்கப்பட்ட அளவில் கலந்திருக்கின்ற— குடும்பத்திட்ட வில்லைகளை(family planning tablets)வைத்தியர்கள் தொடர்ந்து3—6மாத காலம் வரை உபயோகித்து பின்னர் மாதவிலக்கு வட்டம் ஒழுங்கான பின்னர் விட்டு விட அறிவுரை கூறுவார்கள். கன்னிப் பெண்ணுக்கு கர்ப்பத்தடை மாத்திரையா என்று எவரும் பயப்படத் தேவையில்லை.இந்த மாத்திரைகள் கன்னிப் பெண்களின் உடலியல் இயக்கங்களை மாற்றாது.எனவே உங்கள் வைத்தியர் சரியானமுறையில் உங்களுக்கு வைத்தியம் செய்கிறார்.

அடுத்தபடியாக பருவமடைந்தபோது நீங்கள் சரியாக பராமரிக்கப்படாதபடியால் தான் இப்படி நேர்ந்ததோ என்று சந்தேகம் கொள்கிறீர்கள். இதில் ஓரளவு உண்மை இருக்கின்றதென்றே கருத வேண்டும்.


எமது கலாசாரத்தில் பெண் பருவமடைந்த காலங்களில் உபயோகிக்கப்படும் நல்லெண்ணெய், முட்டை, உழுத்தங்களி, வேப்பிலைச்சாறு, எள்ளுருண்டை என்பவற்றிலுள்ள சத்துக்கள், பருவடைந்துள்ள பெண்ணின் கருப்பையை பக்குவமாக வளர்த்து, பேணுகின்றன என்று ஆயுள் வேதம் கூறுகிறது.

நடைமுறையிலும் இவ்வாறு பருவகாலத்தில் சரியாக பராமரிக்கப்பட்ட பெண் குழந்தைகள் எதுவித கருப்பைப்பை சம்பந்தப்பட்ட நோய்களால் இலகுவில் பாதிக்கப்படுவதில்லை என்று கண்டறியப்பட்டுள்ளது.

***கேள்வி:-பெண்.வயது 23.எனக்கு கடந்த இரு வருடங்களாக மாதவிலக்கு ஏற்படும்போது அடிவயிற்றில் குத்துகிறது.பரசிற்றமோல் (Paracetamol) மாத்திரைகளை உபயோகித்தால் சுகமாகிவிடும். வெள்ளை படுதலும் உண்டு. பரிகாரம் கூறவும்.***

*பதில்:—* வலியுடன் கூடிய மாதவிலக்கு என்கின்ற Dysmenorrhoea நோயினால் பாதிக்கப்பட்டுள்ளீர்கள். நூற்றுக்கு 30 வீதமான பெண்கள் இந்த நோயினால் பாதிக்கப்படுகின்றார்கள். இதில் 75%மானோருக்கு, இது ஏன் ஏற்படுகிறது என்பதற்கு விளக்கமோ காரணமோ எதுவுமில்லை. சிலருக்கு இந்த நோயால் நாளாந்த கடமைகள் வேலைகள், கல்வி என்பவை மாதாமாதம் பாதிக்கப்படுகின்றன.

இந்த வலி பெரும்பாலும் மாதவிலக்கு ஆரம்பிக்க முன்னர் அல்லது மாதவிலக்கின்போது தொடங்கும். முதல் நாள் தாங்கிக் கொள்ள முடியாத



வலியாயிருந்து 2 நாட்களில் மெல்ல மெல்ல குறைந்துவிடும்.இந்த வலி சிலருக்கு இடுப்பைச் சுற்றியோ அல்லது கீழ்காலுக்கோ பரவிச் செல்லும். அடிவயிறு இறுகினால் போல் அல்லது தொடர்ந்து மாறாத வலியாக இதன் தன்மை இருக்கும். முன்னர் கூறியது போல் இதற்கான காரணத்தை பெரும்பாலான பெண்களில் கண்டறிய முடிவதில்லை. வயது ஆக ஆக அல்லது முதலாவது பிரசவத்தின்பின்னர் அநேகருக்கு இந்த வலி இல்லாமல் போவதுண்டு. சூலகத்திலிருந்து முட்டை வெளிப்படும்போது அத்துடன் சுரக்கப்படுகிற prostaglandin —புரஸ்டகிளாடின் என்கிற ஹார்மோன் போன்ற சுரப்பு நரம்புகளைத் தூண்டுவதால் இந்த வலி ஏற்படுவதாக நம்பப்படுகிறது.

ஒரு சிலருக்கு கருப்பையில் கட்டிகள்(fibroids) உருவாகினால் அல்லது Endometriosis என்கின்ற கருப்பையின் சீத சவ்வு தவறான வளர்ச்சிபெறுவதால் இடுப்புப் பகுதியில் உள்ளுறுப்புகள் நோய் அழற்சி பெறுவதால் கருப்பை வாசல் சிறுத்தலினால் இந்த வலி ஏற்படலாம்.

எதற்கும் ஒரு பெண் நோயியல் நிபுணரைச் சந்தித்து—Lapros copy, Salpingiography போன்ற பரிசோதனைகள் செய்து Dilatation & curettage(D&C) என்ற சத்திர சிகிச்சை செய்து மேற்சொல்லப்பட்ட காரணங்கள் இல்லை என்று காணப்பட்டால், மாதவிலக்கு காலங்களில் வலி நீக்கும் மருந்துகளை, பரசிற்றமோல், மெப்னேமிக் அசிட் (Mefnamic Acid )உபயோகித்து பயன் பெறலாம். வேறு காரணிகள் அறியப்படாவிட்டால்— அவற்றக்குரிய சிகிச்சைகள் பெறப்பட வேண்டும்.

***கேள்வி:-ஆண்.வயது 28. சிறுவயதில் விபத்தொன்றில்நெற்றியில் காயம் ஏற்பட்டு தையல் போட்டார்கள். இப்பொழுது அந்தக்காயம் பெரிய தழும்பாக இருக்கின்றது. இதனை அகற்ற முடியுமா- அல்லது குறைக்க அல்லது முற்றாக மாற்ற சிகிச்சை உள்ளதா?***

*பதில்:—* உங்களுக்கு ஏற்பட்டுள்ள தழும்பை Keloid கீலொயிட் என்று அழைப்பார்கள். காயங்களுக்கு மேல் மேலதிகமாக வளர்ந்த தழும்பு இது. இது உடலில் உள்ள fibrous திசுக்கள் காயம்பட்ட தோலுக்கு மேல் வளர்வதால் ஏற்படுகின்றது. காயங்கள் ஏற்பட்டு ஒருசில மாதங்களில் இந்த வளர்ச்சி ஏற்படுகிறது. தோலின் மட்டத்தை விட கால் அங்குலம் எழுந்து வளர்ந்த வளர்ச்சியாகக்கூட இது இருக்கும்.

இதனை இலகுவில் மாற்றவோ— குணப்படுத்தவோ முடியாது. மாதாமாதம் Cortico Steroids ஊசி மருந்தை இந்தத் தழும்புகளினுள்ளே செலுத்துவதால் இவற்றின் வளர்ச்சியைக் குறைத்து தோலோடு மட்டமாக்க முடியும். சில வேளைகளில் சத்திர சிகிச்சை அல்லது லேசர் கதிர் சிகிச்சை மூலம் அகற்ற சில வைத்தியர்கள் முற்படுவதுண்டு.ஆனால் அகற்றப்பட்ட இடத்தில் — புதிதாக, முன்னையதை விடப் பெரிய தழும்புஏற்படும் வாய்ப்பு அதிகம். சிலிக்கோன் பசைகளை தழும்புகளின் மேல் தடவி மட்டப்படுத்தும் சிகிச்சைகள் வெற்றியளிப்பதாக தற்சமயம் கூறப்படுகிறது.

இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஐயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு - 14

# நடனக்காரிகளுக்கு நடந்த பரிதாபம்

இந்திய மாநிலங்களில் ஒன்றான மகாரஷ்டிரம் நடன விடுதிகளுக்கு பெயர் பெற்றது. 1250 நடன விடுதிகள் இங்கு உள்ளன. இவற்றில் 600 விடுதிகள் தலைநகர் முப்பையிலும் ஏனையவை மாநிலத்தின் பிறபகுதிகளிலும் உள்ளன.



இப்படி விடுதிகளில் சென்று நடனமாடும் பெண்கள் 75 ஆயிரம் என்று தெரிவிக்கப்படுகிறது. தினக் கூலிக்கு நடனமாடிவந்த இவர்கள் அனைவரும் ஒரே நாளில் வேலை இழந்து விட்டனர். இவர்களது சம்பாத்தியத்தில் வாழ்ந்து வந்த இவர்களது குடும்பம் இன்று நடுத்தெருவில்.

''தேசிய காங்கிரஸ் கட்சி ஊழியர்கள் எங்களை மிரட்டுகிறார்கள். வீட்டில் ஒரு சதம்கூட இல்லை, அதனால் வீட்டுக்குக்கூட எங்களால் போக முடியவில்லை'' என்கிறார் பரம்ஜித்க்வுர் என்ற நடனக்காரி. பஞ்சாப்பில் இருந்து வந்து மும்பை வீதிகளில் நடனமாடிக்கொண்டிருந்தவர் இவர்.

இந்தப் பெண்களில் பெரும்பாலானோர் படிக்காதவர்கள். சேமிப்பு இல்லாதவர்கள். ஒரு குறிப்பிட்ட வயது வரை மட்டுமே ஆடிப் பிழைக்கக் கூடிய ஒரு பணியை தேர்வு செய்ய நேர்ந்த பரிதாபத்துக்குரியவர்கள். இன்று இவர்களுக்கு யாரும் ஆதரவு இல்லை.

வேறு எந்தத் தொழிலாய் இருந்தாலும் இப்படி தடை செய்யப்படும்போது வாடிக்கையாளர்கள் எதிர்த்துக் குரல் கொடுப்பார்கள். ஒரு விடுதிக்கு சுமார் நூறுபேர் வாடிக்கையாளர்கள் என்றாலும் மகாராஷ்ரத்தில் உள்ள முழு விடுதிகளுக்கும் லட்சக்கணக்கான வாடிக்கையாளர்கள் இருப்பார்கள். ஆனால் இந்த விடயத்தில் — இந்த நடனப் பெண்களுக்கு ஆதரவாக ஒருவராவது வாய்திறக்கவில்லை என்கிறது பிளேவியா ஆக்னஸ் என்னும் பெண்ணுரியவாதிகள் அமைப்பு.

இப்பெண்களை ஆதரித்தால் விபசாரத்துக்கு ஆதரவு என்று முத்திரை குத்தப்படலாம் என்று இவர்கள் அஞ்சுகிறார்கள். இந்த நடனவிடுதிகளின் சொந்தக்காரர்களை 'மாமாபயல்'கள் என்றும் இந்த நடனப் பெண்களை விபசாரிகள் என்றும் அமைச்சர் பட்டீர் வர்ணிக்கிறார்.

நடனத்துக்கு தடைவிதித்த மகாராஷ்டிர அரசு இந்தப் பெண்களின் மறுவாழ்வு குறித்து திட்டம் எதனையும் அறிவிக்காது மௌனமாக இருப்பது தான் வேதனை அளிக்கிறது.

# புத்தர் சிலையை அகற்றுவது.....

(20 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பினர். இதனைத் தடுப்பதற்கு வழியில்லையா?

சட்டவிரோதக் கட்டடம் என்ற வகையில் திருகோணமலை நகரசபை எல்லைக்குள் இருக்கும் எல்லா சட்டவிரோத கட்டடங்களும் கணக்கெடுக்கப்பட்டு அகற்றப்பட வேண்டும். அவ்வாறு பார்க்கப்போனால் கொறியாப்பகுதியில் சுமார் 300 குடும்பங்கள், வீரகத்தப்பிள்ளையார் ஆலயச் சூழலில் சுமார் 140 குடும்பங்கள், மட்கோ பகுதி, சீனன்குடா வரையான கடற்கரையோரம் மற்றும் புகையிரத தண்டவாளப்பகுதியில் வசிக்கும் குடும்பங்கள் என ஆயிரக்கணக்கானோரின் சட்டவிரோதக் கட்டடங்கள் அகற்றப்படவேண்டும்.

சட்டக்கோவை 81 இதனையே குறிக்கின்றது. எனவே வழிபாட்டுத்தலம் என்பதை விடுத்து அனுமதியற்ற கட்டடம் என நோக்குவதே பேரினவாதத்தரப்புக்கு சாட்டையடியாக அமையும்.

திருமலையில் சர்ச்சைக்குரிய புத்தர்சிலை, தான் நினைத்தால்கூட எழும்பிப்போக முடியாத அளவுக்கு முட்கம்பிகளால் முற்றுகையிடப்பட்டுள்ளது. எனினும் இன்றைய யதார்த்த நிலைப்படி புத்தர் சிலையை அப்புறப்படுத்த நேரிடும். ஆனால், இப்போது தன்மானப்பிரச்சினையால் சிங்களத்தரப்பு திண்டாடுகிறது.

திருகோணமலை தமிழர் தரப்பு நியாயமும், நீதியும் செத்துவிடப்போவதில்லை. காலஓட்டத்தில் விடிவு பிறக்கும்

# ஈழத் தமிழருக்காக தனித்து குரல் கொடுக்கும் வைகோ

இந்தியாவின் புதிய மத்திய அரசு பதவி ஏற்ற காலம் முதல் வைகோ என்ற பெருமகன் மீது ஈழத்தமிழர் கொண்ட எதிர்பார்ப்புகள் பன்மடங்கு அதிகரித்திருந்தன.

சமீபத்தில் இலங்கை ஜனாதிபதி சந்திரிக்கா இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தில் இலங்கையின் விமானப் பரப்பைப் பாதுகாக்க இந்தியா உதவும் என்ற தோரணையில் பிரதமர் மன்மோகன்சிங் கூறி இருப்பதற்கு வைகோ தனது ஆதங்கத்தையும், அதிருப்தியையும் பிரதமரை நேரில் சந்தித்து உடனடியாகவே வெளியிட்டுள்ளார்.

சுனாமி நிவாரணத்துக்காக பொதுக்கட்டமைப்பு விடயத்தில் மன்மோகன்சிங் ஈழத் தமிழருக்கு சாதகமாகக் கருத்து வெளியிட்டாலும் வான் பரப்பைப் பாதுகாப்போம் என்று கூறுவது ஈழத் தமிழருக்கு நிச்சயமாகக் கவலை தரும் விடயம் ஆகும்.

வைகோ இந்தக் கவலையை சரியான விதத்தில் பிரதமருடனான சந்திப்பில் எதிரொலித்திருப்பார் என்பதில் ஐயமில்லை. வைகோவின் கட்சி வாஜ்பாயின் ஆட்சியிலும் பங்காளியாக இருந்தது என்றாலும் காங்கிரஸ் கூட்டணியைப் பொறுத்தவரை வைகோவின் கட்சியும், ராமதாஸின் கட்சியும் இணைந்து அரசை விட்டு வெளியேறினால் காங்கிரஸ் அரசு பெரும்பான்மையை இழக்கும். மொத்தம் 10 எம்.பிக்கள் இந்த இரு கட்சிகளுக்கும் உள்ளனர். இத்துடன் தி.மு.கவின் 16 எம்.பிக்களும் சேர்ந்தால் காங்கிரஸ் அரசு கவிழ்வது நிச்சயமாகிவிடும்

இவ்வாறான ஒரு பேரம் பேசும் பலம் வைகோ கட்சிக்கு வாஜ்பாய் ஆட்சியில் இருக்கவில்லை. வைகோ வெளியேறினாலும் ஆட்சி கவிழாது என்ற வகையிலான பெரும்பான்மை வாஜ்பாய்க்கு இருந்தது.

ஆக வைகோவை உதறிவிட்டு முடிவெடுப்பது சோனியாவுக்கு சிரமமே! இத்தகைய ஒரு நிலையில் ஈழத் தமிழரின் நிலையை தர்க்க ரீதியான நியாயங்களுடன்



வைகோ

சோனியாவுக்கு எடுத்து விளக்கும் பெரும் கடமை வைகோவின் தலையில் வீழ்ந்துள்ளது. மற்றொரு ஈழ அனுதாபியான ராமதாஸ் தனது சொந்தப் பிரச்சினைகளில் மூழ்கி இருப்பதால் ஈழத் தமிழர் நிலையை மூர்க்கமாக ஆதரிக்கும் நிலைப்பாட்டில் முன்னர் போல் தீவிரமாக இல்லை என்றே தெரிகிறது.

குறிப்பாக ஈழத் தமிழருக்கு இந்தியாவை ஒத்த சமஷ்டியைத் தானும் பெற்றுத் தரும் கடமை இந்தியாவுக்கு உள்ளது. கேவலம் சுனாமி நிவாரணத்துக்கான ஓர் அமைப்பை நிறுவவே முரண்டு பிடிக்கும் சிங்கள இனவாதிகளின் நிலை நியாயமல்ல என்பதை இந்தியா புரிந்துகொள்ளச் செய்ய வேண்டும். இந்திய- இலங்கை உடன்படிக்கையை எதிர்த்து நின்ற ஜே.வி.பி இன்று இந்தியாவைப் போற்றிப் புகழ்கின்றது. சரியோ, தவறோ ஜே.வி.பிக்குப் பின்னால் ஒரு மக்கள் சக்தி இருக்கவே செய்கிறது. ஆகையால் ஜே.வி.பிக்கும் அதனூடாக அதன் பின்னாலுள்ள இலட்சக் கணக்கான சிங்கள மக்களுக்கும் இந்தியா உண்மையை உணர்த்த முன்வர வேண்டும். பொதுக்கட்டமைப்பை இந்தியா ஆதரித்து எடுத்த நிலைப்பாடு ஜே.வி.பிக்கு அறிவூட்டும் நடவடிக்கையின் முதல் கட்டமாக அமைய வேண்டும் என்பதே நியாயம்வேண்டும் ஒவ்வொருவரது பிரார்த்தனை ஆகும்.

இதனை இந்திய அரசுக்கு பக்குவமாக எடுத்துச்சொல்லும் கடமை வைகோவிடம் ஈழத் தமிழரால் தரப்பட்டுள்ளது. கடந்த காலத் தவறுகள் தமிழர் தரப்பால் இனிமேல் விடப்படமாட்டாது என்பதைதமிழர் தரப்பும் உறுதியாக அடித்துச்சொல்ல வேண்டும்.

ஈழத் தமிழருக்கு சுயாட்சி தர வேண்டும்; உரிமை தரப்பட வேண்டும் என சுப்பிரமணிய சாமி கூடக் கூறியுள்ளார். புலிகளை கண்மூடி எதிர்க்கும் சுவாமி கூட தமிழருக்கு உரிமை தர சிங்களவர் மறுக்கின்றனர் என்ற உண்மையை உணர்ந்துள்ளார். அப்படியானால் அத்தகைய சுயாட்சியை வழங்க சிங்கள இனவாதிகளை வற்புறுத்தும் கடமையை இந்தியா செய்ய வேண்டாமா?

மேலும் ஈழத் தமிழர் தரப்பின் கை ஓங்கினால் தமிழகத்தில் தீவிரவாதம் தலை தூக்கும் என்ற முட்டாள்தனமான பயத்தை இந்தியா கைவிட வேண்டும். சிங்களவர் ஈழத்தமிழரை ஒடுக்கியது போல் இந்திய மத்திய அரசு தமிழக மக்களை ஒருபோதும் ஒடுக்கியதில்லை. இந்தியாவில் தீவிரவாதம் உள்ள ஒரே மாநிலமான ஜம்முகாஷ்மீர் மாநில மக்கள் கூட ஈழத் தமிழரை விட கூடுதல் உரிமைகளை அனுபவிக்கின்றனர் என்பதே உண்மை.

எஸ்.சுரேந்திரஜித்

அப்படி இருக்க இந்திய மக்கள் பிரிவினை கோர நியாயமே இல்லை. உரிமைகளைக் கொடுத்தால் எவர்தான் பிரிவினை கேட்கப் போகிறார்? உண்டு, குடித்து உல்லாசமாக வாழவே மக்கள் விரும்புவர். அதற்கு உரிமை கொடுத்தால் தமிழக மக்கள் ஏன் பிரிவினையை விரும்பப்போகிறார்கள்? ஆக ஈழத் தமிழர் கை ஓங்குவது எவ்விதத்திலும் தமிழகத்தில் பிரிவினையை தூண்டாது என்ற உண்மையை இந்திய கொள்கை வகுப்பாளரின் மனதில் ஊன்ற வைப்பதே இன்றைய தேவை.






## சொற்சிலம்பம் போட்டி இல. 164

சொற்சிலம்பம் 164 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் ஜூன் 19 ஆம் திகதி ஆகும். விடைகள் ஜூன் 26 ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜூலை 03ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.162க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250ரூபாவும், இரண்டாவது பரிசாக 150ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.


**அனுப்ப வேண்டிய முகவரி:**

'சுடர் ஒளி'

85,ஜெயந்தமல்விமாராச்சி மாவத்தை,

கொழும்பு–14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 164



## சொற்சிலம்பம் போட்டி இல.162

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ம | 2 தி | ப் | 3 பு | | 4 ப | த | 5 வி |
| 6 க | றை | | 7 வ | 8 ச | தி | | ல் |
| த் | | 9 க | ண | தி | | 10 அ | லை |
| 11 து | 12 வ | ர | ம் | | 13 நே | ரு | |
| 14 வ | ட | ம் | | 15 இ | ரு | ம் | 16 பு |
| ம் | | 17 ப | 18 தி | ய | ம் | | டை |
| | 19 மு | ற் | ற | ல் | | 20 ச | ய |
| 21 ந | ன் | று | | 22 பு | ஞ | க | ன் |

## சொற்சிலம்பம் போட்டி இல.164

**இடமிருந்து வலம்**

1.முதலமைச்சர்.

4. அரைவாசி.

6. வேகம்/ விரைவு.

7.ஒரு பூம[illegible]. இந்தப் பூமரத்தின் பெயரில் உள்ள மாளிகை தான் இலங்கைப் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லம்.

8. பெண்[illegible].

10. வயல் எல்லையில் அமைப்பது.

11. வறுமை.

13.தரகருக்கு வழங்கப்படுவது.

15.அறிவு தரும் துறை.

16.விருந்தினன்.

18. நீர் நிலைக்குள் இருக்கும் சேற்றுப் பகுதி.

19.கூற்றுவன்.

20. பிரயாணம்.

21.தோள் முன்கை.

**மேலிருந்து கீழ்**

1. சிறப்பானது/ விசேடம்.

2. அழிந்தல்.

3. அறிவு/ சந்திரன்.

4.பாதையில் இரண்டு இடங்களை இணைப்பது.

5.இந்திய மாநிலங்களில் ஒன்று.

7.கத்தியைத் தீட்டுவது இதனால்.

9. அணி/ ஒரு இடத்தில் நில்.

10. ஒரு தானியப் பயிர்.

12.நிதியம்/ பாக்கியம் தரும் சரக்கு/ பொன்.

14.ஆரம்பம்/ தொன்மை/ அந்தத்தின் மறு பக்கம்.

15.கருமையான.

16.இ[illegible]கும் உ[illegible]டோ அடைக்கும் தாழ்?

17. உறுதியான தன்மை.

18. நல்ல.

## சொற்சிலம்பம் போட்டி இல. 161

1. உ.சஜீவ், J/3, அன்டர்சன் தொடர்மாடி, கொழும்பு–05.
2. திருமதி.ஏ.கே. சிங்கம், இல.141, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
3. ஆர்.ஏ.ஜெயராஜா, 68/3, கன்னாரத்தெரு, கொழும்பு – 13.

**பாராட்டுப் பெறுவோர்**

1. இந்துமதி வடிவேல், இல.5, ஏறாவூர், செங்கலடி.
2. சுபா ஜெகநாதன், நல்லூர், யாழ்ப்பாணம்.
3. வி.செல்வநாயகம், சிவன் கோவில் வீதி, புத்தூர்.
4. வ.மன்னர் அன்ரனி, குருநகர், யாழ்ப்பாணம்.
5. சி.லக்ஷன், கொம்மாந்துறை, செங்கலடி.
6. நா.சுந்தரலிங்கம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
7. பு.நேரிந்தன், யோகபுரம் மத்தி, மல்லாவி.
8. ஜெ. மோகன கிருஷாந்த், சிவபுரி, திருகோணமலை.
9. வ.ஆ.அதிருபசிங்கம், அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை.
10. செல்வி. தா.மோகன முகுந்தன், சங்குவேலி, மானிப்பாய்.

# பித்தன் பதில்கள்

*அ.தங்கராணி — அச்சுவேலி*

**கேள்வி:— பித்தா! சிலரிடம் மைக்கை கொடுத்தால் திருப்பி வாங்கவே முடிவதில்லையே. பேசிக்கொண்டே இருப்பார்கள். இவர்களை திருத்த ஏதாவது வழி உண்டா?**

பதில்:— அவர்கள் பேசும் விழாக்களுக்கு — அவர்களின் மனைவிமாரையும் அழைத்து — முன் ஆசனத்தில் அமர்த்தி விட்டால் போதும். அநேகமாக பேசவே மாட்டார்கள்.



வாயைத் திறந்தாலும் சொல் வராது.

*திருமதி சித்திராதேவி — பாரதிபுரம்*

**கேள்வி:— பித்தா! சமூகத்தில் கணவன் தான் மனைவியை அடிப்பது வழக்கம். அப்படி பொம்பிளையை அடிப்பவனை பொன்னையன் என்பார்கள். ஆனால் உம்மை அடிக்கும் மனைவிக்கு என்ன பட்டம் சூட்டலாம்.**

பதில்:— அம்மாடி... உமக்கு விரும்பினால் ஏதாவது பட்டம் சூட்டி மகிழும்... ஆனால், என்னிடம் கேட்காதேயும்... ஏனென்றால் நான் ஏதாவது பட்டத்தைச் சூட்டப் போக.. அவள் 'மவனே.. பட்டமா சூட்டுறாய்?' என்று கேட்டு என்னை துவைத்து — பிழிந்து காயப் போட்டுவிடுவாள். வேண்டாம் பிளீஸ்! ஏதோ கூட்டாயிருக்கிற என்ரை குடும்பத்தில புகுந்து கும்மியடிச்சு குழப்பம் பண்ணியிடாதே ராசாத்தி.....

*வத்சலா—வேலணை.*

**கேள்வி:— பித்தா! நீர் சைவமா அசைவமா?**

பதில்:— வீட்டிலே சைவம்.. வெளியிலே — அதுவும் வேறு யாரும் வாங்கித் தருவதாயின் — அசைவம்.



*தமிழினி — மல்லாவி*

**கேள்வி:— அன்பின் பித்தா! மாமனிதர் சிவராம் தொடர்பான கொலையில் கொலையாளிகளிடமே — கொலையாளிகளை கைது செய்யுமாறு கேட்டால் அவர்கள் எவ்வாறு கண்டுபிடித்துத் தருவார்கள்?**

பதில்:— 'எங்கப்பன் குதிருக்குள் இல்லை' என்றொரு பழமொழி சொல்வார்கள்... அதே கதைதான் இப்போது நடக்கிறது. என்ன செய்வது. பூனைகள் பாலை காவல் காக்கும் நாடு இது.

*செ.வைதேகி—பூவரசன்குளம்.*

**கேள்வி:— பித்தா! உமது மனைவி உமக்கு அடிக்கிறாள் என்று புலம்புகிறீரே! அடிக்காமல் வேறு ஏதாவது தண்டனை தரும்படி கேட்டுப் பார்க்க வேண்டியது தானே?**

பதில்:— கேட்டேனே! 'அக்கம் பக்கத்தவர் பார்த்தால் அசிங்கமா இருக்கிறது. எனவே வேறு ஏதாவது தண்டனை தரலாம் தானே!' என்று கேட்டு கெஞ்சிப் பார்த்தேன்... சம்மதித்தாள். தான் சமைக்கும் சாப்பாட்டை மூன்று நேரமும் சாப்பிடும்படி சொன்னாள். அது முடியுமா... அதனை சாப்பிடுவதைவிட அடிவாங்குவது ஒன்றும் கஷ்டமான காரியமாக எனக்குத் தெரியவில்லை. எனவே அடியை Continue பண்ணும்படி கூறிவிட்டேன்.

*தெ.சிவலிங்கம்—ஆலடி*

**கேள்வி:— பித்தா! உமக்கு எத்தனை பிள்ளைகள் அவர்களில் யார் மீது அன்பு வைத்திருக்கிறீர்?**




பதில்:— இரண்டு பிள்ளைகள் எனக்கு.. அவர்களில் மகள் மீது நான் அன்புவைத்திருக்கிறேன். ஆனால் மகன் மீது அனுதாபம்வைத்திருக்கிறேன். ஏனென்றால் பாவம் அவனும் எதிர்காலத்தில் என்னைப் போல் ஒருத்தியிடம் மாட்டுப்பட்டு வாங்கிக் கட்டப் போகிறானே என்ற அனுதாபம் தான் அது.

*ச.ஐங்கரன் — மல்லாகம்*

**கேள்வி:— பித்தா! ஷாஜகான் — தன் காதலி மும்தாஜுக்காக தாஜ்மஹாலை கட்டினான். அதேபோல் நானும் எனது காதலிக்காக ஏதாவது கட்டலாம் என்று ஆசைப்படுகிறேன்.... அப்படியென்றால் என்னத்தை கட்டலாம்?**

பதில்:— முதலில் உமது காதலியின் கழுத்தில் ஒரு தாலியைக் கட்டும். அதன்பின் வேறு ஏதாவது கட்டுவதை பற்றிச் சிந்தியும்.

*கு.வரதன்—மாளிகாவத்தை*

**கேள்வி:— பித்தா! அழகான பெண்களின் அசைவுகளை, இளைஞர்களாகிய நாம் பார்க்கிறோம். ரசிக்கிறோம். அது எமது மனதுக்கு சந்தோஷத்தைத் தருகிறது. ஆனால் அதை அந்தப் பெண்கள் தப்பாக எடுத்துக் கொள்கிறார்களே! எம்மை பார்த்து முறைக்கிறார்களே ஏன்?**



பதில்:— ஆமா... இவரு பெரிய சச்சின். பட ஹீரோ விஜய்... புடிக்குதாம்.. ரசிக்குதாம்... யோவ் முதல்ல சொந்தமாய் சிந்திக்க பழகுய்யா.. அதவுட்டுப்புட்டு சச்சின் பட பயலக்கெல்லாம் எடுத்து நம்மகிட்ட உடாத..மவனே நாமளே.. கில்லி... நம்ம கிட்டயேவா....

*த.ரவீந்திரன்—ஊரெழு*

**கேள்வி:— பித்தா! கனநாட்களாக ஒரு ஜோக்கையும் காணவில்லையே! ஒன்றை எடுத்து விடுவதுதானே?**

பதில்:— நான்கு திருடர்கள் ஒரு வங்கியை கொள்ளையடித்து மூட்டை மூட்டையாக பணத்தை அள்ளிச் சென்றார்கள். தங்களது மறைவிடத்துக்குச் சென்ற நால்வரும் கொள்ளையடித்த பணத்தை பங்கு போட்டுக்கொள்ள முயற்சித்தனர். ஆனால், மூட்டைக் கணக்கிலே இந்த பணத்தை எண்ணிப் பார்த்து ஒவ்வொருவரின் பங்கையும் பிரித்து எடுப்பது என்பது இலேசுப்பட்ட காரியமாக இருக்கவில்லை. எனவே, அவர்களில் ஒருவன் ''இவ்வளவு பணத்தையும் நாங்கள் வேலை மினக்கெட்டு எண்ணி முடிக்கவே இரண்டு நாளாகும். எனவே இந்தப் பணத்தை ஒரு அறையில் போட்டு பூட்டிவிட்டு செல்வோம். நாளை வந்த உடனேயே பிரித்து எமது பங்கை எடுத்துக் கொள்வோம்'' என்றான்.

அவனது பேச்சு மற்றவர்களுக்கு புரியவில்லை. அவர்களில் ஒருவன் கேட்டான் ''என்னது இன்றைக்கு எண்ணினால் மட்டும் இரண்டு நாட்களாகும் என்கிறாய். ஆனால் நாளைக்கு வந்த உடனேயே பங்கை பிரித்துக் கொள்வோம் என்றாயே அது எப்படி?'' என்று கேட்டார்.

முதலாமவன் சொன்னான்.. ''நாளைக்கு காலையிலே வெளியாகும் பேப்பர்களை பார்த்தால் இதில் எவ்வளவு பணம் இருக்கிறது என்பது தெரிந்துவிடும். அதன் பின் எம்முடைய பங்குகளை சுலபமாக பிரித்துக்கொள்ளக் கொள்ளலாம் அல்லவோ'' என்றான்.


*சு.லட்சுமணன் — கைதடி*

**கேள்வி:— பித்தா! ஒரு மீசை முளைச்ச ஆம்பிளையா இருந்து கொண்டு பெண்டாட்டியிடம் அடிவாங்கிக் கொண்டு — புடைவை — சட்டை தோய்ச்சுக் கொண்டு... சீ வெட்கம் — மானம் — ரோசம், சூடு, சுரணை இல்லையா?**

பதில்:— யோவ்... ஊருக்குள்ள பலபேர் வேலைக்காரியளின்டை புடைவை, சட்டை, தோய்ச்சுக் கொண்டு இருக்கிறானுங்கள். நான் பெண்டாட்டியின்ரை தானே? NO வெட்கம்; No மானம், No ரோசம், No சூடு, No சொரணை.

*அ.அஜந்தன் — முள்ளிவாய்க்கால்*

**கேள்வி:— பித்தா! காதல் தோல்வியால் தற்கொலை செய்து கொண்டு அநியாயமாகத் தங்கள் உயிரை மாய்ப்பவர்கள் எந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள்?**



பதில்:— தங்கள் மீதே தங்களுக்கு நம்பிக்கை இல்லாத கோழைகள். ஏனென்றால் அந்த ஒருவரை தவிர இனி எவருமே தங்களை காதலிக்க மாட்டார்கள் என்ற முடிவுடன் தானே தற்கொலை செய்து கொள்கிறார்கள். இந்த ராணி போனால் இன்னொரு வாணி என்று நினைத்தால் அப்படிப்பட்ட அவசர முடிவு எடுக்கமாட்டார்கள்.


*வை.தவச்செல்வன் — மன்னார்.*

**கேள்வி:— பித்தா! நீர் உமது மனைவியை பெண் பார்க்கச் சென்றபோது அவருடன் முதன் முதலில் என்ன பேசினீர்?**

பதில்:— நான் எங்கே பேசினேன். அவள் தான் என்னைப் பார்த்து விட்டு என்னுடன் கொஞ்சம் தனியாகப் பேசவேண்டும் என்றாள். நானும் ஏதோ என்னுடைய குணம், தொழில், பழக்கவழக்கங்கள் பற்றி பேசப்போகிறாளாக்கும் என்று நினைத்தேன். ஆனால் அவளோ தனிமையில் கூட்டிச்சென்று தன்னுடைய அப்பா 12 லட்சம் ரூபா பணத்தை வங்கியிலே போட்டு வைத்திருப்பதாகவும், தன்னுடைய தாய் 58 பவுண் நகை வைத்திருப்பதாகவும்.. எனவே இவை எல்லாம் தனக்கு வருகிற மாத்திரி சீதனம் கேட்கும்படியும் சொன்னாள்.... இது தான் ஐயா நான் பேசிய முதல் பேச்சு....

**பித்தன் மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:-**

பித்தனிடம் நீங்கள் எத்தனை கேள்விகளையும் கேட்கலாம். தரமான கேள்விகளுக்கு பித்தன் பதில் அளிப்பான். நீங்கள் அனுப்பும் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி:-



பித்தன் பதில்கள்
'சுடர் ஒளி வாரஇதழ்'
85, ஜெயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14

*சொ.தணிகாசலம் — வெள்ளவத்தை*

**கேள்வி:—பித்தா! எனது வீட்டுக்கு — எனது மகளுக்கு அடிக்கடி ரெலிபோன் அழைப்புகள் வருகின்றன. ஆனால் நான்**



**ரெலிபோனை தூக்கினால் றோங் நம்பர் என்று சொல்லிவிட்டு வைத்து விடுகிறார்கள். என்ன காரணமாக இருக்கும்?**

பதில்:— அப்பு. இது றோங் நம்பர் இல்லை. உமது மகளுக்கு வரும் றோங் நண்பர்களின் அழைப்பு... கொஞ்சம் கடிவாளத்தை இழுத்துப்பிடியும். இல்லாவிட்டால் உம் வீட்டுப் பசு பொதி சுமக்கத் தொடங்கிவிடும் ஜாக்கிரதை.

*க.சுதர்ஸன் — கொடிகாமம்*

**கேள்வி:— பித்தா! உமது மனைவியிடம் தொடர்ந்து அடிவாங்கிக் கொண்டே இருக்கிறீர்... போடி கழுதை என்று கலைத்துவிட வேண்டியதுதானே?**

பதில்:— கலைக்கலாம்... கழுதை என்றும் சொல்லலாம்.. ஆனால் இதுவரை என்னை கையாலே அடித்தவள், இனிமேல் காலாலே எட்டி உதைத்து விடுவாளே என்ற பயம் தான்... நான் அப்படி இதுவரை செய்யவில்லை.

*கு.வாசுகி—இமையாணன்*

**கேள்வி:— பித்தா! நமது தமிழ் சினிமாவிலே தந்தையர்களை போல் பிள்ளைகளும் சினிமாவிலே நுழைந்து நடிகர்களாகி விடுகிறார்களே! வெளிநாட்டு சினிமாத்துறையிலும் அப்படி நடைபெறுகிறதா?**

பதில்:— இதில் வெளிநாடு — உள்நாடு, தமிழ் — ஹிந்தி — ஆங்கிலம் என்ற வேறுபாடெல்லாம் கிடையாது. பல நாடுகளிலும் நடக்கிறது. புரூஸ்—லீயின் மகன் பிரன்டன் லீ நடிக்க வந்தார். ஆனால் முதல் படத்துடனேயே கொல்லப்பட்டு விட்டார். தற்போதைய வரவு அதிரடி — அக்ஷன் நடிகர் ஜாக்கிசானின் — மகன் ஜேசிசான். 21 வயதான இவர் ஆங்கிலப் படம் ஒன்றில் நடித்து வருகிறார். விரைவில் தந்தையுடன் சேர்ந்து படமொன்றில் நடிக்க ஒப்பந்தமாகி உள்ளாராம்.

# கம்பி எண்ண வைத்த விடைத்தாள் மோசடி

அண்ணா பல்கலைக்கழகத்தில் இடம் பெற்ற விடைத்தாள் மோசடி பற்றிய பரபரப்பு இன்னும் தமிழ் நாட்டில் அடங்கவில்லை. ஐந்து பொறியியல் கல்லூரிகளைச் சேர்ந்த உயர் வகுப்பு மாணவர்கள் இதுவரை கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இன்னும் 20 மாணவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர்.

விடைத்தாள்களை மாற்றி வைத்த அண்ணா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மூன்று ஊழியர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களிடம் இருந்து 8 லட்சம் ரூபா கைப்பற்றப்பட்டுள்ளது.

பரீட்சையின் போது இந்த மாணவர்கள் எழுதிய விடைத்தாள்களை வெளியே எடுத்துவிட்டு, அந்த இடத்தில் இம்மாணவர்கள் வெளியே பணம் கொடுத்து வாங்கி சரியான விடைகளை எழுதிய விடைத்தாள்களை வைத்து விடுவதற்கு ஒவ்வொரு மாணவரிடமும் இந்த ஊழியர்கள் 10 ஆயிரம் ரூபா பணம் பெற்றார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

விடைத்தாள்களை கள்ளச் சந்தையில் வாங்குவதற்கும் அவற்றை நிரப்பி அண்ணா பல்கலைக்கழக ஊழியர்களிடம் ஒப்படைப்பதற்கும் பெரும் தொகையான பணம் கொடுக்கப்பட்டதால் இந்த மோசடியில் மாணவரின் பெற்றோரும் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று அண்ணா பல்கலைக்கழக உபவேந்தர் நம்புகிறார். ஒரு மாணவன் 10 ஆயிரம் ரூபாவை (இந்திய ரூபா) சேமித்து வைத்திருப்பது சாத்தியம் இல்லை.

இந்த மோசடியில் ஈடுபட முயன்று அது கை கூடாமல் போன மாணவன் ஒருவன் மூலமே இந்த மோசடி அம்பலத்துக்கு வந்தது. இந்த மாணவன் இந்த விவகாரத்தை ரகசியமாக ஈமெயில் மூலம் அண்ணா பல்கலைக் கழகத்துக்கு தெரியப்படுத்தி விட்டான்.



இது பற்றி விசாரித்த துணை வேந்தர் விடைத்தாள் மோசடியில் ஈடுபட்ட தனது பல்கலைக் கழக ஊழியர் ஒருவரிடம் மாணவனின் பெற்றோர் போல் பேசினார். பணம் தந்தால் விடைத்தாள் கிடைக்கும் என்று அந்த ஊழியர் சொல்லவே விஷயத்தை அப்படியே பொலிஸாரிடம் தெரிவித்துவிட்டார் உபவேந்தர்.

2002 இல் தமிழகத்தின் 230 கல்லூரிகளும் அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டன. இதுவே இந்த மோசடிகளுக்குக் காரணம் என்கின்றனர் கல்வி மான்கள்.

அண்ணா பல்கலைக்கழகம் தமிழகம் முழுவதும் உள்ள கல்லூரிகளை நிர்வகிப்பதால் வினாத்தாள்கள் பரீட்சை நடைபெறுவதற்கு ஒரு வார காலத்துக்கு முன்னரே கல்லூரிகளுக்கு அனுப்பப்பட்டு விடுகின்றன.

இந்த கால இடைவெளியைப் பயன்படுத்தி வினாத்தாள்களை வெளியே கொண்டு சென்று அச்சிடவும் பரீட்சை முடிந்து அண்ணா பல்கலைக்கழகத்துக் கொண்டு சென்று திருத்த வேலைகளுக்காக விடைத்தாள்கள் வைக்கப்படும் போது அசல் விடைத்தாள்களை வெளியே எடுத்துவிட்டு திருத்தி எழுதப்பட்ட விடைத்தாள்களை இந்த இடத்தில் வைப்பதற்கும் அவகாசம் கிடைக்கிறது. இத்தகைய மோசடிகளுக்கு எல்லாம் இந்த கால அவகாசம் தான் காரணம் என்று தமிழ்நாடு பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கல்வித்துறையிலும் சமூக மதிப்பீடுகளிலும் காணப்படும் வீழ்ச்சிகளின் வெளிப்பாடுதான் இத்தகைய சம்பவங்கள் என்று உணர முடிகிறது.

ஏட்டுக் கல்வியையே பிரதானமாக சொல்லித்தரும் தற்போதைய கல்வி முறையில் தில்லு முல்லு செய்வதில் மட்டும் 'பிராக்டிகல்' பயிற்சி கிடைத்து விடுகிறதுபோலும்.

# புத்தர் சிலையை அகற்றுவது பேரினவாதிகளுக்கு இப்போது கௌரவப்பிரச்சினை



திருகோணமலையில் பஸ்தரிப்பு நிலையத்துக்கு அண்மையில் உள்ள முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் இரவோடு இரவாக வைக்கப்பட்ட புத்தர் சிலையை அகற்றுவது என்பது இப்போது பேரினவாதத் தரப்புக்கு கௌரவப் பிரச்சினையாக மாறியுள்ளது. இந்நிலையில் மாற்று வழியைத் தேடும் படலம் ஆரம்பமாகி உள்ளதாக அறியமுடிகிறது.

திருகோணமலை பஸ்தரிப்பு நிலையத்தில் இருக்கும் ஆட்டோ தரிப்பிடத்தில் மே மாதம் 15ஆம் திகதி அதிகாலையில் சட்டவிரோதமாக வைக்கப்பட்ட புத்தர்சிலையினால் பல்வேறு சர்ச்சைகள் கிளம்பின. இதனால் இவ்விவகாரம் திருகோணமலை நீதிமன்றுக்கு கொண்டு செல்லப்பட்டது.

சட்டக் கோவை 81 இன் பிரகாரம் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கட்டடம் தொடர்பில் இவ்வழக்கை பொலிஸார் தாக்கல் செய்து இருந்தனர்.

இந்த குறிப்பிட்ட சட்டக் கோவையின்படி சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட புத்தர்சிலை அகற்றப்படவேண்டுமாயின், நகரசபையின் அனுமதி இல்லாமல் திருமலை நகரில் அமைக்கப்பட்ட சுமார் மூன்று இந்து ஆலயங்கள் அகற்றப்பட வேண்டும் என பொலிஸ்தரப்பு வாதங்களை முன் வைத்தது. இதுவே பேரினவாதிகளின் எண்ணமும் ஆசையுமாகும்.

சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட இந்து ஆலயங்கள் அகற்றப்படுவது பற்றி ஆட்சேபனை தெரிவிக்காத தமிழர் தரப்பு, இதே போல் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட பௌத்த விகாரைகள், குடியிருப்புகள் அகற்றப்படுமாயின் இந்துக் கோயில்களையும் அகற்ற முடியும் என தெரிவித்துள்ளது.

இதனைத் தவிர்க்க வேண்டுமாயின் சர்ச்சைக்குரிய புத்தர்சிலையை அகற்ற வேண்டும்.

திருகோணமலை நகராட்சி மன்ற எல்லைக்குள் அனைத்து சமூகத்தவரும் வழிபடுவதற்குரிய 23 வழிபாட்டுத்தலங்கள் அதன் அங்கீகாரமின்றி அமைக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப் பட்டுள்ளது.

அவற்றில் 12 விகாரைகள், 5 இந்து ஆலயங்கள், 5 கிறிஸ்தவ ஆலயங்கள், ஒரு பள்ளிவாசல் ஆகியன அடங்குகின்றன.

இலிங்க நகர் இரண்டாம் வீதியில் அமைந்துள்ள பள்ளிவாசல் ஆரம்பம் முதல் முஸ்லிம்களின் வழிபாட்டு இடமாக இருந்து வருகின்றது. அத்துடன் அமைதியான சூழலில் யாருக்கும் இடைஞ்சல் இன்றி அது காணப்படுகிறது.

அங்கீகரிக்கப்படாத இந்து ஆலயங்கள் அகற்றப்பட வேண்டிய தேவை நகரசபைக்கு ஏற்பட்டால் மேற்சொன்ன முஸ்லிம் பள்ளிவாசல், வெவ்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கிறிஸ்தவ உருவச்சிலைகள் என்பவற்றையும் அகற்றவேண்டிய நிலை ஏற்படும். இதனால் ஒட்டுமொத்தமாக எல்லா மதத்தவர்களின் எதிர்ப்பையும் பேரினவாதம் சம்பாதிக்கப்போகிறது.

உவர்மலையில் ஆஞ்சநேயர் ஆலயம், உவர்மலைச் சந்தி (கண்டிவீதி) வழிபடுபிள்ளையார் ஆலயம், உவர்மலை கீழ்க்கரை வீதியில் விஷ்ணு ஆலயம், நீதிமன்ற வீதியில் முனியப்பர் ஆலயம் மற்றும் லிங்கநகரில் பிள்ளையார் ஆலயம் ஆகிய ஐந்தும் அனுமதியற்ற இந்து ஆலயங்கள் என அடையாளப்படுத்தியுள்ளனர்.

திருகோணமலையில் சட்டவிரோதமாக நகரசபையின் அனுமதியின்றி அதன் எல்லைக்குள் 12 புத்தர் சிலைகள் (விகாரைகள்) அமைக்கப்பட்டுள்ளன.

அனுமதியற்ற இந்து ஆலயங்கள் அகற்றப்படும்போது குறிப்பிட்ட 12 புத்தர்சிலைகளும் அகற்றப்படவேண்டும். நடக்குமா?

-மனோ-

ஆட்டைக்கடித்து மாட்டைக்கடித்து ஆளைக் கடித்த கதைபோல கோணேசர் கோயிலுக்கு முன்பாகவும் புத்தர்சிலை ஒன்றை வைப்பதற்கு இப்போது முழு முயற்சியுடன் ஈடுபட்டு வருகின்றனர் சிங்களத்

(21 ஆம் பக்கம் பார்க்க)

# ஒரு தமிழனின் கதை!.....

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயந்தன் பதினொரு மணிபோல டவுணுக்குப் புறப்பட்டான். போனவன் ஒரு மணி நேரத்தில் பரபரப்புடன் திரும்பி வந்தான். உடனடியாக தன் தம்பி செந்தூரனை அழைத்தான்.

''தம்பி இங்க பாரு... இண்டைக்கு நம்ம ஊரை இராணுவம் சுற்றி வளைக்கப் போகுதாம். உன்னிடம் படிக்கிறதுக்காக நிறைய பொடியங்கள் டியூஷனுக்கு வந்து போறதால உன்மேல அவையளுக்கு சந்தேகம் இருக்கிறதா பேசிக்கிறாங்க. நீ இங்க இனி இருக்கக் கூடாது. இந்தா இது நுவரெலியாவில இருக்கிற என்ர உயிர் நண்பனின் விலாசம். ஒரு மணிக்கு பஸ் ஒன்று போகுது. நீ அதில் போய்விடு சுணங்காம புறப்படு தம்பி.....''

செந்தூரனுக்கு அவர்களை விட்டுப்போக மனமில்லை. இவ்வளவு நாளும் பிறந்து வளர்ந்து, விளையாடி மகிழ்ந்த சொந்த மண்ணைவிட்டு உயிருக்குப் பயந்து வேறு இடத்துக்கு ஓடுவதா... முடியாது... உயிர் போனாலும் சொந்த மண்ணில்தான் போக வேண்டும். போராடிச் சாவதை விட்டுவிட்டு ஓடி ஒளிவதா?...''

ஆனால், அண்ணன்மார் சொல்லைத் தட்டமுடியவில்லை. தாய் சொல்லைத் தட்டினால்கூட தனையன் சொல்லை அவனால் தட்டமுடியாது. ஏனென்றால் தாய், தந்தை எல்லாமே அவனுக்கு தனையன்தானே! அனைவரும் அவனை கண்ணீருடன் பஸ்ஸில் அனுப்பிவிட்டார்கள். கமலினி விழிநிறைந்த கண்ணீருடன் ஒளியிழந்த முகத்துடன் அவனுக்கு விடைகொடுத்தாள். இனி அவனை எப்போது காணப்போகிறாள்?

செந்தூரன் ஆறாக கண்ணீர் பெருக அடக்க முடியாத சோகத்துடன் பஸ்ஸில் பயணமானான். எந்தக் காரணம் கொண்டும் ஜெயந்தனோ அல்லது அவனுடைய மற்ற அண்ணன்மாரோ சூழ்நிலைக்கேற்ப அவனுக்கு கடிதம் எழுதுவார்களேயன்றி அவன் கடிதம் எழுதக்கூடாது. அது அவனுக்கு சிக்கலை ஏற்படுத்தலாம். எத்தனை வருடங்கள் சென்றாலும் அவன் இந்த விடயத்தில் கவனமாக இருக்க வேண்டும் என்பதில் அண்ணன்மார் உறுதியாக இருந்தார்கள்.

அதற்குப்பின் அவன் நுவரெலியா வந்தான். அங்கே ஜெயந்தனின் நண்பன் கணேஷ் செந்தூரனை வரவேற்றான். கணேஷ் அந்தப் பகுதி பாடசாலை ஒன்றின் அதிபர். அவர் மனைவி புனிதா. தங்கை சித்ராதேவி — பத்து வயது மகன் மாதவன்.

கணேஷ் குடும்பம் அவன்மேல் அன்பைப் பொழிந்தது. கணேஷ் மிகவும் கஷ்டப்பட்டுச் செந்தூரனுக்கு ஒரு நல்ல வேலை வாங்கிக் கொடுத்தார். தங்குவதற்கு குறைந்த விலையில் ஒரு அறையையும் ஏற்பாடு செய்து கொடுத்தார். நாட்கள் வேகமாக ஓடின. யாழ்ப்பாணத்தில் யுத்தம் கடுமையாகியிருந்தது. வல்வெட்டித்துறையிலிருந்து எந்தத் தகவலும் இல்லை. தன் சகோதரர்களைப் பிரிந்த வேதனையுடன் இரண்டு ஆண்டுகளை ஓட்டினான் செந்தூரன்.

இந்த நிலையில் ஆசிரியர் தொழில் செய்துவரும் கணேஷனின் தங்கையை எட்டாவது முறையாகப் பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டிலிருந்து ஆட்கள் வருவதாக இருந்தது. அவள் அழகானவள்தான். ஆனால் வலதுகால் இளம்பிள்ளை வாதத்தால் இலேசாக ஊனமாக இருந்தமையினால் அவள் விந்திவிந்தித்தான் நடப்பாள். அவளின் ஊனத்தினால் அவள் திருமணமும் தள்ளிக் கொண்டே போனது. ஆனால், இந்த இடம் நிச்சயமாக அமைந்துவிடுமென அவர்கள் நம்பினார்கள். மாப்பிள்ளை வீட்டார் வந்தபோது ஒத்தாசைக்கு செந்தூரனும் இருந்தான். அவர்கள் வந்தார்கள் — பார்த்தார்கள். தங்களுக்குள் குசுகுசுவெனப் பேசிக் கொண்டார்கள்.

கணேஷ் தவிப்புடன் இருந்தார். மாப்பிள்ளையின் தந்தை மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தார்.

''எங்களுக்கு பெண்ணைப் பிடிச்சிருக்கு. ஆனா, பெண்ணு ஊனமா இருக்கு. பரவாயில்லை. ஒரேயொரு கண்டிஷனோட நாங்க உங்க மகளை மருமகளா ஏத்துக்குறோம். இருபது பவுண் கையில ரொக்கமா ஒரு லட்சம் அதோட பையனுக்கு ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கி குடுத்துடுங்க....''

சித்ராதேவி சட்டென தரையிலிருந்து எழுந்தாள். அவள் முகம் கோபத்தால் சிவந்திருந்தது.

''அண்ணா எனக்கு இந்தக் கல்யாணத்தில இஷ்டமில்ல. நான் சாதாரண ஊனம் என்றதால எனக்கு விலை வச்சு வியாபாரம் பேசுற இப்படியான அநாகரிகமான கல் நெஞ்சுக்காரர்களோட சம்பந்தம் நமக்கு வேணாம். தயவுசெய்து என்னை மன்னிச்சிடுங்கண்ணா. நான் இப்படியே இருந்து விடுறன்.''

சாவகமாகப் பேசிவிட்டு உள்ளே அறையை நோக்கி ஓட மாப்பிள்ளை வீட்டார் கோபத்துடன் அந்த இடத்தை விட்டுச் சென்றார்கள். கணேஷ் எதுவும் பேசமுடியாமல் இடிந்த மனதுடன் அப்படியே ஷோபாவில் அமர்ந்திருந்தார். செந்தூரன் — ஒருவித தீர்மானத்துடன் கணேஷைப் பார்த்தான்.

''ஏன் வீணா மனசைப் போட்டு குழப்பிக் கொள்ளுறியள். சித்ராவோட அழகுக்கும், பண்புக்கும் ஏற்ற சரியான மாப்பிள்ளை ஒருத்தர் இருக்கார். நீங்கள் சரியென்டா சித்ரா விரும்பினா உடனடியா பேசலாம்....''

கணேஷ் — வியப்புடன் அவனைப் பார்த்தார். ''என்ன செந்தூரன் சொல்லுறீங்க... அப்படிப்பட்ட நல்லவர் யார்...? எங்கே அவர் இருக்கார்....''

''நான் சுத்தி வளைச்சு பேச விரும்பவில்லை. அது நான்தான். உங்களுக்கு சம்மதமெண்டால் நான் சித்ராவை மணக்கத் தயார். சித்ரா உடுத்தின உடுப்போட வந்தால் போதும்.. நான் யாழ்ப்பாணத்தவன்— நீங்க மலைநாடு. ஆனால், நாங்க தமிழ் பேசிற ஒரே மனிதர். எனக்கு ஏற்றத்தாழ்வெல்லாம் கிடையாது.. சித்ரா எனக்குக் கிடைச்சா நான் அவளை கண்ணைப்போல காப்பேன்!''

கணேஷ் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக அவன் கைகளைப் பற்றிக் கொண்டார். அறையிலிருந்து வெளியே வந்த சித்ரா பூரண சம்மதத்துடன் தலை குனிந்திருந்தாள்.

*****

சட்டென பஸ் நிற்கவே செந்தூரன் கண் திறந்தான். இராணுவ வீரர்கள் சிலர் பஸ்ஸை சுற்றி வளைத்து ஓட்டுனரிடம் ஏதே விசாரித்துக் கொண்டிருந்தார்கள்.

பாரதூரமாக எதுவும் நடக்காவிட்டாலும் கூட இன்னமும் தமிழர்கள் என்றால் ஒரு கோபம், துவேஷம் இருக்கத்தான் செய்தது. தமிழனாக பிறந்த ஒரே காரணத்துக்காக தலை குனிந்திருந்த காலம் மெல்ல மறைந்து இப்போது சில வீரத் தமிழர்களால் அனைத்து தமிழர்களும் தலைநிமிர்ந்து நடக்கக் கூடிய காலம் உதயமாகிக் கொண்டிருந்ததையும் மறுக்க முடியாது.

பஸ் மறுபடியும் ஓடத் தொடங்கியது. நன்றாக விடியத் தொடங்கவும் பஸ் யாழ்ப்பாண பிரதான பஸ்தரிப்பிடத்தை அடையவும் சரியாக இருந்தது. மனைவி மகன் மூட்டை முடிச்சுகளுடன் செந்தூரன் பஸ்ஸை விட்டு இறங்கினான். ஓ! எத்தனை ஆண்டுகளுக்குப்பின் அவன் பிறந்த மண்ணில் காலடி வைக்கிறான். அவனால் அழுகையை அடக்க முடியவில்லை. அப்படியே கீழே உட்கார்ந்து மண்ணைத் தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டான்.

பின் அண்ணனைப் பார்க்க வேண்டும் என்ற வேகத்தில் அவர்கள் ஒரு வாடகைக் காரைப் பேசி வல்வெட்டித்துறையை நோக்கிப் பயணமானார்கள். அவர்கள் பயணம் செய்த பாதை சற்று கரடுமுரடாக இருந்தது.

அவர்கள் வல்வெட்டித்துறையை அடைந்தார்கள். அவனால் தன் கண்களையே நம்ப முடியவில்லை. வல்வெட்டித்துறையா அது? வரிசை வரிசையான கட்டடங்களும் செல்வச் செழிப்புமாக இருந்த வல்வெட்டித்துறை பொலிவிழந்து இடிவிழுந்த ஊராகக் காட்சியளித்தது. பல கட்டடங்கள் தரைமட்டமாகியிருந்தன. சில பாதி உடைந்தும், மீதி காடுகள் வளர்ந்தும் பாழடைந்து கிடந்தன.

செந்தூரன் தன் அண்ணன் வீட்டை நோக்கி மிக வேகமாக நடந்தான். ஜெயந்தன் வீடு முன்பக்கம் முற்றாக சேதமாகியிருந்தது. தென்னை ஓலைகளால் கூரை போடப்பட்டிருந்தது. செந்தூரன் பட படக்கும் மனதுடன் வீட்டை நெருங்கினான். வீட்டு முற்றத்தில் நின்று கொண்டிருந்தது ஜெயந்தன்தான். ஆனால், தலை நரைத்து தேகம் மெலிந்து பொலிவிழந்த முகத்துடன் இருந்த அவன் தானா தனது அண்ணன் ஜெயந்தன் என்பதை அவனால் நம்பமுடியவில்லை. ஜெயந்தன் செந்தூரனை அடையாளம் கண்டு கொண்டான். 'தம்பி' என்ர ராசா...' என சத்தமிட்டவாறு வந்து கட்டிப்பிடித்தான். இருவரும் மாறி மாறி அழுதார்கள்... ''அண்ணா... என்னண்ணா இது கோலம்... நிமிர்ந்த நெஞ்சும், எந்நேரமும் சிரிச்ச முகமுமா இருப்பியளே.. இப்போ இடிவிழுந்த முகமும், அடிபட்ட உடம்புமா உருக்குலைந்து போயிருக்கிறீங்களே என்னண்ணா நடந்தது.... எங்கே செந்தூரணி.....?''

ஜெயந்தன் — எதுவும் பேசவில்லை. அவர்களை வீட்டினுள் அழைத்துச் சென்றான். வீடு மிகவும் மோசமான நிலையிலிருந்தது.

''அண்ணா இவள் சித்ரா என் மனைவி. இவன் பழனிவேல் மகன். ராமன் தசரதன் பேச்சுக்கு மதிப்பளித்து பன்னிரண்டு வருஷம் காட்டில் இருந்தமாதிரி தமையனான உங்கட பேச்சை மதித்து பன்னிரண்டு வருஷமா நான் உங்களோட எந்தத் தொடர்பும் வைக்கேல்ல. சொல்லுங்க அண்ணா என்ன நடந்தது... எங்க அண்ணி....''

ஜெயந்தன் குமுறிக் குமுறி அழுதான்.

''தம்பி எல்லாம் முடிந்து விட்டதடா. அண்டைக்கு மட்டும் உன்னை பஸ்ஏற்றி விடாம இருந்திருந்தா உன்னையும் நான் இழந்திருப்பேனடா ராசா.....''

''அண்ணா என்ன சொல்லுறியள்....?''

''அண்டைக்கு ராத்திரி ஆமிக்காரன்கள் இந்த ஊரைச் சுத்தி வளைச்சிப் போட்டான்கள். இளம் வயசு ஆண்கள், பெண்களை எல்லாம் பிடிச்சு வேனுக்குள் போட்டாங்க, அதோட உன்னையும் விசாரிச்சினம். நாங்க தெரியாது என்று சொன்னம். எங்களைத் துன்புறுத்தினாங்க. இவள் கமலினியை விசாரிக்க வேணுமெண்டுசொல்லி கையைப் பிடிச்சு இழுத்தாங்கள். அண்ணன் திருக்கேதீஸ் கொதிச்சிப்போயிட்டான். கீழே கிடந்த மீன் வெட்டுற கத்தியை எடுத்து ஆத்திரத்தோட கமலினியின் கையைப்பிடிச்சவனின் கழுத்தில வீசினான். அவன் அப்படியே கீழே சாய்ந்துவிட்டான். அவ்வளவுதான் எங்கள் கண்முன்னாலேயே திருக்கேதீஸைச் சுட்டுப்போட்டு கமலினியை பிடிச்சு இழுத்துக் கொண்டுபோனாங்கள். என்ர மனுசி கத்திக் கொண்டே ஓடினா — அவளையும் பிடிச்சுக் கொண்டு போனாங்கள். இதையெல்லாம் பார்த்த செந்தூரணி சத்தம் போட்டு மயங்கி விழுந்துட்டாள். எங்களால எதுவும் செய்ய முடியவில்லை. நாங்கள் ராத்திரி கடலுக்குப் போய்ப் படகில ஒளிந்துவிட்டோம். காலையில வந்து பார்த்தா நிறைய வீடுகள் தரைமட்டமாகிக் கிடந்தன. ஆட்கள் நிறையப்பேர் செத்துக்கிடந்தினம். என்ர மனுஷிக்கும் கமலினிக்கும் என்ன நடந்ததென்று தெரியாம போயிட்டுது — செந்தூரணி பிரம்மை பிடிச்சுப் போயிட்டா. சுந்தரம் அவளை தன்னோட அழைச்சிட்டுப் போயிட்டார். நான் என் மனுஷியையும் கமலினியையும் எங்கெல்லாமோ தேடினேன். ஆனா எந்தத் தகவலும் இல்லை.

ஆமிக்காரன்கள் கொண்டுபோன அவர்களுக்கு என்ன ஆனதெண்டு தெரியாம பைத்தியம் மாதிரி அலைந்தேன். மூனு மாதம் போனதுக்கப்பின் பக்கத்து ஊர் பாலுங்கிணற்றில் குவியலாக பிணங்கள் கிடந்ததை கண்டு சனத்தோட நானும் ஓடிப் போய்ப் பார்த்தேன். ஐயோ... அதை எப்படியடாதம்பி சொல்லுவன். என்ர மனுசியும் கமலினியும் பிணத்தோட பிணமா கிடந்தாங்க. அந்த பாவிகள் அவங்களை சின்னா பின்னமாக்கி கொன்றுவிட்டாங்கள். அதுக்கப்புறமா நான் பித்துப் பிடிச்சவன் மாதிரி ஆயிட்டேன் தம்பி. சமாதானம் வந்து ஓரளவு நிம்மதி வந்த பின்னும் என்ன மாதிரியானவங்களுக்கு மனசில இருந்த வேதனையும் வடுவும் ஆறவும் இல்லை மறையவும் இல்லை. சொந்த மண்ணிலேயே அகதியா இருக்கிற ஒரே இனம் இந்த தமிழ் இனம் தாண்டா தம்பி....!''

ஜெயந்தன் சொல்லிவிட்டு 'ஓ'வென அழ செந்தூரன் எதுவும் பேசமுடியாமல் சிலையாக நின்றிருந்தான்.

மேலும்ஒரு வாரம் ஓடியது. செந்தூரன் இன்னும் ஒரு வாரம் மட்டும்தான் அங்கே இருக்க முடியும். அன்றிரவு அவர்கள் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு உறங்கிப் போனார்கள். ஜெயந்தனுக்கு அன்றிரவு உறக்கம் வரவில்லை. மனதில் ஏதோ சஞ்சலம் வந்து வந்து போனது. கண்களை மூடினால் அவன் மனைவி வதனி வந்து ஏதோ சொன்னாள். ஆனால், எதுவும் விளங்கவில்லை. பக்கத்து வீடுகளில் நாய்கள், பூனைகள் வினோதமாக சத்தமிட்டுக் கொண்டிருந்தன.

ஜெயந்தன் வெளியே வந்தான். தூரத்திலிருந்த கடலையே உற்றுப் பார்த்தான். கடலில் ஏதோ ஒரு மாற்றம் இருப்பதைப்போல தோன்றியது. என்றுமில்லாதவாறு அது மிக அமைதியாக இருந்தது. ஜெயந்தன் யோசனையுடன் மறுபடியும் உள்ளே வந்து படுத்தான். மெதுவாக கண்களை மூடினான். அப்போது — விடியற்காலைப் பொழுதாக இருக்கும். ஏதோ கடுமையான சத்தம் கேட்டது. அவனை யாரோ பிடித்து உலுக்குவது போல இருந்தது. அவன் எதுவும் புரியாமல் பதற்றத்துடன் வெளியே வந்தான். அவ்வளவுதான். ஐயோ என கத்தினான். பேரலைகள் அவன் தலைக்குமேலாக சென்றன. அவன் தூக்கி வீசப்பட்டான். எங்கும் மரண ஓலம். சித்ரா அந்த இருப்புத்தூணை ஒரு கையாலும் மகன் பழனிவேலை மறு கையாலும் பிடித்துக் கொண்டாள். ஆனால் அவள் தலைக்குமேல் தண்ணீர் புயல் வேகத்தில் ஓடியதால் பிடி தளர்ந்தது. செந்தூரன் — நீச்சல் தெரிந்தவன். அவன் போராடினான். அவன் மனதில் அண்ணன் ஜெயந்தன், மனைவி சித்ரா மகன் பழனிவேல் உருவங்கள் அடிக்கடி வந்து போயின. கடவுளே அவர்களுக்கு எதுவும் ஆகியிருக்கக்கூடாதென மனம் ஓலமிட்டது. அவன் கைகளில் எதுவோ தட்டுப்பட்டது. அவன் அதை கெட்டியாகப் பிடித்தக் கொண்டான். அது உடைந்து போனதொரு படகாகும்.

அவன் அப்படியே மயங்கிப் போனான். ஆனால் பிடி மட்டும் தளரவில்லை. எவ்வளவு நேரம் அப்படி இருந்தானென்று அவனுக்கே தெரியவில்லை. மயக்கம் தெளிந்து கண் விழித்தபோது அவன் பாதி உடைந்து கிடந்த ஒரு வீட்டின் கூரையில் இருந்தான். அவ்வளவு பெரிய படகு எப்படி அங்கே வந்தது. கிட்டத்தட்ட அவன் வீட்டின் கூரையளவு தண்ணீர் இருந்தது. எங்கும் மனித உடல்கள் மிதந்தன. கண்ணுக் கெட்டிய தூரம்வரை ஒரே வெள்ளக்காடு. அவன் — சித்ரா..... பழனி எனக் கத்தினான். கதறினான்.

(யாவும் கற்பனை)

# ஆண்களின் வழுக்கைக்கு பெண்கள் தான் காரணமா?



ஆண்களுக்கு வழுக்கை விழுவதற்கு பெண்கள் படுத்தும்பாடு தான் காரணம் என்று பட்டிமன்றங்களில் நகைச்சுவையாகச் சொல்லப்படுவது வழக்கம். ஆனால், உண்மையிலேயே ஆண்களின் வழுக்கைக்குப் பெண்கள் தான் காரணம் என்று ஐரோப்பிய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

ஜேர்மனியின் பான் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் வழுக்கைக்கும், பாரம்பரியத்துக்கும் இடையிலான தொடர்புபற்றி விரிவான ஆய்வு ஒன்றை நடத்தினர். அப்போது ஆண்களுக்குத் தோன்றும் குறிப்பிட்ட வகை வழுக்கைகளுக்கு குறிப்பிட்ட மரபணு மாற்றமே காரணம்என்று தெரிய வந்தது அதிலும் இந்த குறிப்பிட்ட மரபணு மாற்றம் பெண்களின் எக்ஸ் குரோசோமில் நடைபெறுகிறது எனத் தெரிய வந்துள்ளது.

இந்த நிலையில் வழுக்கைக்குக் காரணமான மரபியல் மாற்றம் பெண்களுக்குச் சொந்தமான எக்ஸ் குரோசோமில் நடைபெறுவதால், ஆண்களுக்கு உண்டாகும் வழுக்கைக்கு பெண்களே காரணமாவதாக விஞ்ஞானிகள் முடிவுக்கு வந்துள்ளனர்.

தந்தையுடன் ஒப்பிடும்போது தாய்வழி உறவில் தாத்தாமார்களுக்கு வழுக்கை இருந்தாலும் அந்தத் தாய்க்குப் பிறக்கும் குழந்தைக்கும் வழுக்கை வருவதற்கு கூடுதலான வாய்ப்பு உள்ளதாம்.

எனினும் வழுக்கையைத் தீர்மானிக்கும் பல மரபணுக்களில் சில தந்தையிடம் இருந்து வருவதால், வழுக்கைக்குப் பெண்களே முழுக்காரணம் என்றும் சொல்லிவிட முடியாது. வழுக்கை விடயத்தில் ஆண்களுக்கும் பங்கு உள்ளது. இருந்தாலும் அதிக வழுக்கைக்குக் காரணம் யார் என்று பார்க்கும்போது ஆண்களைக் காட்டிலும் தாய் மற்றும் தாய்வழி உறவுகளே முக்கிய பங்கு வகிக்கின்றன.




# இதுக்கும் கூட விவாகரத்தா?



''சின்னச்சின்ன விடயங்களில் கூட கவனமாய் இருங்கள். இல்லையென்றால் உங்கள் வாழ்க்கைத் துணைவருக்கு உங்களைப் பிடிக்காமல் போகலாம்''

இப்படி எச்சரிக்கை செய்கிறார்கள் அமெரிக்காவின் லூயிஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள்.

யாருக்குமே பிடிக்காத பழக்கங்கள் என்று சில உண்டு. இது கணவன்– மனைவி விடயத்திலும் பொருந்தும். அப்படி நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய விடயங்கள் பலவற்றை இங்கே லூயிஸ் வில்லி பல்கலைக்கழக விஞ்ஞானிகள் பட்டியலிடுகின்றனர்.

ஆமாம். நீங்களும்தான் கொஞ்சம் உலக நடப்பைப் புரிந்துகொள்ளுங்களேன் சகோதரிகளே!

* குளித்துவிட்டு வெளியே வரும்போது ஈரத் துண்டை வீட்டுக்குள் எங்கேயாவது வீசிவிடுவது இந்த அட்டவணையில் முதலிடம் பெறுகிறது. ஏன் வீட்டுக்குள் போட்டீர்கள்? பாத்ரூமிலேயே அலசிப் பிழிந்திருக்கலாமே என்று ஆரம்பிக்கும் முணுமுணுப்பு பெரிய சண்டையாக உருவாகி விவாகரத்து வரை போகக் காரணமாக இருக்கிறதாம்.

திகில் படங்களை வாழ்க்கைத் துணைக்கு குறிப்பாக பெண்களுக்குப் போட்டுக்காட்டுவதும் தம்பதியினரிடையே பிரச்சினைகளைக் கொண்டுவருமாம்.

விருந்து சாப்பிட்டு விட்டு வந்து அதைப் பற்றி மிகைப்படுத்திக் கதை அளப்பது, விடுமுறை தினங்களில் பிக்னிக் செல்லும்போது அதிக அளவில் பாக்குகளை எடுத்து வருவது, ஷாப்பிங் சென்றால் வெகு நேரம் கழித்துத் திரும்புவது, தனக்குத் தானே ஜோக் அடித்துவிட்டுச் சிரிப்பது, வாழ்க்கைத் துணைவரின் உடைகளைப் பற்றிப் புகார் செய்வது, கழிவறைப் பேப்பர்களை சரிவரப் போடாமல் இருப்பது போன்றவை மேற்கத்திய தம்பதிகளுக்குப் பிடிப்பதில்லையாம்.

இது தவிர மேற்கண்ட குறைபாடுகள் இருப்பதை மற்றவர்களிடம் கூறுவதையும் வாழ்க்கைத் துணைவர்கள் விரும்புவதில்லை. இதற்காக சண்டைபோட்டுக்கொண்டு விவாகரத்து வரை கூட இவர்கள் போய்விடுகிறார்களாம்.

அதுசரி. எமது நாட்டில் இந்த மாதிரி காரணங்களுக்காக கணவன்– மனைவி சண்டை என்றால் இங்கே தினம் தினம் விவாகரத்துத்தான் நடக்க வேண்டும். இல்லையா சகோதரிகளே...?

# திருமணத்துக்குப் பின்னும் காதலிக்கலாம்...!



திருமணமான சில ஆண்டுகளில் வீடு, குழந்தை, வேலை என பொறுப்புகளும் அதற்கேற்ப பணத் தேவையும் அதிகரிக்கிறது. கூடுதல் வருமானத்துக்காக மேலதிக வேலை, பகுதிநேர வேலை போன்றவற்றையும் செய்ய வேண்டிய தேவை ஏற்படுகிறது. சொந்த வீடு, வாகனம் போன்றவை பொருளாதார நெருக்கடிகளை உண்டாக்குகின்றன.

ஆக குடும்பத்துக்காக கணவன்– மனைவி செலவிட வேண்டிய நேரத்தை இந்த விடயங்களே ஆக்கிரமித்துக் கொள்கின்றன. தாம்பத்திய உறவு கூட படிப்படியாகக் குறைந்துவிடுகிறது.

மேலும் குழந்தைகளின் கல்வி, பெண்களின் கணிசமான நேரத்தை ஆக்கிரமிக்கிறது. காலையில் குழந்தைகளுக்குச் சாப்பாடு செய்வது , குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புவது என பெண்களின் வேலைப் பழு அதிகரிக்கிறது. இதனால் கணவனோடு அவர்கள் அன்புக்காகச் செலவிடும் நேரம் மிகவும் குறைவாகவே இருக்கிறது.

எனவே தினசரி வாழ்க்கையிலிருந்து சற்று வித்தியாசமாக வாழ்க்கையை மாற்றி அமைக்க பெண்கள் முயல வேண்டும்.

எம்மில் பலர் திருமணமாகி குழந்தை பெற்றுக்கொண்டாலே வாழ்க்கை முடிந்து விட்டதாக நினைத்துக்கொள்கிறார்கள். இது தவறு. வாழ்க்கையை நாம் அந்தந்த காலகட்டங்களுக்கு ஏற்ப ரசிக்கும் மனோபாவத்தை வளர்த்துக்கொள்ள வெண்டும்.

கணவன்– மனைவி தங்களுக்கென்று குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குவது அவசியம்.

அலுவலகத்தில் கணவன் 8 மணி நேரத்துக்கு மேல் தங்க நேரிட்டால், மனைவியை தொலைபேசியில் அழைத்து தனது தாமதத்துக்கான காரணத்தைத் தெரியப்படுத்தலாம்.

விடுமுறை மற்றும் வார இறுதி நாட்களில் கணவன்–மனைவி இருவரும் உல்லாசப் பயணம் சென்று வரலாம்.

ஒவ்வொரு திருமண நாளின்போதும் அன்புப் பரிசு அளிப்பது திருமண வாழ்க்கையில் நீங்கள் எந்த அளவு மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் என்பதைக் காட்டும்.

வாரம் ஓரிரு நாட்கள் தொலைக்காட்சித் தொடர், செல்போன் தொடர்புகள் போன்றவற்றை நிறுத்திவிட்டு கிடைக்கும் நேரத்தை வாழ்க்கைத் துணையுடன் கூடுதலாகச் செலவழித்து மகிழலாம்.

திருமணத்துக்குப்பிறகு பரஸ்பரம் அன்பை அதிகரிக்கச் செய்யும் முயற்சிகளில் கணவன்– மனைவி இருவரும் உளப்பூர்வமாக ஈடுபடுவது நல்லது. இது தாம்பத்திய வாழ்க்கையில் ஏற்படும் சிறு சிறு பூசல்கள் பெரிதாகி மண முறிவு வரை சென்றுவிடும் அபாயத்தைத் தவிர்ப்பதற்கு அவசியமாகும்.

எனவே ஒருவரில் ஒருவர் அன்பு செலுத்துங்கள். அதுவே வாழ்வின் ஆதாரம்.




## காஷ்மீர் சிக்கின் மசாலா


***தேவைப்படும் பொருட்கள்***

கோழி இறைச்சி – 1 கிலோ.
பெ.வெங்காயம்–3
உள்ளி–1
மிளகு தூள்–3 தேக்கரண்டி.
மஞ்சள் தூள்– 1 தேக்கரண்டி.
தயிர்–1 கப்
தேங்காய் துருவல்– 1 கப்
மல்லித் தூள்–தேவையான அளவு.
சீனி– 1 தேக்கரண்டி.
முந்திரிப்பருப்பு–1கப்.
உப்பு– தேவையான அளவு.
தக்காளி– 3
இஞ்சி– 1 துண்டு.
ஏலக்காய்–10.
கராம்பு–5
வெண்ணெய்–1 கப்.
கடுகு– தேவையான அளவு.
காய்ந்த மிளகாய்–2

***செய்முறை***

சமையல் பாத்திரத்தில் வெண்ணெயைப் போடுங்கள். உருகும்போது சீனியை அதில் சேருங்கள். எல்லாம் சேர்ந்து உருகிவரும் போது கராம்பு, ஏலக்காய் சேருங்கள். பெரிய வெங்காயத்தையும் நறுக்கி அதில் போட்டுத் தாளியுங்கள். அதில் இஞ்சியையும், உள்ளியையும் அரைத்து சேர்த்துக் கிளறுங்கள்.


மஞ்சள் தூள், மிளகாய்த்தூள், மல்லித் தூள் , சிறிதளவு சீரகம் ஆகியவைகளைச் சேர்த்து அரைத்து பின்பு எல்லாவற்றையும் சேர்த்துத் தாளியுங்கள். தக்காளியையும் நறுக்கி அதில் சேர்த்துவிட வேண்டும். தண்ணீர் வற்றிவரும்போது தேங்காயையும், முந்திரிப் பருப்பையும் சேர்த்து அரைத்து அதில் சேருங்கள். அத்தோடு இறைச்சித் துண்டுகளைச் சேர்த்து தேவைக்கு ஏற்ப தண்ணீர் விட்டு தயிரும் சேர்த்து வேக விடுங்கள். வெந்ததும் கடுகு, காய்ந்த மிளகாயை தாளித்து அதில் சேருங்கள்.




காலத்தின் மதிப்புத் தெரிந்தவர்களுக்குத்தான் வாழ்க்கையின் மதிப்புத் தெரியும்.




பாலைவனக் கப்பல் என வர்ணிக்கப்படும் ஒட்டகத்தை அருகில் இருக்கும் கட்டங்களில் அப்படியே வரைந்து பாருங்கள்





மேலே காணப்படும் இரண்டு படங்களுக்கும் இடையே உள்ள 7 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்

# பிச்சைக்காரனின் வருத்தம்

மரகதபுரி மன்னன் தனது குதிரை ரதத்தில் நகரை வலம் வந்து கொண்டிருந்தான். அப்போது, ஒரு பிச்சைக்காரனின் குடிசையைக் கடந்து மன்னரின் ரதம் சென்றது. அதைக் கண்டதும் பிச்சைக்காரனுக்கு மிகவும் சந்தோஷம். மன்னரைப் பார்த்ததற்காக அல்ல. மன்னர் விலை உயர்ந்த ஆபரணங்களை அணிந்திருப்பதையும் தன்னுடன் ஏராளமான பணத்தைக் கொண்டு செல்வதையும் கண்டுதான் அந்த ஆச்சரியம்.

மன்னருடன் வந்தவர்கள் அவனது பரிதாபகரமான தோற்றத்தைப் பார்த்து, ஏழைகளுக்காக வழங்க கொண்டு வந்திருந்த அரிசியில் கொஞ்சத்தை எடுத்து பிச்சைக்காரனின் திருவோட்டில் போட்டார்கள். பிச்சைக்காரன் திருப்தியடையவில்லை.

அவர்களை விலக்கிவிட்டு மன்னரை நோக்கி ஓடினான். பிறகு மன்னரைப் புகழ்ந்து பாடினான். மன்னர் தேரை நிறுத்தினார்.

மன்னர் பிச்சைக்காரனைப் பார்த்து, ''யார் நீ'' என்றார்.

உடனே பிச்சைக்காரன் புலம்ப ஆரம்பித்தான். ''மன்னா! உங்களது நாட்டிலேயே நான்தான் துரதிஷ்டசாலி. வறுமை எப்போதும் என் வீட்டுவாசலில் நின்று கொண்டிருக்கிறது. நேற்று மாலையிலிருந்து நான் சாப்பிடவில்லை'' என்று மன்னரிடம் புலம்பினான்.

மன்னர் கோபப்பட்டார். ''என்னிடம் கேட்பதற்கு உனக்கு வேறு எதுவுமே இல்லையா?'' என்றவர் அவனிடம் கைகளை நீட்டி, ''வழக்கமாக எல்லோரும் உனக்குத்தான் பிச்சை போடுவார்கள்.

இப்போது நீ எனக்குப்



பிச்சையிடு'' என்றார்.

அதைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த பிச்சைக்காரன், விரக்தியில் ஐந்தே ஐந்து அரிசியை மட்டும் எடுத்து மன்னரின் கைகளில் போட்டான்.


அதன் பிறகு மன்னர் அங்கிருந்து போய்விட்டார். அதைப் பார்த்ததும் பிச்சைக்காரனுக்கு மன்னர் மீது இருந்த வெறுப்பு இன்னும் அதிகமாயிற்று. மன்னரை சபித்துக் கொண்டே பிச்சை எடுப்பதற்குக் கிளம்பினான்.

நகரின் எல்லாத் தெருக்களிலும் பிச்சை எடுத்துவிட்டு மாலையில் வீடு திரும்பினான். வீட்டின் வாசலில் ஒரு பெரிய அரிசி மூட்டை கிடந்தது.

அதைப் பார்த்து பிச்சைக்காரன் 'யாரோ ஒரு புண்ணியவான், நான் இல்லாத நேரத்தில் எனக்காக ஒரு அரிசி மூட்டையைப் போட்டுவிட்டு போயிருக்கிறான்' என்று மனதுக்குள் புகழ்ந்து கொண்டே, ஒரு கைப்பிடி அரிசியை அந்த மூட்டையிலிருந்து எடுத்தான். என்ன ஆச்சரியம்! அதில் ஒரு தங்கக்கட்டி கிடந்தது. அப்போதுதான் காலையில் தான் சந்தித்த மன்னர் இந்த அரிசி மூட்டையையும் தங்கத்தையும் அனுப்பியிக்கிறார் என்பதைத் தெரிந்து கொண்டான். உடனே அந்த அரிசி மூட்டை முழுவதையும் பிரித்துப் பார்த்தான். அதனுள் மேலும் நான்கு தங்கக் கட்டிகள் கிடந்தன.

அப்போதுதான் தான் மன்னருக்குக் கொடுத்த 5 தானியத்திற்கும் ஈடாக 5 தங்கக் கட்டிகளை மன்னர் அரிசி மூட்டைக்குள் வைத்திருப்பது பிச்சைக் காரனுக்குப் புரிந்தது.

''இந்த மன்னரைப் புரிந்து கொள்ள முடியவில்லையே. மன்னர் இவ்வளவு பரிவுகாட்டுவார் என்று தெரிந்திருந்தால் அவருக்கு எனது திருவோட்டில் இருந்த அத்தனை அரிசியையும் கொடுத்து ஒரு பெரிய பணக்காரனாக ஆகியிருப்பேனே?'' என்று வருத்தம் கலந்து குரலில் தனக்குத்தானே முணகிக்கொண்டான்.



பறக்கிற எல்லாத்தையும் பிடிக்க வேண்டாம் என்று பல தடவை அவனுக்கு புத்திமதி சொல்லி இருக்கிறேன்.

7 வித்தியாசங்கள்
1. கோலிங் பெல்
2. மின்விசிறி
3. பேனா
4. கோட் பட்டன்கள்
5. தொப்பி
6. டிராயர் சாவி
7. குப்பைக் கூடை

## சிறார்களின் கைவண்ணம்



பிளசிங் சாரங்கபாணி, தரம் 4C
பெல்வெயர் சர்வதேச பாடசாலை
கொழும்பு.



சுகந்தினி, தரம் 5
இங்ஸ்டன் சர்வதேச பாடசாலை
கல்கிஸை



இவேன்சலின் சாரங்கபாணி, தரம் 1 A
பெல்வெயர் சர்வதேச பாடசாலை
கொழும்பு.




பிரியதர்ஷன், தரம் 4
...ஸ்டன் சர்வதேச பாடசாலை
கொழும்பு 6.

# சுவாசிலாந்து மன்னரின் பதின்மூன்றாவது திருமணம்



இன்றைய உலகில் தினம் தினம், ஏதாவது ஒரு நாட்டில் நாம் வியக்கக்கூடிய அல்லது துயரப்படக்கூடிய சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன.




கடந்த வருடம் 26ஆம் திகதி டிசம்பர் மாதத்தில் இருந்து இன்று வரை பூகம்பம், நில நடுக்கம், குண்டு வெடிப்புகள், படகு, விமான, கார் விபத்துகள், கொடிய தொற்று நோய்கள், வெள்ளம், காட்டுத் தீ போன்ற விதம் விதமான ஏதாவது ஒரு செய்தியையாவது தினம் தினம் நாம் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றின் மூலமாக அறிந்துகொண்டே இருக்கிறோம்.

கடந்த வாரம் சுவாசிலாந்து நாட்டின் தலைநகராகிய பாபேனில் அந்த நாட்டின் மன்னர் மூன்றாம் மஸ்வவிதி திருமணம் செய்துகொண்டார். அவருக்கு வயது 36. இதில் வியக்க என்ன உள்ளது? திருமணம் செய்வது என்ன பெரிய வியக்கும் செய்தியா? இப்படி வாசகர்களாகிய நீங்கள் கேட்பது சரியான— நியாயமான கேள்விதான்.

36 வயதான மன்னர் மஸ்வாதி 21 வயதான நொலிக்கா நென்ரீஹா என்ற இளம்பெண்ணைத்தான் திருமணம் செய்துகொண்டார். இதில் வியக்க வைத்த விடயம் என்னவெனில் இது அவரது பதினோராவது திருமணம். அதாவது மன்னர் நென்ரீஹாவை திருமணம் செய்தது அவரது பதினோராவது மனைவியாக!

நென்ரீஹா மன்னர் பரம்பரையைச் சேர்ந்தவர் அல்ல . பெரும் கோடீஸ்வரப் பெண்ணோ என்றால் அதுவும் இல்லை. பின்னர் எப்படி மன்னரைத் திருமணம் செய்ய முடிந்தது?

சுவாசிலாந்து நாட்டின் பல்கலைக்கழகமொன்றின் பொருளாதாரப் பிரிவின் வணிக விரிவுரையாளராக பணி புரிபவரின் மகள் தான் நென்ரீஹா. சுவாசிலாந்து நாட்டின் மன்னர் தனது துணைவிகளைத் தேர்ந்து எடுப்பது என்பதே ஒரு சுவாரஸ்யமான விடயம் தான். இதற்கென்றே வருடாந்தம் பாரம்பரிய விழா ஒன்று சுவாசிலாந்து நாட்டில் நடைபெறுவது வழக்கம்.

இந்த விழாவின் பிரதான நாயகனாக விளங்கும் மன்னர், விழாவில் கலந்துகொள்ள வரும் பல்லாயிரக் கணக்கான மக்கள் கூட்டத்திலேயே தன்னைக் கவரும் இளம் கன்னிகளை இனம் கண்டு தேர்வு செய்துகொள்வார். இது அந்த நாட்டில் பரம்பரையாக வழங்கி வரும் நடைமுறை ஆகும்.

இப்படி மன்னர் தேர்வு செய்யும் இளம் பெண்களே இவரது வருங்கால மனைவிகள். தெரிவாகும் போது இப் பெண்களின் வயது 16, 17ஆக இருக்கும். திருமண



வேளைவரும்போது அதாவது தெரிவு செய்து 4 அல்லது 5 வருடங்களின் பின்பே திருமணம் நடைபெறும். திருமணத்துக்கு முன்பாகவே மன்னர் இப் பெண்களை அந்தப்புரம் அழைத்துவிடுவார்.

கடந்த வாரம் இராஜமாதாவின் வாசஸ்தலத்தில் இரகசியமாக நடைபெற்ற திருமணத்தில் மன்னரால் விசேஷமாக அழைக்கப்பட்டவர்கள் மட்டுமே கலந்துகொண்டார்கள். திருமணத்துக்கு முன்பே தனது முதலாவது மகப்பேற்றுக்காக காத்துக்கொண்டிருக்கும் நென்ரீஹாவை 2002ஆம் ஆண்டு நடைபெற்ற வழமையான பாரம்பரிய தேர்வு விழாவில் மணப்பெண்ணாக மன்னர் தெரிவு செய்துகொண்டார். அவ்வருடத்திலிருந்து அவரது கல்விக்கு முழுக்குப் போடப்பட்டு விட்டது. ஆனால் அவர் அரச கண்காணிப்பில் அரச பணிகளிலே இருந்தார்.



தெரிவாகும் பெண்கள் சிறு வயதுப் பெண்கள் ஆனதால் வாழ்க்கையை முழுமையாகத் தெரியாத பருவம். அதனால் திருமண பந்தம் மற்றும் அன்றாட வாழ்வியல் பற்றியும் பயிற்சி பெறுவார்கள்.

மன்னர் முன்னர் மணம் முடித்திருந்த 10 மனைவியருக்கும் மொத்தமாக 23 குழந்தைகள் உள்ளனர். நென்ரீஹாவுக்குப் பிறக்கவுள்ள குழந்தையுடன் மன்னரது வாரிசுகள் இரண்டு டசின் என்ற கணக்குக்கு வந்துவிடும். இதேசமயம் மன்னர் ஏற்கனவே இன்னும் இரண்டு பெண்களை மனைவியராகத் தேர்ந்து எடுத்து வைத்துள்ளார் எனவும் ஒரு செய்தி உலாவுகிறது.

அவர்களது வயது மன்னரது வழமையான தெரிவான 17 தான். கல்வியை மேலும் தொடராது அரச அதிகாரிகளின் பணிப்பில் அரச பணியில் சேர்ந்து இவர்கள் வேலை செய்து வருகிறார்கள்.

இன்றைய இந்த நவீன யுகத்தில் இப்படி ஒரு மன்னர் ஆட்சியா? என வியக்காமலும் இருக்க முடியாது. வியப்படைந்தாலும் எல்லோருக்கும் ஒரு பாரிய கேள்வி எழுகிறது. இந்த சுவாசிலாந்து நாடு எங்கே உள்ளது என்பதே.

தொலைக்காட்சிச் செய்திகளுக்குக் காது கொடுத்தோர் அனைவரது மனத்தையும் நெருடும் விடயம் சுவாசிலாந்து எங்கே உள்ளது என்பதே. சிலர் சுவிட்சிலாந்து என நினைத்ததும் அங்கு மன்னராட்சியா? கேள்விப்படதில்லையே என்று தலையைப் போட்டு உடைத்ததையும் காண முடிந்தது. இரண்டு நாட்டினது பெயர்களும் எழுந்தமானமாகப் பார்க்கும்போதும் உச்சரிக்கும்போதும் ஒன்று போலவே தோற்றமளிக்கின்றன.

சுவாசிலாந்து ஒரு தென் கிழக்கு ஆபிரிக்க நாடு. நாற்புறமும் நிலப்பரப்பால் சூழப்பட்ட இந்நாட்டின் கிழக்குப்புறமாக மொசாம்பிக்கும் இதன் மற்றைய திசைகளில் தென்னாபிரிக்காவும் எல்லைகளாக அமைந்துள்ளன. 1894 ஆண்டு முதல் 1899 ஆம் ஆண்டுவரை தென்னாபிரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் இந்த நாடு இருந்தது. இதன் பின்பு பிரிட்டனின் நேரடி ஆட்சியில் இருந்தது. அனைத்து அதிகாரமும் மன்னனின் கையில்தான். அரசியல் கட்சிகள் எதுவுமேயில்லை.

-பபி ஜது-

சுவாசிலாந்து நாட்டில் 2000ஆம் ஆண்டு எடுத்த தரவின்படி மக்களது சராசரி வயது 44.4, குழந்தை இறப்பு விகிதம் ஆயிரத்துக்கு 101. மொத்த உள்நாட்டு உற்பத்தி 1.5 பில்லியன் டாலர். முக்கிய உற்பத்தி விவசாயம்தான். அதிலும் கரும்பு, பருத்தி, புகையிலை, சிட்ரஸ் பழ வகைகள் முக்கியமானவை. அரிசியும் பிரதான உற்பத்திப் பொருளாகும்.

# சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.30 | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | எம்.டி.வி நகழ்ச்சி | சங்கீதமேடை | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | மேஸ்க் கார்டுன் |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நிகழ்ச்சி |
| 9.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | ஹோலிவூட் மூவி | அரட்டை அரங்கம் |
| 9.30 | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | 9.55 இயற்கையுடன்ஒருநிமிடம் கொமடி டைம் | குட்டி சுட்டி | சமையல் |
| 10.00 | உங்கள் சாய்ஸ் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | பாட்டுக்கு பாட்டு | நம்மநேரம் | கொண்டாட்டம் | களம் | சப்த ஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கீதங்கள் | இசைத் தென்றல் | திரை விமர்சனம் | டொப் 10 மூவீஸ் |
| 11.00 | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | இப்படிக்கு நீங்கள் | இயக்குனர் பார்வை |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | திரை வானம் | சமையல் | மங்கையர் தெரிவு | மங்கை | றிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | செய்திகள்(எம்.ரீ.வி) | றிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.00 | (றொமான்ஸ்) | (அக்சன்) | (கொமடி) | (சித்திரம்) | (கிளசிக்) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | கில்லி | விக்கிரமாதித்தன் | சுப்பர் 10 |
| 4.30 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | மைடியர் பூதம் | மைடியர் பூதம் | மலரும் மொட்டும் | விக்கிரமாதித்தன் | நினைவுகள் |
| 5.00 | கிய பியர்ஸ் | கி—மான் | கிட்ஸ் சூன் | தமிழ் கார்ட்டூன் | என்றும் கலாட்டா | நகைச் சுவை விருந்து | என்றும் கலாட்டா |
| 5.30 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் சமையல் | சுப்பர் சீன்ஸ் | நினைவுகள் | ருத்ர வீணை | சுப்பர் சீன்ஸ் |
| 6.00 | இசைத்தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இளந்தளிர் | சமய நிகழ்ச்சி | புத்தம் புதுசு | மின்னல் |
| 6.30 | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் 6.58 இயற்கையுடன்ஒருநிமிடம் கோலங்கள் | 6.55 முதன்மைச் செய்திகள் திமி தக்க தா | 6.55 முதன்மைச் செய்திகள் மின்னல் |
| 7.00 | மனைவி | மனைவி | மனைவி | மனைவி | மனைவி | ஊரும் உலகும் | வேலன் |
| 7.30 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மியூசிக்கல் | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | றாஜ றாஜேஸ்வரி | இளைய கானம் |

### திருகோணமலையில்

# சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க தயாராகிவரும் பௌத்த பிக்குகள்

திருகோணமலையில் பஸ் தரிப்பு நிலையத்தில் உள்ள முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் மே 15ஆம் திகதி அதிகாலை வைக்கப்பட்ட புத்தர் சிலை பல்வேறு முரண்பாடுகளையும், பிணக்குகளையும், மோதல்களையும் ஏற்படுத்திவருகின்றது. இதனால் திருமலையில் நாளுக்கு நாள் சர்ச்சைகள் வலுப்பெற்று வருகின்றன.

இப்புத்தர் சிலை நிர்மாணிப்பால் ஏற்பட்ட அனர்த்தங்களை அடுத்து மேலதிக இராணுவம், பொலிஸ் குவிப்பு இடம்பெற்றது. அவர்களை வாபஸ் பெற வேண்டும் என்று முதலாம் திகதி திருகோணமலை ஆளுநர் விடுதியில் இடம்பெற்ற உயர்மட்ட மாநாட்டில் கோரப்பட்டது. உறுதி அளித்தபடி 2ஆம் திகதி மாலை வரை வாபஸ் பெறப்படாததால் அதைக் கண்டித்து அடையாள கதவடைப்பு இடம்பெற்றது.

கதவடைப்புக்கான துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்போர் கைது செய்யப்படுவர் என்ற தொனியில் பொலிஸார் செயற்பட்டனர். ஏற்கனவே துண்டுப்பிரசுர விநியோகத்தின்போது இருவர் கைதாகினர்.

இப்போது இராணுவம் வாபஸ் பெறப்பட வேண்டும் என்பதற்குப் பதிலாக இராணுவக் குவிப்பு இடம்பெறுவதையே காணமுடிகிறது.

புத்தர் சிலை அகற்றப்படுவதற்கு 15ஆம் திகதி வரை தமிழர் தரப்பு காலக்கெடு கொடுத்துள்ள நிலையில் புத்தர் சிலையை அகற்றினால் சாகும் வரை உண்ணாவிரதம் இருப்பதாக பிக்குகள் அறிவித்துள்ளனர்.

முதலாம் திகதி நடைபெற்ற இம்மாநாட்டில் மகாவலி அபிவிருத்தி ஆற்றுப் படுகைகள் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, கப்பல் துறை பிரதி அமைச்சர் டிலான் பெரேரா, ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ, ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ், மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், க. துரைரட்ணசிங்கம், பிரதேச செயலர் த.அருமைநாயகம், நகரசபைச் செயலர் விபுலானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருமலை புத்தர் சிலை விவகாரத்துக்கு தீர்வு காண்பதற்காக அரசாங்கம் எடுத்துள்ள முயற்சிகள் குறித்து இம்மாநாட்டில் அரச தரப்பு பிரதிநிதிகள் விளக்கிக் கூறினர். தீர்வு காண்பதற்கு மேலும் கால அவகாசம் கோரியுள்ளனர்.

கா.பொ.தா(உ/த) பரீட்சையைக் கருத்தில் கொண்டு 15ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இம் மாதம் மூன்றாம் திகதி அனுஷ்டிக்கப்பட்ட பூரண கதவடைப்பு வடக்கு கிழக்கு தழுவியதாக இருந்தது. திருகோணமலையில் துப்பாக்கிச் சூடு, குண்டு வீச்சு, அரச மரம் எரிப்பு போன்ற அசம்பாவிதங்கள் இடம் பெற்றுள்ளன.



திருகோணமலை புத்தர்சிலை விவகாரத்துக்கு நிரந்தரத் தீர்வு காணவும், நடைமுறையை அவதானிக்கவும், தமிழ்தேசிய கூட்டமைப்பு எம்.பி.களில் 16க்கும் மேற்பட்டவர்கள் திருகோணமலையில் சங்கமாயினர்.

தமிழ் மக்கள் பேரவை, மீனவர் சங்கம், வர்த்தக சங்கம் என்பவற்றின் பிரதிநிதிகளும் அவர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டனர். 15ஆம் திகதிக்குப்பின்னர் பரீட்சைக்கு குந்தகம் ஏற்படாத வகையில் அகிம்சை வழிப் போராட்டங்கள் இடம் பெறும் என்றும், பின்னர் வடக்கு கிழக்குத் தழுவிய முழுமையான போராட்டம் இடம் பெறும் என்றும் தமிழர் தரப்பு சூளுரைத்துள்ளது.

அரச தரப்பு, விரைவில் புத்தர் சிலையை அகற்றுவோம் என உத்தரவாதம் அளித்திருக்கும் அதே வேளை புத்தர்சிலை உள்ள இடத்தில் புதிய கட்டடம் அமைக்க இடைக்காலத் தடைவிதித்துள்ளது மாவட்ட நீதிமன்றம்.

சட்ட மா அதிபர் சார்பில் 30 ஆம் திகதி தாக்கல் செய்த வழக்கின் பிரகாரமே மாவட்ட நீதிபதி ஆர்.தியாகேந்திரன் கட்டடங்களை அமைக்கக் கூடாது என்றும், அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது என்றும் தடை உத்தரவு விதித்துள்ளார்.

நகராட்சி மன்றத்துக்கு உரித்தான இடத்தில் சட்ட அனுமதி பெறாமல் புத்தர்சிலை அமைக்கப்பட்டுள்ளது என நீதிமன்றம் உறுதிப்படுத்த வேண்டும் என்றும், நீதின்றம் உறுதிப்படுத்தும் பட்சத்தில் இந்த விவகாரத்தில் இறுதித் தீர்வைக் காணமுடியும் என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதன் பிறகே தடை உத்தரவு விதிக்கப்பட்டது.

உத்தரவு விதித்து என்ன பயன்? கடந்த மாதம் 18ஆம், 25ஆம் திகதிகளில் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இது நீதிமன்றை அவமதிக்கும் செயல் என்றே தமிழர் தரப்பு கருதுகின்றது. நியாயத்தின் அடிப்படையில் மாவட்ட நீதிமன்றமும் புத்தர் சிலை அகற்றப்படுவதற்கான உத்தரவு வழங்கும் என்றே எதிர்பாக்கப்படுகின்றது.

அமைதியின் சொருபமான புத்தர் ஆக்கிரமிப்பின் அடையாளச் சின்னமாகி விட்டார். முதலில் புத்தர் சிலை பின்பு தேரர், அதனைத் தொடர்ந்து சிங்களக் குடும்பங்கள், இவர்களைக் காப்பாற்ற இராணுவ முகாம். இப்படித்தான் தமிழர் தாயகம் ஆக்கிரமிக்கப்பட்டது. இன்றைய சர்ச்சைகளும் இதனால் தான் எழுந்தன.

சமூகச்சட்டம், மனிதாபிமானம், நீதிமன்ற உத்தரவு என்றெல்லாம் புத்தர் சிலையை அகற்றுவதற்கு வழிவகுத்துவரும் வேளையில், புத்தர்சிலையை அகற்றினால் சாகும் வரை உண்ணாவிரதம் என்று பிக்குகள் எச்சரிக்கின்றனர்.

திருகோணமலையில் உள்ள சர்ச்சைக்குரிய புத்தர் சிலையை அகற்றினாலோ கடத்த முற்பட்டாலோ அரசு தலையிட்டு தடுப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தவறினால் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாங்கள் சாகும்வரை உண்ணாவிரதம் இருப்போம் என திருமலை சீனன்குடா சிறீ போதி ராமாராதிபதி தெஹியோவிட்ட பியதிஸ்ஸ தேரர் கொழும்பில் தெரிவித்திருக்கிறார். மேலும் சில தேரர்கள் தீக்குளிப்பதாக எச்சரித்துள்ளனர்.

எனவே இவைகள் சர்ச்சைக்கு தீர்வு தருவதாக இல்லை. மேலும் சர்ச்சைகளை வலுப்பெறச் செய்பவைகளாகவே உள்ளன.

-எஸ்.எஸ்.ஆர்-

இது ஒரு புறமிருக்க, இனி எந்தவிதமான சமரசப் பேச்சுக்கும் இடமில்லை என தமிழர்தரப்பு திட்டவட்டமாக அறிவித்துள்ளது. 15ஆம் திகதிக்குப் பிறகு அஹிம்சை வழிப் போராட்டங்கள் வெடிக்கும் வாய்ப்பு உள்ளது. இது சுய அரசியல் லாபம் தேட முற்படுவோருக்கு வாய்ப்பளிக்காது. எப்படியும் திருகோணமலையில் திடீரென முளைத்த புத்தர்சிலை மேலும்மேலும் சர்ச்சைகள் கிளம்புவதற்கு காரணமாகவே உள்ளது. நாளுக்கு நாள் அசம்பாவிதங்களும் இடம் பெற்ற வண்ணம் உள்ளன.

# புகை!

ஒருகாலத்தில் புகைப் பழக்கமும் மதுப்பழக்கமும் பெரிய சமூகக் குற்றங்களாகப் பார்க்கப்பட்டன. இன்று அதெல்லாம் 'பர்சனல் மேட்டர்' பட்டியலில் சேர்ந்து விட்டது. அன்றிருந்த சமூக வாழ்க்கையின் இறுக்கம் படிப்படியாகத் தளர்ந்து தனிநபர்மயமாகி வருவதன் விளைவு இது.

சிறுவர்கள், இளைஞர்கள், பெரியவர்கள் என்று வயது வித்தியாசமின்றி நாள் தோறும் புகைப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

உலகெங்கிலும் சுமார் 130 கோடிப்பேர் புகைக்கிறார்கள். புகைப் பழக்கத்துக்கு அடிமையானதால் மட்டும் அன்றாடம் சுமார் 10,000 பேர் உயிரிழக்கிறார்கள் என்ற நெஞ்சைச் சுடும் புள்ளிவிவரத்தை வெளியிடுகிறது உலக சுகாதார அமைப்பு.

ஆண்கள்தான் அதிகம் புகைப் பழக்கத்துக்கு அடிமையாகியிருக்கிறார்கள் என்பதுதான் பொதுவாக நிலவும் கருத்து. ஆனால் சமீப காலங்களில் பெண்களுக்கும் புகைப்பதில் நாட்டம் அதிகமாயிருக்கிறது. உலக அளவில் புகைப்பிடிப்பவர்களில் பெண்களின் சதவிகிதம் கடந்த சில ஆண்டுகளில் அதிகரித்திருக்கிறது. குறிப்பாக வளர்ச்சி பெற்ற மேலை நாடுகளில் பெண்களிடையே புகைப் பழக்கம் வேகமாகப் பரவி வருகிறது. என்றாலும் ஒட்டுமொத்தமாக வளரும் நாடுகளிலேயே புகைப்பழக்கத்துக்கு அடிமையானவர்கள் அதிகம் (84 சதவிகிதம்) என்கிறது உலக சுகாதார அமைப்பு. வளரும் நாடுகளில் மக்கள் தொகைப் பெருக்கம் அதிகம் இருப்பதும் இதற்கு ஒரு காரணம்.

புகைப் பழக்கம் உள்ளவர்கள் படிப்பதற்குச் செலவிடும் நேரத்தைவிட மூன்று மடங்கு அதிகமாகப் புகைப்பதற்குச் செலவிடுகிறார்களாம். தங்கள் ஆரோக்கியத்தைப் பேணுவதற்காகச் செலவிடும் நேரத்தைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமாகப் புகைப்பதில் வீணாக்குகிறார்களாம்.

ஆண்டுதோறும் புகைப் பழக்கத்தாலும் அது சார்ந்த நோய்களாலும் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை இப்போதுள்ள அதே வேகத்தில் தொடரும் பட்சத்தில் இன்னும் பதினைந்து ஆண்டுகளில் எய்ட்ஸ் போன்ற உயிர்கொல்லி நோய்களைவிடப் புகைப் பழக்கத்தால் உயிரிழப்பவர்கள் அதிகமாக இருப்பார்கள் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கிறது.

புற்றுநோய், மாரடைப்பு, பக்கவாதம் போன்ற நோய்கள் புகைப்பிடிப்ப வர்களுக்குத்தான் வரும் என்றில்லை.

அதாவது உங்கள் நண்பர் புகைபிடிக்க, நீங்கள் பக்கத்திலிருந்தாலே போதும், உங்கள் ஆரோக்கியமும் பாதிக்கப்பட்டு, சில சமயங்களில் அது மரணம் வரைகூடச் செல்லாம் என்கிறது அந்த ஆய்வு.



2020ஆம் ஆண்டு அளவில் இப்போதுள்ளதைவிட 33 சதவிகிதம் பேர் அதிகமாகப் புகைப் பழக்கத்துக்கு அடிமையாகியிருப்பார்கள் என்று கணிக்கப்பட்டுள்ளது.

பொது இடங்களில் புகைபிடிப்பதற்குத் தடை, தொலைக்காட்சிகளில் சிகரெட் விளம்பரங்களுக்குத் தடை, புகைப் பழக்கத்துக்கு எதிரான தன்னார்வ அமைப்புக்களின் இடைவிடாத பிரசாரம். இத்தனையையும் கடந்து புகைப்பிடிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது ஏன்?

புகையிலை சார்ந்த வர்த்தகம் ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் தவிர்க்கமுடியாத இடத்தைப் பிடித்திருப்பதுதான் முக்கிய காரணம்.

இந்தியாவில் மட்டும் சுமார் 60 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் புகையிலை சாகுபடியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அங்கு புகையிலை சார்ந்த தொழில்களில் இரண்டு கோடிப் பேர் வேலை பார்க்கிறார்கள். உற்பத்தி வரி மூலம் மட்டும் புகையிலைத் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள். சுமார் 6000 கோடி ரூபாய்க்குக் குறையாமல் அரசாங்கத்துக்கு வருமானம் செலுத்துகிறார்கள். இதற்கெல்லாம் மேலாக Tobacco Lobby எனப்படும் புகையிலைத் தொழில் கூட்டணி பலம் வாய்ந்தது.

விளையாட்டுப் போட்டிகள், இளைஞர்களை ஈர்க்கும் பெரும் இசை நிகழ்ச்சிகள், ஃபேஷன் நிகழ்ச்சிகள், அழகிப் போட்டிகள் போன்றவற்றுக்கு கோடிக் கணக்கில் கொட்டிக் குவித்து 'ஸ்பொன்ஸர்' செய்வதன்மூலம் பெரும் நிறுவனங்கள் நாள் தோறும் புதிய 'புகையாளர்களை' ஊக்குவித்து வருகின்றன.

# குடியைக் கொடுத்து குடிகளைக் கெடுக்கும் அரசியல் பெருச்சாளிகள்

சாதாரணமாக, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்கள் ஓரிடத்தில் கூடும்போது, உனது தொகுதி எப்படி? மக்களுக்கு என்ன செய்திருக்கின்றாய்? அடுத்தமுறை தேர்தல் வந்தால் மக்கள் ஆதரிப்பார்களா? என்று தான் கதைப்பார்கள். ஆனால், சில மலையக அரசியல்வாதிகள் சந்திக்கும் போது பேச்சே மாறிப்போகிறதாம்.

அப்படியானால் இவர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்று கேட்கிறீர்களா?

மச்சான்! நீ பதவிக்கு வந்த பின் எத்தனை சின்ன வீடுகள் செட்அப்பண்ணி இருக்கிறாய். அதில் எத்தனை வீடுகளை நிரந்தரமாக வைத்திருக்கிறாய். இந்த வீடுகளை எல்லாம் எப்படி வளைத்துப் பிடித்தாய் என்பன போன்ற அவருவருப்பான விடயங்கள் பற்றித்தான் பேசிக்கொள்கின்றனர்.

இதைத்தான் அரசியல் நாகரிகம் என்று நினைத்து விடுகின்றனர். யாருக்கு கூடுதலான சின்ன வீடுகள் இருக்கின்றனவோ அவ்வளவுக்கு தமக்கு செல்வாக்கு அதிகரித்திருப்பதாக நினைத்துக் கொள்கின்றனர்.

மலையகத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசியல் வாதிகளின் அட்டகாசங்கள் கட்டுக்கடங்காமல் தலைவிரித்தாட ஆரம்பித்துவிட்டன.

இந்த மலையக அரசியல்வாதிகளில் விரல்விட்டு எண்ணக் கூடிய சிலர் மிகவும் நேர்மையாகவும் மக்கள் சேவையே மகேசன் சேவை என்று சேவை செய்து பின்னர் ஓட்டாண்டிகளாகவும் மாறி வருகின்றனர். அதையும் மறுத்துவிட முடியாது.

ஆனால் பலர் போட்டிபோட்டுக் கொண்டு சின்னவீடுகளின் எண்ணிக்கையை அதிகரித்து இருப்பதோடு ஆங்காங்கே சாராயத் தவறணைகளையும் உருவாக்கி வைத்துள்ளனர்.

அண்மையில் கொழும்பு மாநகரசபையில் சில அதிகாரிகள் ஒன்று கூடி உரையாடிக் கொண்டிருந்தனர். கொழும்பில் ஒரு தமிழ் பெண்மணியின் செல்வாக்கில் பினாமிகளின் பெயரில் நகரின் பல பாகங்களிலும் சாராயத் தவறணைகளுக்கான பார் லைசன்ஸ்கள் இருக்கின்றனவாம். நிரந்தரமாக மாதா மாதம் பல லட்சங்கள் வந்து குவிகின்றனவாம்.

இதைப்போன்றே மலையகத்தில் உள்ள அரசியல் வாதிகளும் இலேசுப்பட்டவர்களா என்ன? சாராய பார் லைசன்ஸ் இல்லாதவர்களே இல்லை என்று கூறும் நிலை வந்துவிட்டது.

ஊவா மாகாண சபை உறுப்பினர் ஒருவரின் செயல் திட்டங்கள் தொடர்பாக சந்திசிரிக்கின்றது. ஊவா எங்கும் நாற்றம் அடிக்கின்றது.

பிரபல தொழிற்சங்கம் ஒன்றின் பெயரை வைத்து மாகாண சபைக்குள் நுழைந்தவர் இவர். மாகாணசபை உறுப்பினர் என்ற பதவி அந்தஸ்தையும் தான் சார்ந்த சங்கத்தின் செல்வாக்கையும் பயன்படுத்தி இவர் சொத்துச் சேர்க்க ஆரம்பித்துவிட்டாராம்.

காலம் காலமாக இவர்களுக்கு வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதி, அவற்றால் செய்யப்படும் வேலைத்திட்டங்களின் மூலம் கிடைக்கும் கமிசன் மற்றும் சந்தோஷம் என்பனவற்றின் மூலம்தான் இவர்கள் சொத்துச் சேர்த்தனர்.

ஆனால் அண்மைக் காலங்களில் அப்பாவி ஏழை தொழிலாளர்களின் வாழ்க்கையைப் பணயம் வைத்தும் அவர்களுடைய உயிர்களைக் குடித்தும் பணம் சேர்க்க ஆரம்பித்துவிட்டனர் என்பதுதான் வேதனைக்குரியது. மலையகத்தின் மூலை முடுக்குகளில் உள்ள சிறு நகரங்கள் மற்றும் கடை வீதிகள் தோறும் சாராயக் கடைகளைத் திறந்து மலையகத்தை சீரழிக்கின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களின் சந்தாப் பணத்தாலும், அவர்கள் போதையில் போட்ட வாக்குகளினாலும் மாகாண சபை உறுப்பினர்களானவர்கள் இவர்கள்.

ஊவா மாகாணத்தில் உள்ள ஒரு தோட்டம்தான் ஹித்தகல் தோட்டம். இந்த தோட்டத்தில் சாராயத் தவறணை ஒன்றைத் திறக்க உறுப்பினர் ஒருவர் தோட்டத் துரைக்கே கடிதம் எழுதிவிட்டாராம்.

வழமையாகவே தொழிற்சங்க வாதிகள் தோட்டத் துரைமாருக்கு கடிதம் எழுதும் போது குடிநீர், மலசல கூடவசதிகள் செய்ய வேண்டும். பாதை அமைக்க வேண்டும். சிறுவர் பாடசாலை அமைக்க வேண்டும். அதற்கு அனுமதி தாருங்கள் என்றுதான் கடிதம் எழுதுவார்கள்.

ஆனால் இந்த மாகாண சபை உறுப்பினர் மிகவும் சின்னத்தனமாக தோட்ட நிர்வாகத்திற்கு கடிதம் எழுதிவிட்டார்.

அதாவது தோட்டத்திற்குள் ஒரு சாராயத் தவறணை திறக்க அனுமதி கேட்டுவிட்டார் என தோட்டத் துரைமாரும் காறித் துப்புகின்றனர்.

ஐயா எமது தோட்டத் தொழிலாளர்கள் மீது உங்களுக்கு அக்கறை இல்லாவிட்டாலும் தோட்ட நிர்வாகி என்ற முறையில் எங்களுக்கு அக்கறை உண்டு. அமைதியாக இருக்கும் எங்கள் தொழிலாளர்களைக் கெடுத்து குடிக்க வைக்க வேண்டாம். நீங்கள் கேட்பது போல் தோட்டத் தொழிலாளர்களின் குடியிருப்புகளுக்கு மத்தியில் சாராயக் கடை திறக்க அனுமதி கொடுக்க முடியாது என்று முகத்தில் அறைந்தது போல் கடிதம் எழுதிவிட்டாராம் அந்த தோட்டத்துரை.

இந்த அரசியல் வாதிகள் தான் மலையகத்தை திருத்தப் பிறந்தவர்கள். குடியைக் கெடுக்கும் குடியை ஒழிப்போம். மது பாவனையை அறவே ஒழிப்போம். கள்ளுக் கடைகளையும் சாராயத் தவறணைகளையும் தீ வைத்துக் கொளுத்துவோம் என்று மேடைபோட்டு கத்துகின்றார்கள்.

இவர்கள் எப்படி என்றால் "நான் கூறும் உபதேசம் ஊருக்கும் உலகிற்கும் மட்டும்தான். உனக்கும் எனக்கும் இல்லை" என்று கூறுவதைப் போல் அமைந்து விட்டது. இந்த சில்லறைகளை அவர்களின் தலைவர்களாலும் திருத்த முடியாது. பக்கவாட்டில் நகரும் நண்டுகள் அவற்றின் குஞ்சுகளை நேராக நடக்கச் சொல்வது எப்படி? இந்தப் போலி வேடதாரிகளுக்கு மக்கள்தான் சரியான பாடம் புகட்ட வேண்டும்.




# மக்களுக்கு டிமிக்கி விடும் மந்திரிகள்

அன்று ஞாயிற்றுக்கிழமை. கடைவீதிக்குப் போய் சந்தைச் சாமான்களை வாங்கிக் கொண்டு வருவதற்காக தணிகாசலம் அண்ணன் கிளம்பினார். செல்லும் வழியில் ஒரு தொழிற்சங்க அலுவலகத்தின் முன் இளைஞர்களும் யுவதிகளும் கூட்டமாக காணப்பட்டனர். தணிகாசலம் அண்ணனைக் கண்டவுடன் இளைஞர் கூட்டம் அவர் பக்கம் திரும்பிவிட்டது.

''என்ன தம்பிகளா காலையிலேயே இந்த சங்கக் காரியாலயத்திற்கு வந்திருக்கீங்க. யாராவது அமைச்சர்மார் வருகின்றனரா?''

''ஆமாங்க அண்ணே தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் இன்று இங்கே வருகின்றாராம். அவரை சந்திக்கத்தான் வந்துள்ளோம்.''

''அப்படியா? மலையக இளைஞர்களை சந்திக்க நம்ப அமைச்சர் ஒருவர் வருகிறார் என்றால் சந்தோஷப்பட வேண்டிய விடயம் தானே''

''என்னங்க அண்ணே நீங்களும் ஒன்றும் புரியாதவர் மாதிரி சொல்லிப்புட்டீங்க''

''என்ன தம்பி நான் ஒன்றும் தப்பா சொல்ல வில்லையே! உங்களைப் பார்க்க அமைச்சர் வருகின்றார் என்றால் அது சந்தோஷம் என்று தானே சொன்னேன்''

''மன்னிக்கனும் அண்ணே! நீங்க சொன்னதில் ஒன்றும் தவறு இல்லை. அமைச்சர் எங்களைப் பார்க்க வரவில்லை. அமைச்சரின் வருகை மிகவும் இரகசியமாக இருந்தது. நேற்று மாலை இந்தப் பிரதிநிதி ஐயாவுக்கு ஒருகப் டீயும் இரண்டு சிகரெட்டும் கொடுத்தோம். அவர் தான் தயங்கி தயங்கி அமைச்சர் வரும் விடயத்தைக் கக்கிவிட்டார்''

''அப்படியா சங்கதி? நீங்கள் பலே கெட்டிக்காரர்கள் தான்'' – என்றார் தணிகாசலம்

''ஆமாங்க அண்ணன்; அமைச்சுப் பொறுப்பை ஏற்ற நாள் முதல் இந்த மாதம் நியமனம், ஜனாதிபதியுடன் பேசிவிட்டோம், ஜனாதிபதி அனுமதி வழங்கிவிட்டார், அப்படி இப்படி என்றார்கள்''

''அதுவும் சரிதானே தம்பி. தனிப்பட்ட முறையில் இவர்களால் எப்படி நியமனம் வழங்கமுடியும். அது அதறகுப் பொறுப்பான அமைச்சுகள் ஊடாகத்தானே நியமனம் வழங்க முடியும்''

''அண்ணே! அண்ணே! முன்பு அமைச்சர் சி.பி.ரத்னாயக்க தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராக இருந்தபோது கல்வி அமைச்சுக்குப் பொறுப்பான ஜனாதிபதியின் அனுமதியுடன் தானே நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுத்தார்''

''அப்படி நியமனம் வழங்க முடியாது நாங்கள் அரசுடன் ஒட்டிக் கொண்ட பின் எங்கள் கைகளாலேயே நியமனங்கள் வழங்கப்பட வேண்டும் என்று சொல்லி மண்ணை அள்ளிப் போட்டுடோமே தம்பி''

''அதைத் தாங்க அண்ணே இப்ப கேட்கின்றோம். இதைப் பாருங்க. இது அவ்வளவும் நம்ப அமைச்சர் பதவி ஏற்ற பின் விட்ட அறிக்கைகள். அதில் என்ன சொல்லி இருக்கார் பாருங்க''

''தம்பி இப்ப நம்ப அமைச்சரே டம்மி. அவரால் எதையும் செய்ய முடியாது.


கடைசியில் என்ன சொல்லி இருக்கார் பாருங்க. மே மாதம் 15ஆம் திகதிக்குள் தோட்டப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களாகவும், அரச அலுவலகங்களில் முன்னரங்க தொடர்பாடல் அலுவலர்களாகவும் நியமனம் பெற்றுக் கொடுக்கப்படும்'' என்று ஆணித்தரமாக கூறி உள்ளார். இப்ப என்னடா என்றால் ஜூன் மாதமும் வந்து பத்து நாளாச்சி. இன்னும் ஒன்றையும் காணோம்''

''ஓகோ அதுக்காகத்தான் இப்ப கூட்டமாக வந்து நிற்கின்றீர்களோ?''

''ஆமாங்க அண்ணே! இந்த அமைச்சர் இரண்டில் ஒன்று கூற வேண்டும் நல்லகாலம் பொறக்குது, நல்ல காலம் பொறக்குது. என்று குடுகுடுப்பை காரன்க் மாதிரி ஆறுதல் வார்த்தைகளைக் கூறி தொடர்ந்தும் எங்களை ஏமாற்ற வேண்டாம். இவர்கள் பேச்சை நம்பி நாங்க வேறு வேலைகளுக்கும் முயற்சி பண்ணாமல் கிழவன் கிழவியாகி எங்க அப்பா அம்மா மாதிரி தோட்டத்தில் கொழுந்து எடுக்கவும் கவ்வாத்து வெட்டவும் போக வேண்டியது தானா?''

''அதுதானே தம்பி நம்ம தலைவர்களின் ஆசையும். மலையகப் பிள்ளைகள் உயர் படிப்பு படிக்க வேண்டும்; அரசாங்க உத்தியோகம் பார்க்க வேண்டும் என்று கூறுவது எல்லாம் வெறும் மேடைப் பேச்சுமட்டும் தான். ஆனால் அவர்களுடைய ஆசை எல்லாம், தோட்டத்துப் பிள்ளைகள் தோட்டத்தை விட்டு வெளியே போகக்கூடாது. அப்பா அம்மா மாதிரி தொழிலாளர்களாக இருக்க வேண்டும். அவர்களும் சந்தாப்பணம் கட்ட வேண்டும் என்பது தான். எப்படியோ நாங்கள் விழித்துக் கொண்டோம். அமைச்சர் வந்தவுடன் கழுத்துப் பிடியாக பிடித்துக் கொள்ள வேண்டும்'' என்று உணர்ச்சி வசப்பட்டவராகக் கூறினார் தணி அண்ணன்.




அப்பொழுது ஒரு மோட்டார் சைக்கிள் வாலிபன் சங்கக் கட்டடத்திற்குள் சென்றான். சென்ற சில நிமிடங்களில் சங்கக் காரியாலயத்தின் கதவு ஜன்னல்கள் எல்லாம் மூடப்பட்டன. காரியாலயத்தில் இருந்தவர்கள் எல்லோரும் இரண்டு வாகனங்களில் ஏறிப் போய்விட்டனர்.

''என்ன தம்பி அமைச்சர் இங்கே வருவதாகக் கூறினீர்கள் இப்போ என்னடா என்றால் சங்கக் காரியாலயத்தில் உள்ளவர்கள் எல்லோரும் பதறியடித்துக் கொண்டு ஓடுகின்றார்கள்?''


அண்ணே! நடக்க வேண்டிய எல்லாம் நடந்து போச்சி. அமைச்சர் டவுன் எல்லைக்கு வந்து விட்டார். ஆனால் இளைஞர்கள் இங்கே கூட்டமா இருப்பதை எந்தப் பாவியோ டெலிபோன்ல சொல்லிவிட்டிட்டாலுங்க. அதுதான் அமைச்சர் இங்க வராம வேற பக்கம் போயிட்டாராம். அது தான் எங்க கூலிக்கு எல்லாம் இப்படி ஓடுராங்க!''

இப்ப புரிஞ்சிக்கிட்டீங்களா நம்ப மலையக மந்திரிகளின் மாபெரும் சேவைகளை? மக்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் ஓடி மறைவதுதான் அவர்களின் சாதனை.

# தாய்க்காக சினிமா வாய்ப்பை உதறித்தள்ளிய சொயிப் அக்தர்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னணி பந்துவீச்சாளர்களில் குறிப்பிடத் தக்கவர் சொயிப் அக்தர். அதிவேகமாக பந்து வீசுவதாலும், இவரது சொந்த ஊர் ராவல் பிண்டி என்பதாலும் இவருக்கு 'ராவல் பிண்டி எக்ஸ்பிரஸ்' என்ற செல்லப்பெயரும் உண்டு.

முரட்டுத்தனம் மற்றும் சக வீரர்களிடம் மட்டுமன்றி அணியின் தலைவரிடம்கூட முறைத்துக் கொண்டது போன்ற புகார்கள் காரணமாக அக்தர் சமீப காலமாக அணியிலிருந்து ஓரங்கட்டப் பட்டு வருகிறார். வெளிநாடுகளில் சென்று விளையாடப்போகும் போது மதுஅருந்தும் இடங்களுக்கும், நடன விடுதிகளுக்கும் ஆர்வமுடன் செல்கிறார் எனவும் இவர் மீது புகார்கள் கூறப்பட்டன.




இந்த நிலையில், பிரபல இந்தி பட இயக்குனர் மகேஷ் பட் தான் எடுக்கும் 'கேங்ஸ்டர்' என்ற படத்தில் 'தாதா' வேடத்தில் நடிக்க அக்தருக்கு அழைப்பு விடுத்தார். அக்தருக்கும் சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற ஆசை இருந்தது. ஆனால் தனது ஆசையை மறைத்துக் கொண்டு – சினிமாவில் நடிக்க விரும்பவில்லை. கிரிக்கெட் தான் எனது முதல் வேலை. விரைவில் பாகிஸ்தான் அணியில் இடம் பிடிக்க வேண்டும் என்பது தான் எனது லட்சியம். – என்றெல்லாம் வசனம் பேசினார். இதற்கு பின்னணியில் ஒரு காரணமும் இருக்கிறது.

அதாவது அக்தருக்கு சினிமாவில் நடிக்க வேண்டும் என்று கொள்ளை ஆசை உண்டு. சில மாதங்களுக்கு முன்பு இந்தியா வந்திருந்தபோது தனது ஆசையை சில இந்தி சினிமா நண்பர்களிடம் கூறியிருக்கிறார். இந்தத் தகவல் மகேஷ்பட் காதுக்கும் எட்டியது. எனவே அவர் தயாரிக்கும் படத்தில் அடிதடி கும்பல் தலைவன் வேடத்துக்கு அக்தரை நடிக்க வைக்க விரும்பினார். இதனால் உடனே கராச்சி சென்று அக்தரின் முகாமையாளரைப் பார்த்து இதுபற்றி பேசினார். ஆனால் அக்தர் இந்த வாய்ப்பை மறுத்துவிட்டார். கிரிக்கெட்டில் மட்டுமே இனி கவனம் செலுத்துவேன், சினிமாவில் நடிக்க வேண்டும் என்ற ஆசை எல்லாம் கிடையாது என்று கூறினார். இவ்வாறு அவர் கூறுவதற்குக் காரணம் அவரது தாயாரே என தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

அக்தர் விளையாட்டுப்பிள்ளையாக இருப்பது அவரது அம்மாவுக்கு ஏற்கனவே தெரியும். பல முறை அக்தரை இதற்காக கண்டித்தும் இருக்கிறார். குறிப்பாக அக்தர் எந்த பெண்ணின் வலையிலும் விழுந்துவிடக் கூடாது என்பதில் அவரது தாயார் மிகக் கவனமாக இருக்கிறார்.

இந்த நிலையில், சினிமாவில் நடிப்பது என்றால் அக்தருக்கு, பெண்களுடன் பேசிப் பழக நிறைய வாய்ப்புக் கிடைக்கும். இதில் எந்த பெண்ணிடமாவது அக்தர் மயங்கி விடக்கூடும் என்ற பயம் அவரது அம்மாவுக்கு இருந்தது. இதனால் தான் அவர் சினிமாவில் நடிக்க அக்தருக்கு தடை போட்டுவிட்டார் என அக்தருக்கு நெருங்கிய வட்டாரங்கள் கூறுகின்றன.

தாய் சொல்லைத் தட்டாத தனயனாக இருக்கும் அக்தரும் இதனாலேயே சினிமா வாய்ப்பை உதறித்தள்ள வேண்டியதாயிற்று.

# இன்சமாமின் வெற்றி ரகசியத்தை கூறுகிறார் பாக். வீரர் அப்துல் ரசாக்

இந்தியாவில் ஒருநாள் தொடரை மீட்ட கையோடு, மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக 3–0 என்ற கணக்கில் ஒருநாள் தொடரை வென்று புதிய எழுச்சி பெற்றிருக்கிறது பாகிஸ்தான் அணி.



இந்நிலையில், அணித்தலைவர் இன்சமாமின் அணுகுமுறையை மற்றநாட்டு வீரர்களும், ரசிகர்களும் புகழ்ந்து தள்ளுகிறார்கள். இன்சமாமின் வெற்றியின் ரகசியம் என்ன என்பது பாகிஸ்தான் வீரர் அப்துல் ரசாக் கூறியதிலிருந்தே தெரியவந்தது. இதுபற்றி அவர் கூறியதாவது:–

"ஒரு தலைவர் அப்படி இருக்க வேண்டும், இப்படி இருக்க வேண்டும் என்று கூறுவார்கள். ஆனால், என்னைப்பொறுத்தவரை இன்சமாமின் வெற்றிக்கு அவருடைய நட்பான அணுகுமுறையே காரணம். 'சீனியர்', 'ஜூனியர்' என்று பார்க்காமல் எல்லோருடனும் நட்புடன் பழகுவார். ஒவ்வொரு வீரருடனும் மனம்விட்டுப் பேசுவார். எந்த விடயம் என்றாலும் அணியின் மற்ற வீரர்களுடன் கலந்தாலோசித்த பிறகே முடிவெடுப்பார்.

"நான் அணித்தலைவன்; என் விருப்பப்படி தான் முடிவுகளை எடுப்பேன்; அணியின் வெற்றிக்கு நான் மட்டுமே பொறுப்பு என்று அவர் ஒருபோதும் சிந்தித்ததில்லை. ஆனால், முன்னாள் பாகிஸ்தான் அணித் தலைவர்களில் பலர் அணியின் வெற்றிக்கு முழுக்காரணமும் நாங்கள் தான் என்று பெருமைப்பேசிக் கொண்டிருப்பார்கள். இதற்கு நேர்மாறாக இன்சமாம் எப்போதும் அணியின் மற்ற வீரர்களைப் பற்றியே பேசுவார்.''– என்றார் அப்துல் ரசாக்.

# வைன் விற்கும் டெனிஸ் வீரர்


முன்னாள் பிரெஞ்ச் பகிரங்க டெனிஸ் சம்பியன் தோமஸ் மெஸ்டர். இப்போது வெற்றிகரமான வைன் வியாபாரியாக இவர் இருக்கிறார். டெனிஸ் மட்டையைப் பிடித்த கைகள் இப்போது வைன் போத்தல்களை விற்பனை செய்கின்றன. டெனிஸில் இருந்து ஓய்வு பெற்றதும் 'டாம்ஸ்' என்ற பெயரில் அவர் ஹோட்டல் ஒன்றைத் தொடங்கினார். தொடர்ந்து 'மாஸ்டர் லாண்ட்' என்ற பெயரில் டெனிஸ் பயிற்சி நிலையம் ஒன்றையும் இவர் நடத்தி வருகிறார்.

தனது நண்பர் ஒருவர் தயாரிக்கும் வைன் இவருக்கு மிகவும் பிடித்துப்போனதால் அதை மொத்தமாக வாங்கி 'டாம் வைன்ஸ்' என்ற பெயரில் விற்பனை செய்து வருகிறார். இந்த தொழிலும் சூப்பராக நடக்கிறது என்கிறார் தோமஸ்.

# அந்ரே அகாஷியின் மொட்டை ரகசியம்

அமெரிக்க டெனிஸ் வீரர்களில் முன்னணியில் திகழ்பவர் அந்ரே அகாஷி.

35 வயதான இவர், இப்போதும் மைதானத்தில் சுறுசுறுப்பாக ஓடியாடிக் கொண்டு இருக்கிறார். வெற்றியோ – தோல்வியோ முன்னணி கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் கலந்துகொண்டு ஆடி வருகிறார். தலை முடியை மொட்டை அடித்துக் கொண்டு இருக்கும் அகாஷி, தனது மொட்டைத் தலையின் ரகசியம் என்ன என்று சமீபத்தில் தெரிவித்தார்.



பிரெஞ்ச் பகிரங்க டெனிஸ் ஆட்டத்தின் முதல்சுற்றில் பின்லாந்து வீரரிடம் தோற்றப் பிறகு தனது தலையைத்தடவிக்கொண்டே அகாஷி இது பற்றிக் கூறினார்.

"நான் இளைஞன் அல்ல. எனது தலைமுடியை வளர விட்டால் எனக்கு வயதாகி விட்டது தெரியும். எனது தலைமுடி நரைத்து விட்டது என்பதை வெளியில் காட்டக்கூடாது என்பதற்காகவே எப்போதும் மொட்டை அடித்துக் கொள்கிறேன்'' என்றார்.

## விளையாட்டுச் செய்திகள்!

ஜெனிரியா

# ஷூமாக்கர் சகோதரர்களிடையே 'லடாய்'

கார்பந்தய உலகில் முன்னணியில் இருக்கும் மைக்கல் ஷூமாக்கர், ரால்வ் ஷூமாக்கர் சகோதரர்களிடையே மனப் புகைச்சல் உண்டாகியிருக்கிறது.



சமீபத்தில் நடந்த மொனாக்கோ கிராண்ட் பிரிக்ஸ் கார் பந்தயப்போட்டியில் தன்னை முந்திச் சென்றுகொண்டிருந்த தம்பி ரால்வ் ஷூமாக்கரை, அண்ணன் மைக்கல் ஷூமாக்கர் மிகவும் ஆபத்தான முறையில் 'ஓவர்டேக்' செய்தார்.

ரால்வ் தடுப்புச்சுவர் அருகே சென்று கொண்டிருந்தபோது, அவர் சென்ற காருக்கும் அந்தச் சுவருக்கும் இடையேயுள்ள மிகச்சிறிய இடைவெளிக்குள் புகுந்து அவர் 'ஓவர்டேக்' செய்தார். இருகார்களும்கொஞ்சம் உரசியிருந்தாலும் இருவர் உயிருக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கும். தனது அண்ணனின் இந்த ஆபத்தான விளையாட்டை நினைத்து கொதித்துப் போயுள்ளார் ரால்வ்.

ஜேர்மன் தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இந்த சம்பவம் பற்றி அவர் கூறினார்.

"சில சமயம் எனது அண்ணன் மைக்கல் தன்னையே மறந்து விடுகிறார். சிலசமயம் அவர்தன் மூளையை 'ஓவ்' செய்து விடுகிறார் என்று நினைக்கிறேன். லேசாக எங்கள் டயர் உரசியிருந்தால் கூட இருவரில் ஒருவர் உயிரோடு இருந்திருக்கமாட்டோம். இருவரில் ஒருவருக்கு தலைதுண்டாகியிருக்கியிருக்கும். அதைநான் விரும்பவில்லை என்பதால் தான் என்காரை கொஞ்சம் விலக்கி ஓட்டினேன்.

"ஒருவர் வாழ்க்கையை ஒருவர் அழிப்பதற்காக போட்டியில் கலந்துகொள்ளவில்லை. போட்டியில் வெல்லுவது ஒரு ஆர்வம் மட்டுமே.'' – என்று பொரிந்துத் தள்ளினார் ரால்வ்.

அவர் இப்படிக் கூறியிருப்பது பற்றி மைக்கல் ஷூமாக்கரிடம் கேட்டபோது – "நான் வேண்டுமென்றே எதையும் செய்யவில்லை.'' – எனக் கூறி முடித்துக் கொண்டார்.



பாரிசில் நடந்த பிரெஞ்ச் பகிரங்க டெனிஸ் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயின் வீரர் ரபேல் நாடல் சம்பியன் பட்டம் வென்றார். இளம் வயதில், அறிமுகத் தொடரில் பெற்ற இந்த அரிய கிண்ணத்துடன், பாரிசில் உள்ள புகழ்பெற்ற 'ஈபிள் டவர்' முன்பாக 'போஸ்' தருகிறார் நாடல்.

# கவிதைப் பூனல்

## உன்னால்

உன்
பார்வைகள்
பட்டுத்தான்
என் காலைகள்
விடிகின்றன.
உன்
வண்ணமுகம்
கண்டுதான்
என் எண்ணங்கள்
மலர்கின்றன.
உன்
வார்த்தைகள்
கேட்டுத்தான்
என் உதடுகள்
திறக்கின்றன.
உன்
புன்னகை
கண்டுதான்
என் பெண்மை
விழிக்கின்றது.
உன்
நினைவுகள்
ஜனனித்த பின்தான்
என் கனவுகள்
கரைசேர்கின்றன.
ஆனால்...
உன்
மௌனங்கள்
மட்டும்தான்
என்னை
மரணிக்க
அழைக்கின்றன.

*யஸ்மினா,*
*மீசாலை.*

## ஆண்மைக்கு இலக்கணம்

உறவுகளையெல்லாம்
ஒதுக்கி
உன்னையே
உறவினனாய் பற்றி
உடன் வந்தாள்
ஒருத்தி.
வஞ்சியவளிடமா
உன் வயிறு கழுவ
வரதட்சனை
கேட்கிறாய்?
இது
கேவலமில்லையா?
வன்மையானவன் நீ.
மென்மையாளிடமா
கையேந்தி நிற்பது?
வீரமுள்ள
ஆண் மகனே!
தன் மானம்
காப்பதற்கு
ஒரு கோடாரியும்
கயிறும் போதும்!
உன் ஆண்மைக்கதுவே
இலக்கணம் ஆகும்!!!

இளந்துளிர் நசார்,
இன்னாநகர்.

## மரணித்துப்போன உண்மைகள்

சில உண்மைகள்...
பல கற்பனைகள்...
சொல்ல நினைத்தும்
சொல்ல முடியாதவைகள்.
சிலர் அறிந்தும்
பலர் அறியாதவைகள்...
பாசத்துடன்
வந்துபோன
சில பாசாங்கு மனிதர்கள்...
நட்புடன் உலாவி வந்த
நடைபிணங்கள்...
இவை
மறக்கவும் நினைக்கவும்
மனமின்றி
மரணித்துப்போன
சில உண்மைகள்.

ர்.ஜெசி,
கரும்புள்ளியான்.

## நினைவு

விளக்கை
அணைத்த பின்பும்
எரிந்துகொண்டிருந்தது
அவள் நினைவு.

## மது

நான் அடிக்கடி
மது அருந்துவேன்
அவள் என்
விழிகளில் இருப்பதால்.

ப.வினோதன்,
முள்ளியவளை.

## உறவுகள்

உறவுகள் எல்லாம்
உன்னதமானவையல்ல.
அவை பணம் எனும் இழையில்
பின்னப்பட்டவைகள்.

தி.றெயி,
கரும்புள்ளியான்.

## உளத்துயர்

விடுதலை
எனும்
விடியலுக்காய்
ஈர
விழிகளுடன்
காத்திருப்பு
தொடர்கிறது.
வரையறையின்றி
வயதும்
வலிபமும்
வீணாய்ப்போக
எம் வரவை
சொந்த
பந்தங்கள்
எதிர்பார்த்து
எதிர்பார்த்து
சோர்ந்து போக
கண்ணீருடன்
தினம்
காலத்தைக்
கடத்துகிறோம்.
நம்பிக்கை
யாவும்
அற்றுப்போக
துக்கமும்
துயரமும்
எமை
அழுத்த
செய்வதறியாது
அழுகின்றோம்.
ஆயிரக்கணக்கில்
பலர் இங்கு
வந்துபோக
வடித்தெடுக்கப்பட்ட
சிலைகளாய்
நாமிங்கு
விதியின்
பிடியில் சிக்கி
பயங்கரவாதிகளாய்
முத்திரை
குத்தப்பட்டு
பயங்கரவாத
தடுப்புக்காவலில்
சிறை
எனும்
விதியின்
விலாசத்தில்
வாழ்கிறோம்.
நீண்டகால
வதையும்
நீடிக்கிறது.

ஜோ.கிறிஸ்டி,
களுத்துறைச்சிறை

## எங்கும் நீயே

மழைத்துளி
ஒவ்வொன்றையும்
இரசித்துப் பார்த்தேன்
ஒவ்வொரு
துளிகளிலும்
என் இரு
விழிகளில்
தெரிந்தவள்
நீயடி.
மேகக் கூட்டங்கள்
ஒன்றையொன்று
மோதிப்போனதை
இரசித்துப்பார்த்தேன்
நானும் நீனும்
சிறு சிறு
சண்டைகள்
பிடித்தது
போலல்லவா
இருந்தது?
யன்னலோரம்
வண்ண நிலவை
எட்டிப் பார்த்து
என் விழிகள்
நிலவின் ஒளியில்
யொலித்தது
மங்கை உன்
வதனம்தான்
தேடித்தேடிப்பார்த்தேன்.
எங்கும் நீயாகவே
காண்கிறேன்.

*எஸ்.கஜன்,*
*பூநகரி.*

## பெண்

பெண்ணென்று
பிறந்து
இந்த
ஏழை படும்
துன்பத்தை
யார்
துடைப்பார்?
எண்ணற்ற
கற்பனையை
ஏராளம் சுமந்து
பள்ளத்தில்
விழுந்த
பாவி இவளின்
அளவற்ற
ஆசைகளை
குழி தோண்டி
புதைக்கலாமோ
இவ்வுலகம்?

## காதலி

**விழிகளின் வழியாக
என் இதயத்துள்
புகுந்து-என் உயிரையும்
தூக்கத்தையும் தவிக்கவிடும்
என் பிரியமான எதிரி நீ!
என்னிடம் விலைபேசி
விற்பதற்கு ஒன்றுமில்லை
சோகங்களையும்
சுமைகளையும் தவிர!**

அ.சுரேஷ்காந்தி,
முருகந்த நகர்.

## எனக்காக மன்றாடு!

வார்த்தையில்லா
கவிதையாய்
எனது காதல்
ஊமையாய்க் கிடக்கிறது.
சின்னச்
சின்னதாய்
ஆசை வளர்த்து
என்னைச்
சின்னாபின்னமாக்கிய
உனக்கு
சிறிது கூட
இரக்கமில்லையா
கண்மணி?
வானத்தில் நீ
என்னைப் பறக்க
அழைத்தபோது
நான்
நினைக்கவில்லை
உயரச் சென்ற பிறகு
என் சிறகுகளை
நீ முறிப்பாய் என்று!

ஆறு வயதில்
தொடங்கிய
அ முதல்
உனை நினைத்து
மெய் மறக்கும்
வரை படித்த
மெய்யியல் வரை
ஞாபகமிருக்க
இதயத்தில்
பச்சை குத்திய
உன்
ஞாபகங்களை
கழற்றி எறிவது எப்படி?
உன்
ஞாபகங்கள்
என் கால்
செருப்புகள் அல்ல
கழற்றி எறிவதற்கு!
அவை என் கால்கள்.
சரி ஆசைகள்
நிறைவேறாத
இவனின்
கடைசி ஆசைகள்
இரண்டு.

பணத்துக்காக
கைப்பிடித்தவனையாவது
கடைசிவரை
கணவனாய்
ஏற்றுக்கொள்.

அடுத்தது
மீண்டும்
ஒருமுறை
காதலெனும் தப்பை
நான்
செய்யாதிருக்க
உன்
கர்த்தரிடம்
எனக்காக
மன்றாடு!

*அன்டனி பெர்ணான்டோ,*
*கண்டி.*

# சிரிக்க சிந்திக்க சிப்ஸ்

*அமெரிக்காவில் சியாட்டில் நகரில் வசிப்பவர் பாவ்லா ரோமர். இவர் ஒரு பூனையை வளர்த்து வந்தார். 'யோபி' என்று அழைக்கப்பட்ட அந்தப் பூனையை பக்கத்து வீட்டில் வசிக்கும் வாலஸ் கிரேயின் நாய் கடித்துக் குதறிக் கொன்றது.

இதைத் தொடர்ந்து வாலஸ் கிரே மீது, பாவ்லா ரோமர் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார். பூனையின் உயிருக்கு 15 லட்சம் ரூபாவும், அதன் இழப்பால் ஏற்பட்ட மன உழைச்சலுக்கு 7 லட்சம் ரூபாவும் இழப்பீடு தர வேண்டும் என்று மனுவில் கோரி இருந்தார்.

வழக்கு விசாரணையின்போது வாலஸ் கிரே தன் கவனக் குறைவால் பூனையை நாய் கடித்ததை ஒப்புக்கொண்டார். இதைத் தொடர்ந்து 22 லட்சம் இழப்பீடு கொடுக்கும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

*பிரேசில் நாட்டில் ஒரு குத்துச்சண்டைப் போட்டி நடந்தது. இதில் மார்கோஸ் டு வார்ட்டேயும் இம்மானுவல் டாவியும் சண்டை போட்டனர். டாவி ஆக்ரோஷமாக சண்டை போட்டு முன்னணியில் இருந்தார். 3 ஆவது சுற்றுச் சண்டை நடக்கும்போது மார்க்கோஸ் மேலும் காயம் அடையாமல் தடுக்க நடுவர் நார்பெர்ட்டோ பபிலி மெனோ சண்டையை நிறுத்தினார்.

இதை மார்க்கோஸ் விரும்பவில்லை. அவர் மனைவி லூசியானாவும் விரும்பவில்லை. அவர் குத்துச் சண்டைக் களத்துக்குள் குதித்து நடுவர் பபிலி மெனோவைத் தாக்கினார்.

இதைத் தொடர்ந்து நடுவர் பொலிஸில் புகார் செய்தார். பொலிஸார் லூசியானா மீது கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்து இருக்கிறார்கள்.

*டெங்குவுக்குக் காரணமான ... என்ற நுளம்புகளுக்கு ... என்ற பெயரும் உண்டு. காரணம் இந்த நுளம்பு பகல் நேரத்தில் குறிப்பாக முற்பகலில்தான் கடிக்கும். குழந்தைகளுக்கு இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் தொடர்ந்தால் அவர்களை உடனே டெங்கு பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும்.

• தண்ணீரை நாள் கணக்கில் வீட்டுக்குள்ளேயே டெங்கு வைரஸை பரப்பக் கூடிய நுளம்புகள் வளரக்கூடிய வாய்ப்புகள் அதிகம். இதற்கு மேலாக தேங்கி நிற்கும் மழை நீரும் நாட் கணக்கில் சுத்தப்படுத்தப்படாமல் தெருவில் தேங்கிக் கிடக்கும் குப்பை கூளங்களும் நுளம்புகள் பெருகுவதற்கு பிரதான காரணங்களாகும்.

*இன்ப நிலை நீடிக்க வேண்டும் என்றால் உணவு, உறக்கம், உழைப்பு, உடலுறவு, எண்ணம் ஆகிய ஐந்தையும் அலட்சியப்படுத்தவோ மிகையாகவோ, அல்லது முரணாகவோ உபயோகிக்கக் கூடாது.

*அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் அலுவலக நாற்காலியில் அமர்ந்தார் இந்தியாவின் அஜித் மத்யூ என்னும் தொழிலதிபர்.

கேரளாவைச் சேர்ந்த அஜித் ஏழைகளுக்கு உதவும் உயர்ந்த உள்ளம் கொண்டவர். அமெரிக்காவின் டெலவேர், கரிபியன் தீவு ஆகியவற்றில் இவர் செய்த சேவையைப் பாராட்டி இவருக்கு 'வைட் ஹவுசில்' சிறப்பு விருந்து அளித்தார் ஜோஜ் புஷ். விருந்துக்குப்பின்னர் வைட் ஹவுஸில் 'உள்ள' தனது அறைக்களைப் பார்க்கும்படியும் புஷ் அஜித்தை அழைத்தார். தான் அமரும் நாற்காலியைக் காட்டி அதில் அமர ஆசையா என்றும் கேட்டார் அவர். அஜித் திடுக்கிட்டார். உடனே சிரித்தபடி அவரைப் பிடித்துத் தன் நாற்காலியில் இருத்தி விட்டு விழுந்து விழுந்து சிரித்தார் புஷ்.

*நாம் பிறந்ததில் இருந்து எம் உடலில் வளராத உறுப்பு கண் விழிகள் மட்டுமே.

*ஒரு பட்டாசு வெடிக்கும்போது அதன் உட்பகுதி சராசரியாக 29 துண்டுகளாக வெடித்துச் சிதறுமாம்.



## HOTEL WESTEERN (PVT) LTD



Danial Banquet Hall (டேனியேல் பென்குவட் மண்டபம்) முற்றும் குளிரூட்டப்பட்ட 400 பேர் அமரக்கூடிய திருமண மண்டபம், தரமான உணவு வகைகளுடன் கூடிய சிறந்த உபசரிப்பு சேவை, இலங்கை சுற்றுலா சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விருந்தினர்களுக்கான இலவச காப்புறுதி.

சிறந்த பராமரிப்பு சேவையுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகள், தொலைபேசி, I.D.D., தொலைக்காட்சி, மினிபார், ரெஸ்ரோரண்ட், பார், விருந்துபசார மற்றும் மாநாட்டு மண்டபம், விமான நிலையத்துக்கான போக்குவரத்து, வாடகை கார் மற்றும் கடன் அட்டை வசதி போன்ற உன்னத சேவைகள்.

No. 35, Frankfourt Place, Bambalapitiya, Colombo - 04.
T.P: +94 11 2507161, +94 11 2507162, +94 11 2507163, +94 11 4518485
Fax: +94 11 4518481 E-mail: info@hotelwesteern.com
Website: www.hotelwesteern.com

## திருகோணமலையில்... சுடர் ஒளி உதயன் விளம்பர பணிமனை

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.

## GREEN PALACE EMPORIUM

யாழ். நகரில் நவநாகரிக ஆடைத் தெரிவிற்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்..



அழகிய படவைத் திணுசுகளின் குளிரூட்டப்பட்ட சாம்ராஜ்யம்

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன ஆடைகள் குறைந்த விலையில்

நிறைந்த ரகங்கள்! நிகரில்லாத் தரங்கள்!

பரமி வீதி, திருநெல்வேலிச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## ரூபா. 7/= மட்டுமே PC

- PP / ID படங்கள் துரித சேவை
- டிஜிட்டல் அல்பம்
- டிஜிட்டல் ஸ்டுடியோ

## ஹில்ஸ்
கலர் போட்டோ (பிரை) லிமிடட்
298 - 1/ 4, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு – 06. Ph: 2508430

## குமரகுரு

மீண்டும் புதுப் பொலிவுடன்.....

உங்களின் இக்காலத் தெரிவுக்கு...





புடைவை அழகுப்பொருள் வாணிபம்

KUMARAKURU TEXTILE & FANCY HOUSE
Yarl Road, Kilinochchi. Tel: 021 228 5971

குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ் சாலை, கிளிநொச்சி.

## EXPOAIR எக்ஸ்போ ஏயார்

your friend in the skies...
வானத்தில் உங்கள் நண்பன்...



யாழ் - கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 349999/ 8888
கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290/ 91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com





இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரஹெம்பா பிளேஸ், 1/1ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தினால் 2005, ஜூன் 12 ஆம் திகதி வெளியிடப்பட்டது.